என் அன்பு மந்திரம்

1

மழை உற்சாகமாக பெய்து கொண்டிருந்தது. வலிவு மிக்க தன் கரங்களால் பூமியை துளைத்து விடுகிற ஒரு வேகத்தோடு நான்காவது நாளாக, சிறிது கூட இடைவெளியின்றி அட்டகாசமாய் பெய்து கொண்டிருந்தது.

குடிசைக்கு வெளியே உள்ள காட்டில், பதினைந்து சிறுவர்கள் மரத்தோடு ஒட்டியபடி, குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் பலர் ராஜகுமாரர்கள், சிலர் அந்தணர்கள். பதினைந்து வயதிற்கும் கீழாக இருக்கின்ற அந்த அழகிய சிறுவர்கள் எப்போது மழை நிற்கும் என்று ஏக்கத்தோடு அடிக்கடி வானம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சற்று வெளுப்பது போல் இருந்த வானம், மறுபடியும் வேகமாக கறுக்கத் துவங்கியது. வெறுமே சாதாரண மழையாக இருந்தது. கனத்த மழையாயிற்று. பாரம் தாங்காத கிளைகள் சில ஒடிந்து விழுந்தன. பறவைகள் சப்தமோ மிருகங்கள் சப்தமோ எதுவும் கேட்காமல்,

அந்த கானகத்தில் மழை பூமியைத் தாக்கும் சப்தம் மட்டுமே அதிகம் கேட்டுக் கொண்டிருந்தது.

இது மழை நாள். மழை வருமென்று எல்லோருக்கும் தெரியும். ஆயினும் எந்தப் பாதுகாப்பும் செய்து கொள்ளாமல் மழை வந்தால் மழையை வரவேற்று ஏற்றுக் கொள்வது என்கிற ரீதியில் தயாராக இருந்தார்கள். ஆனாலும். மழை நான்காவது நாளாகப் பெய்வது வேதனையாகத்தான் இருந்தது

குளிர் நடுங்கிற்று. கண்கள் எரிந்தன. உடம்பு சூடு அதிகரித்து தலையில் ஒரு குறுகுறுப்பை ஏற்படுத்தியது. ஒண்டிக்கொண்டே இருந்தால் இந்த உடம்புச்சூடு அதிகம் தான் ஆகும். எனவே, நன்கு மழையில் நனைய வேண்டும் என்று அங்குள்ள சில மாணவர்கள் சொன்னார்கள்.

ஆனால், பலருக்கு மழையில் நனைய விருப்பமில்லை.

அங்கிருந்த மாணவர்களில் நல்ல லட்சணமாய்இருந்த ஒரு மாணவன், அருகே தன்னை அணைத்துப் பிடித்திருக்கும் சற்று பெரிய மாணவனின் முகத்தை நோக்கிக் கேட்டான்.

"உன் உடம்பு சூடு இல்லாவிட்டால் நான் செத்துப் போயிருப்பேன். உன் தகப்பனார் ஏன் கல்லாலான மாளிகை கட்டிக்கொள்ளவில்லை. எதற்கு குடிசை கட்டிக் கொண்டு வெறும் ஓலைச் சுவடிகளை பரணில் வைத்துக் கொண்டு பாதுகாத்துக் கொண்டிருக்கிறார் நம்மை ஏன் மழையில் நனைய விடுகிறார். தமக்கு என்று ஒரு கூடு இருக்கலாம் அல்லவா. குடிசைக்கு பதிலாய் நல்ல உயர்ந்த மாளிகைகள் இந்த கானகத்தில் கட்டியிருக்கலாம் அல்லவா.

ஒரு குருகுலம் கல்கோட்டைக்குள் நடக்கக் கூடாது என்று யார் எழுதி வைத்திருக்கிறார்கள். வெட்ட வெ

யில்தான் நடக்க வேண்டும் என்று ஏதும் விதி இருக்கிறதா என்ன?

இந்தக் குளிர் தாங்கவேயில்லை. எனக்கு படிப்பு போதும் என்று தோன்றுகிறது. மழை நிற்கிறதோ நிற்கவில்லையோ, நான் மேற்கே நகர்ந்து என் தேசமான பாஞ்சாலத்திற்கு போய்விடப் போகிறேன்.

அங்கும் மழை இருக்கும். ஆனால், எங்கள் துருபத நாட்டில் அற்புதமான மாளிகைகள் இருக்கின்றன. மாளிகைக்குள் பெரும் மரக் கதவுகளை அழுத்திச் சார்த்திவிட்டால் போதும். மழை பெய்கிற சத்தம் கூட உள்ளுக்குள் கேட்காது. அத்தனை கதகதப்பாய் இருக்கும். ஒட்டகக் கம்பளியும் கவரிமான் கம்பளியும் புலித்தோலால் செய்யப்பட்ட சட்டையும் போட்டுக்கொண்டால், குளிர் எங்கிருக்கிறது என்று தேட வேண்டும்.

அதைத்தவிர, சிறிய கனப்புகள் மூட்டி எல்லா அறைக்குள்ளும் சூடுபடுத்தியிருப்பார்கள். கனப்புகளில் வாசனை புகை போடுவார்கள். நல்ல விளக்குகளை ஏற்றிவைப்பார்கள். உண்பதற்கு சூடான பலகாரங்கள் கொடுத்துக் கொண்டே இருப்பார்கள்.

அம்மாவின் மடியிலோ, தாதியின் மடியிலோ சுருண்டு படுத்துக் கொள்ள, யாரேனும் இரண்டு பேர் கால்பிடித்து விட, விரல்களை சொடக்கு எடுக்க, நன்கு நிம்மதியாய் தூங்கலாம்.

மழை காலத்தில் குளிரினால் தூக்கம்வராமல் போகக் கூடாது என்பதற்காகவே, மது, காடி கலந்த திராட்சை ரசங்களை தருவார்கள். அவைகளை இரண்டு கோப்பை குடித்தால் போதும். ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கலாம். அற்புதமான கனவுகள் காணலாம். ஏன் இங்கு மரத்தடியிலேயே மழையை அனுபவித்துக் கொண்டு நிற்கவேண்டும் என்று சொல்கிறார்கள். எனக்குப் புரியவேயில்லை.

நாம் என்ன காட்டு வாசிகளா...நாங்கள் ராஜ குமாரர்கள். எங்களை இப்படி மரத்தடியில் நிற்க வைப்பது நல்லதல்ல.''

அந்த அழகிய இளைஞன் பேச, உயரமான அந்த பிராமண இளைஞன், அவனை இன்னும் இறுகக் கட்டிக் கொண்டான். உடம்புச் சூட்டை அதிகப்படுத்தினான்.

''துருபதா. எதற்கு இவ்வளவு பேசுகிறாய். இன்று மாலை மழை நின்றுவிடும். இரவு வெறும் குளிர் மட்டுமே இருக்கும். நாளை காலை சூரியன் உதயமாகி, இந்தப் பகுதி முழுவதும் சூடு பரவும். கவலைப்படாதே. இந்த மழையை குறை சொல்லாதே. இந்த மழை நிச்சயம் நமக்குத் தேவை இந்த மழை இல்லையெனில், உணவுக்கும் தண்ணீருக்கும் மிகவும் கஷ்டமாகிவிடும்,

நீ சொல்கிற விஷயமெல்லாம் ஆச்சரியமாக இருக்கிறது. குடிக்க மது கலந்த திராட்சை ரசம், கால் பிடித்து விட ஆட்கள், சூடான உணவு, மழைபெய்யும் சப்தம்கூட கேட்காத மாளிகை என்பது நான் பார்த்ததே இல்லை. கேள்விப்பட்டதுமில்லை.

ஆனால், உனக்கும் எனக்கும் குருவாக இருக்கின்ற என் தந்தையார் நினைத்தால் மிகப்பெரிய மாளிகைகட்ட முடியும். அவருக்கு மாளிகை கட்டிக் கொடுக்க அரசர்கள் பலர் காத்திருக்கிறார்கள். ஆனால், ஏனோ தீர்மானமாய் ஒரேயொரு குடிசையுள்ள பர்ணசாலை மட்டும் போட்டு நம்மை இப்படி வெளியே நனைய விடுகிறார். வெய்யிலில் அலையவிடுகிறார். மழை நிற்கும்வரை, நீ எனக்கு அருகே இரு இந்தக் குளிர் உன்னை ஒன்றும் செய்யாது.உனக்கு எந்த நோயும் வராமல் இருக்க, நான் மந்திர ஜபங்கள் செய்கிறேன்''

அந்த அரசகுமாரன், அந்தண இளைஞனின் சூடான அணைப்பில். சுருண்டு படுத்துக் கொண்டு, தூங்கிப்

போனான். அவன் உறக்கம் நல்ல ஆழத்திற்குப் போன சமயம், பர்ண சாலையிலிருந்து பரத்வாஜ முனிவர் வெளியே வந்தார். துரோணா...என்று கூப்பிட்டார். அவர் சிறிய வேட்டியை இழுத்து, பின்பக்கம் சொருகி இருந்தார். மேலே ஒரு மான்தோல் ஆடையை கழுத்தில் மாட்டி, தர்ப்பை புல்லைப் போட்டு இறுக்கியிருந்தார். கையில் நீண்ட கோல் வைத்திருந்தார்.

மாணவர்கள் திடுக்கிட்டு எழுந்தார்கள். அவரை நோக்கி கை கூப்பினார்கள்.

''துரோணா...எல்லோரையும் உலுக்கி எழுப்பு. வரிசையாய் என் பின்னே வரச்சொல்'' கட்டளையிட்டார்.

துரோணர் தயங்கினார். திரும்பி மாணவர்களைப் பார்த்தார்.

மரத்தின் உள்ளடங்கிய சரிவில் ஒரு மாணவன் தூங்கிக் கிடந்தான். மழை மேலே விழுந்த போதும் நினைவில்லாது இன்னொரு மாணவன் தலைக்கு கல் வைத்து தரையில் படுத்திருந்தான்.

அருகேயுள்ள துருபதன், துரோணர் அணைப்பை விட்டபோதும், துரோணர் அணைத்துக் கொண்டிருக்கிறார் என்ற நினைப்பில், மரத்தை தழுவிக் கொண்டு படுத்துக் கொண்டிருந்தான்.

''என்ன தயங்குகின்றாய் துரோணா, மழையை வேடிக்கை பார்க்க வேண்டும். மழை பற்றி இவர்களுக்கு சொல்லித்தர வேண்டும். எனவே, உலுக்கி எழுப்பு. அனைவரையும் முன்னே அனுப்பி, நீ கடைசியில் வா. நான் நடக்கிறேன்.''

பரத்வாஜ முனிவர் நடந்தார்.

துரோணர் மாணவர்களை உலுக்கி எழுப்பினார். வீட்டுத் திண்ணையில் இருந்த ஆயுதங்களை அள்ளி எடுத்து வந்து அவர்கள் கையில் திணித்தார்.

முனிவர் நகர்ந்து விட்டார். துரோணர் மாணவர்களை போ...போ...என்று முகத்தில் தண்ணீர் அடித்து விரட்டினார்.

அவர்கள் திசை தெரியாது அலைந்தார்கள். உலுக்கி திசை காட்டினான். முனிவரைப் பார்த்து அவர்கள் பின்னே ஓடினார்கள்.

மழை இன்னும் வேகமாகப் பெய்தது.

துரோணர் கடைசியாய் துருபதனை கன்னம் தட்டி எழுப்பினார். எழுந்து நிற்க வைத்தார். நன்றாக உலுக்கினார். கை கால்களை வெடுக்கென்று இழுத்தார். முதுகில் இரண்டுமுறை அறைந்தார். கீழிருந்த சேறை அள்ளி துருபதனின் முகத்தில் சுள்ளென்று அடித்தார்.

துருபதன் விழித்துக் கொண்டான்.

''ஏன் துரோணா, இப்படி பாடுபடுத்துகிறாய். தூங்கக் கூட விடமாட்டேன் என்கிறாயே...'' என்று உரக்கக் கத்தினான்.

''என் தந்தையும் உன் குருவுமான பரத்வாஜ முனிவர், உனக்கு மழை பற்றி பாடம் நடத்துகிறேன் என்று சொல்லிப் போயிருக்கிறார். நீ இங்கு உட்கார்ந்த என்ன செய்யப் போகிறாய். வா. மழை பற்றி பாடம் கேட்போம் வா''

''மழை பற்றிய பாடம் வெய்யில் நாளில் நடத்த முடியாதா. மழை பற்றிய பாடம் ஒரு கூரையின் கீழ் நடத்தக் கூடாதா. எதற்காக இந்த .மழையில், இத்தனை நாளைக்குப் பிறகு, மழை பற்றி பாடம் உன் தந்தை நடத்தப் போகிறார்?''

''துருபதா. தயவு செய்து இன்னொரு முறை இப்படிப் பேசாதே. உன்னை, உன் அரண்மனையில் கெடுத்து குட்டிச் சுவராக்கி இருக்கிறார்கள். வேலைக்காரர்களிடம் எதிர்த்துப் பேசுவது போல, குருவிடமும் எதிர்த்துப் பேசலாம் என்று நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய். குலகுருவிடம் விளையாட்டாக சில சமயம் பேசியிருக்கலாம். வித்தை சொல்லித்தரும் குருவிடம் இப்படியெல்லாம் பேசக்கூடாது.

என் தந்தை தண்டிக்க ஆரம்பித்தால் உன்னால் தாங்க முடியாது. தயவு செய்து மௌனமாக இரு. என்ன சொன்னாலும் சரியென்று கேள். இதுதானே முதல் வருடம். அதனால் திணறுகிறாய். பிறகு மெல்ல மெல்ல உன்னால் சகலமும் எளிதாக கற்றுக் கொள்ள முடியும். எது சொன்னாலும் அந்த கட்டளையை ஏற்று நடக்க முடியும்.

துருபதா...ஓடு...ஓடு... அதோ, தந்தை போய்க் கொண்டு இருக்கிறார். நீ ஓடினால் தான் அவரைப் பிடிக்க முடியும். ஓடு.'' முன்னே அவனை விரட்டி, துரோணாச்சாரியார் வீட்டிற்குள் போனார். தாயை வணங்கினார்.

''அம்மா. எல்லா மாணவர்களும் கடும் பசியில் இருக்கிறார்கள். அப்பா மழைப்பாடம் நடத்துகிறேன் என்று கூறி வெளியே கூட்டிப் போய் இருக்கிறார். யார் தாங்குவார்கள் எவ்வளவு தாங்குவார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. எனவே, உண்பதற்கு ஏதேனும் இருக்கிறதா, தயவு செய்து மாணவர்கள் உண்பதற்கு ஏதேனும் கொடுங்கள்.'.

''உன் தந்தையைப்பற்றி உனக்குத் தெரியாது துரோணா என்னை உணவு தயார் செய்ய வைத்த பிறகே அவர் வெளியில் கிளம்பினார். அந்தப் பானை நிறைய

அவித்த காய்கறிகளும் மூன்று வகை தானியங்களும் ஒன்றாய் போட்டு கலந்து வைத்திருக்கிறேன். மூன்று கை சாப்பிட்டால், பசி பறந்து போகும்.

மூக்கில் நீர் பிடித்துக் கொள்ளாமல் இருப்பதற்காக நெல்லிக் கனிகளையும் கூட நான் நறுக்கிப் போட்டிருக்கிறேன். வேறு பல மூலிகைகளை கலந்திருக்கிறேன். எனவே, யாருக்கும் எந்த துன்பமும் நேராது உன் அப்பா சொன்ன பக்குவம் இது. இதை சாப்பிடுவதற்காகவே வெளியே அழைத்துப் போயிருக்கிறார் என்று நினைக்கிறேன்.''

''ஏன் அம்மா, இதை இங்கிருந்தபடியே சாப்பிட முடியாதா''

''ஆஹா...நன்றாக சாப்பிடலாமே. ஒரு தவறுமில்லை. ஆனால், மழையோடு வெய்யிலோடு, காற்றோடு நிலத்தோடு ஆகாயத்தோடு மனிதர்கள் சம்பந்தம் நேரடியாய் கொள்ள வேண்டும். இவைகளின் தாக்குதலை தனியொரு ஆளாய் எதிர்கொள்ள வேண்டும். எப்போது மழை தாக்கும். எப்போது வெய்யில் தாக்கும் என்று சொல்ல முடியாது. இதை குறைகூறிக் கொண்டிருப்பதை விட, இவைகளை முழுவதுமாய் ஏற்றுக் கொள்வது நல்லது. அப்படி ஏற்றுக் கொள்வதற்கு தக்கவாறு உடம்பை பலப்படுத்திக் கொள்ளவேண்டும். நல்ல மூலிகைகளை. சாப்பிட்டு, உரமேற்றிக் கொள்ள வேண்டும் உரம் அதோ இருக்கிறது. இரண்டு கை சாப்பிட்டால் எந்த நோயும் வராது. இது உணவேஅல்ல. மருந்து.

இந்த நேரத்தில் பசி இருக்கும். இவை வேகமாக உள்ளே இறங்கிவிடும். இல்லையென்றால் ருசிபார்த்து பாதி தின்று மீதியை யாருமறியாமல் கொட்டி விடுவார்கள். அதற்காவே தான் இன்று இந்த உணவு தயார் செய்யப்பட்டிருக்கிறது. எடுத்துக் கொண்டு போ'' அம்மா கட்டளையிட்டாள்.

துரோணர் மூடிய பாத்திரத்தோடு கூடிய அந்த உணவுப் பானையை தோளில் வைத்துக் கொண்டார். இடதுகையில் கோல் எடுத்துக் கொண்டார். இறுக்கக் கட்டிய உடையோடும் அள்ளி முடிந்த குடுமியோடும் பூணூலோடும் வேகமாக நடந்தார்.

அவர் உயரமும் அகலமும் மெல்லிய வயிறும் நீண்ட கைகளும் சரிவில் ஏறும்போது கூட, வேகமாக செயல்பட்டன. வெகு விரைவில் அவர் மாணவர்கள் கூட்டத்தை அடைந்தார். அப்பாவிற்கு அருகே போனார். பானையை இறக்கி வைத்தார்.

மழை காற்றோடு வேகமாய் தாக்கிற்று.

''வெய்யிலுக்கு பதுங்கலாம். மழைக்கு பதுங்காதே'' மாணவர்களைப் பார்த்து பரத்வாஜ முனிவர் பேசத் துவங்கினார்.

''காற்றுக்கு தலை குனியலாம். மழைக்கு குனியாதே. நிமிர்ந்து பார். நாலா பக்கமும் கவனி மழையை தோளிலும் மார்பிலும் வாங்கி அனுபவி. மழையில் எந்த உயிரினங்கள் நகருகிறது. எப்படி நகருகிறது என்று பார். எது மழையைப் பற்றி அதிகம் கவலைப்படுகிறது, எது கவலைப்படவில்லை என்று கவனி.

தடித்த தோலுள்ள மிருகங்கள் மழையைப் பற்றி கவலைப்படுவதில்லை. சடை முடியுள்ள மிருகங்கள் தான் மிகவும் அஞ்சுகின்றன. குறிப்பாய் சிங்கங்களுக்கும், சிறுத்தைகளுக்கும் மழையென்றால் சிறிதளவும் பிடிப்பதேயில்லை. இதைவிட மோசம் குரங்குகள். குரங்குகளுக்கு மழை மிகப் பெரிய கவலை.

மழையில் யானைகளும் காண்டா மிருகங்களும் நீர் யானைகளும் அசையாது நிற்கும். மழையை நிம்மதியாய் அனுபவிக்கும். ஆனால், மழையில் உல்லாசம் கொள்வது எது என்று தெரியுமா, பாம்புகள்.

பாம்புகள் மழையை மிகவும் ரசிக்கின்றன. வெய்யிலை சிறிதளவும் தாங்காத இந்தப் பாம்புகள், மழை நேரத்தில் வெகு வேகத்தில் இடம்விட்டு இடம் நகருகின்றன. குட்டிகளோடு உலா வருகின்றன. ஏனெனில், மழையில் ஒரு மனிதன் நடக்கும்போது, மண்தரையில் 'தப்தப்' என்று சப்தமெழ, காலூன்றிக் கொண்டு போவான். இந்த சப்தம் கேட்டு பாம்புகள் வெகுதூரம் தள்ளிப்போகும்.

மழையில் எப்படி நிற்கவேண்டும் என்று சொல்லித் தருகிறேன். மழை இருந்தால் எங்கும் ஒதுங்க வேண்டாம், கோட்டை கொத்தளங்களுக்குள் பதுங்கிக் கொள்ள வேண்டாம்.

போருக்குப் போகிற வீரர்களும் பிக்ஷைக்குப் போகிற அந்தணர்களும் மழைக்குப் பயந்தால் வாழ்வது என்பது இயலாது. எனவே. மழையில் நனைந்தபடி வாழ்வதற்கு நாம் கற்றுக் கொள்ளவேண்டும்.

ஒரு வெட்ட வெளியில் நன்கு மழை பெய்கிறது. அல்லது மழையில் மரத்தடியில் நிற்கிறீர்கள் என்றால் ஒரு காலை தரையில் ஊன்றிக்கொண்டு வலக்கையில் இருக்கிற கழியை காலுக்கருகே நட்டு, மற்றொரு காலை அந்தக் கழியைச் சுற்றிப் போட்டுக் கொள்ள வேண்டும். அதாவது, ஒரு காலில் பூமி தொட்டுக் கொண்டிருக்கும். இன்னொரு கால் உங்கள் வைக்கோலில் தொங்கிக் கொண்டிருக்கும். உடம்பின் சூடு தரைக்கு இறங்காமல் இருக்க இதுவொரு விந்தை.

இடது பக்கத்திலிருந்து வாயு நகரும்போது சூடும் நகருகிறது. சூடு இடைவிடாது உடம்பில் நகர்ந்து கொண்டிருக்கிறது. நாம் தொட்ட கோல்களில் நமது சூடு பரவுகிறது. நாம் அணைத்துக் கொண்ட மனிதர்கள் மீது நம் சூடு படருகிறது. நாம் உட்கார்ந்த பூமியில் நமது சூடு இறங்குகிறது.

அதேபோல, நமது இடது காலிலிருந்து கிளம்பிய சூடு, வலதுகால் வழியாக பூமிக்குப் போகிறது.

மழை பெய்ய பெய்ய, உடம்புச் சூடு குறைந்து போய் குளிரால் தாக்கப்படும். இப்படி ஒரு காலில் நின்றால், உடம்பு சூடு பூமிக்குப் போகாது. உடம்பினோடேயே தங்கி நிற்கும். எனவே மழைநேரங்களில் நனையத்தான் வேண்டும் என்கிற நிலை ஏற்பட்டால், இப்படி நிற்பது நல்லது.

காட்டில் வாழும் மாடு மேய்ப்பவர் கோலூன்றி, ஒரு காலை கோலில் சுற்றிக்கொண்டு நிற்பதைக் கவனித்திருக்கிறீர்களா,இது உடம்புச் சூட்டை வெளிவிடாமல்,தேக்கியிருக்கின்ற விந்தை.''

''மழைக்கு, மேலே தோலாடைகள் போர்த்திக் கொள்ளக்கூடாதா'' துருபதன் பரத்வாஜ முனிவரைப் பார்த்துக் கேட்டான். அவர் மட்டும் தோலாடை போட்டுக் கொண்டிருக்கும்போது, மாணவர்கள் எவருக்கும் எந்த ஆடையுமில்லாமல், வெறும் வேட்டியோடும், கோமணத்தோடும் நிற்க வைத்திருக்கிறாரே...என்ற ஆதங்கத்தில் கேட்டான்.

''என்னைப் போன்ற வயதானவர்கள் போட்டுக் கொள்ளலாம். இளைஞர்கள் மழையைத் தாங்க வேண்டும். எல்லா இடங்களிலும் தோலாடை இருக்கும் என்று சொல்ல முடியாது. தோலாடை வெகுநேரம்

கொள்ளவும் கூடாது. தோலாடைத் தடுப்பு போட்டுக் கொள்ளவும் மழையோடு தொடர்பு கொள்வது குறைந்து இருந்தால், மழையோடு தொடர்பு கொள்வது குறைந்து போகும்.

துருபதன் கேட்டதால், மற்ற மாணவர்களுக்கும் கேள்விகள் கேட்கும் தைரியம் வந்தது.

''ஐயா...உண்பதற்கு மழைகாலத்தில் ஏற்ற உணவு என்ன?''

''உண்ணாமல் இருத்தலே சிறப்பு. வெய்யில் காலத்தில் எது உண்டாலும் செரித்துப் போகும். உண்ண வேண்டிய அவசியமும் அதிகரிக்கும். ஆனால், மழைக் காலத்தில் நீங்கள் உண்பதைத் தவிர்க்கலாம். அதனால், உற்சாகக் குறைவு ஏற்படாது.

வெய்யில் காலத்தில் முன் பின்னான நகர்வுகள் மனிதனுக்கு அதிகமிருக்கும். மழை காலத்தில் அதிகமிருக்காது. அதிகம் நகர்வுகள் இல்லாத நேரத்தில் அதிகம் சாப்பிட வேண்டிய அவசியம் என்ன...

அப்படி சாப்பிட்டால் ஜீரணமாகாது. ரத்த ஓட்டத்தை குளிர் உறைய வைப்பதால் செரிமானமும் குறைவாகத்தான் ஆகும். எனவே. ஆகாரத்தை நீர்வடிவே வைத்துக் கொள்வது நல்லது.

ரசமாகவோ, கூட்டாகவோ உணவை தயார் செய்து உண்பது உத்தமம்.''

''ரசமும் கூட்டும் தயார் செய்து கொள்ளும் நிலையில் இல்லாமலிருந்தால் என்ன செய்ய வேண்டும் தந்தையே...'' துரோணர் கைகூப்பி தகப்பனாரைக் கேட்டார்.

''கிழங்குகள் சாப்பிடலாம். மீன் சாப்பிடலாம் பிஞ்சுக் காய்கள் சாப்பிடலாம். கனிகளை குறைவாகச்

சாப்பிடலாம், அமிர்தத்திற்கு ஒப்பான நெல்லிக் காய் களை, அது காய்க்கும் காலங்களில் பறித்து வைத்துக் கொண்டு, அடித்துப் பிளந்து, வெய்யிலில் உலர்த்தி. அதை சிறிய குடுவையிலேயே போட்டு, அல்லது மூங்கில் கழியில் ஒட்டைபோட்டு வைத்துக் கொள்ள வேண்டும், மூங்கில் கழியில் ஒரு கணு முழுக்க நெல்லி வற்றல் இருப் பின், மூன்று நாட்கள் அதுவே உணவாகக் கொண்டு இடைவிடாது நடக்கலாம். மீதி நாள் ஏற்படுகின்ற எல்லா நோய்களையும், நெல்லிக்கனி விரைவாகத் தடுக்கும்.

வழியே கருந்துளசி கிடைத்தாலும் பச்சை துளசி கிடைத்தாலும் பிடிப்பிடியாய் சாப்பிடலாம்.

மழைகாலத்தில் பறவை இறைச்சிகளை தவிர்ப்பது நல்லது, மான், மாடு. ஆடு போன்றவற்றை சாப்பிடாமல் இருப்பது நல்லது. அவைகளுக்கு உணவு கிடைக் காமல் கிடைத்த உணவை முழுங்கி, அவற்றின் ரத்தத்தில் விஷம் சேர வாய்ப்பிருக்கிறது. குறிப்பாய் பறவைகள் உணவு உண்ட இரண்டு மணிநேரத்தில் அந்த உணவு, அவைகளின் உடம்பில் கலந்து விடுவதால், பறவைகள் வெகு சீக்கிரத்தில் விஷ குணம் உள்ளவைகளாய் மாறி விடுகின்றன.

எனவே, ஆரோக்கியமான உணவுகளைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாத பறவைகள் கிடைத்த உணவை உண்டு, உயிர்வாழத் துவங்குகின்றன. இந்தப் பறவைகள் நாம் உண்ணும்போது, நமக்கு கெடுதல் விளைவிக்கும்.

மீனுக்கு அந்த குணமில்லை. மீன் வெளியே வந்து மழைத் துளிகளை உண்ணத் துவங்குகின்றது. இதனால் உடற்தூய்மை பெறுகின்றது. அதன் 'கழிவுகள் வெகு விரைவில் வெளியேறி விடுகின்றன. மேலும், ஓடுகிற ஆற்றின் எதிர்பக்கம் நீந்தி நீந்தி, மீன்கள் ரத்தம் சிவந்து,

உடல் வலுவுள்ளதாய் ஆகின்றன. ஒரு மணி நேரத்தில் எதிர் நீச்சல் நீந்தும் மீன் உடம்பில் வேறு விதமான ரசாயன மாற்றம் கொள்கிறது.

எனவே, ஆற்றிலோ குளத்திலோ இருக்கும் மீனைப் பிடித்து, தரையில் அடித்து, சுட்டு சாப்பிடலாம். அல்லது வேகவைக்கலாம். கொழுப்புள்ள சில மீன்களை பச்சையாய் சாப்பிடுவதில் தவறு ஏற்படுவதில்லை.''

''மழையிலிருந்து தப்பிக்க பல வழிகள் இருக்கும் போது...'' துருபதன் கேட்கத் துவங்கினான்.

பரத்வாஜர் அவனை நோக்கி கை உயர்த்தினார். போதும் நிறுத்து என்பதுபோல் பார்த்தார்.

''மழையிலிருந்து ஒரு காலும் தப்பித்துக் கொள்ளக் கூடாது. மழையை பழிக்கக் கூடாது. நீர்தான் இந்த உலகத்தில் முதலில் தோன்றிய விஷயம். நீர் விலகித்தான் நிலம் தோன்றியது. நீர் இல்லையெனில் நிலத்திற்கு அர்த்தமேயில்லை. இந்த பூமிக்கு வாழ்வேயில்லை. எனவே, ஒரு காலும்...ஒருகாலும் மழையை, நீரை பழிக்கக் கூடாது.

உள்ளங்கையில் வானம் நோக்கி ஏந்திப்பார். இவ்வளவு சுத்தமான ஜலம் உலகத்தில் எங்கேனும் இருக்கிறதா. எவ்வளவு பெரிய கருணையோடு, நீ வாழ வேண்டும் என்று, இந்தத் தாவரங்கள் வாழ வேண்டும் என்று, இந்தப் பறவைகளும், பிராணிகளும் வாழ வேண்டும் என்று, வானத்திலிருந்து யார் நீர் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு கை மழைநீர் பிடித்துக் குடி. உன்னுடைய நன்மைக்காக இந்த நீர் அனுப்பப்படுகிறது. இதை நீ பழிக்கலாமா, இதைவிட பாபம் ஏதும் உண்டா.

உதவி செய்ய வருபவர்களை அசிங்கமாய் பேசுபவர்கள் மனிதர்கள் தானா. ஒரு காலும் மழையை நிந்திக்காதே. மழையை நிந்திக்கின்றவன் மிகப்பெரிய முட்

டாள். அவன் தன் உத்தமியான தாயையே கேவலப்படுத்துபவன் எந்த நரகத்திற்குப் போவானோ, அதே போல மழையைப் பழித்தவனும் நரகத்திற்குப்போவான்.

உஷ்ணத்திலிருந்து தப்பித்துக் கொள்ள உடம்பிற்குத் தெரியாது. பல மிருகங்கள் கூட உஷ்ணத்திற்கு பயந்து ஒதுங்குகின்றன. வலுவுள்ள மிருகங்கள் கூட மரத்தடியில் படுத்து விடுகின்றன. ஆனால், மழை பெய்யும்போது எல்லா பிராணிகளின் உடம்பும், பறவைகளின் உடம்பும், தாவரங்களின் உடம்பும், மனிதர்களின் உடம்பும் மழையின்வருகைக்குத்தயாராகி, எதிர்த்து மழையை சமாளிக்கக் கூடிய உஷ்ணத்தை தானே உண்டுபண்ணிக் கொள்கிறது. இதனாலேயே மழை வரவேற்கப்பட வேண்டிய அம்சம் என்று புரிகிறதல்லவா, மழையை எதிர்க்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிகிறதல்லவா.

மழை பெய்யும்போது, இந்த மழை எப்போது நிற்கும் என்று கேட்பதுகூட அபத்தம். ஆபாசம். இப்படிக் கேட்பது மிகப்பெரிய பாவம். பசித்த ஒருவனுக்கு உணவு போடும் போது, எப்போது இதை நிறுத்துவீர்கள் என்று யாராவது கேட்பதுண்டா. கேட்பவன் நாகரீகமானவன் தானா...

இந்த மழை உனக்கு மட்டும் பெய்யவில்லை. இந்த உலகத்திற்கே பெய்கிறது. அதோ...அந்தப் புல் பூண்டுகள் எல்லாம் மழைக்காக வெகு காலம் தவம் செய்து வரமாய் வாங்கிக் கொண்டிருக்கின்றன. உனக்குக் குளிருகிறது என்று அதன் உணவை நிறுத்திவிட முடியுமா. இந்தப் புல்லிற்கு அடியே இருக்கும் நத்தைகளும் சிறிய கிருமிகளும் புழுக்களும், மழையை ஆனந்தமாக அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. மண்ணில் துளைபோட்டு துளை போட்டு நகர்ந்து கொண்டிருக்கின்றன.

பாம்புகள் உடம்பு முழுவதும் பூமியில் தேய்த்து நகர வேண்டியிருப்பதால் வெய்யில் காலத்தில் நகருவதை விட,

மழை காலத்தில் வெகு விரைவாகவும், அலட்சியமாகவும் நகர்கின்றன. பாம்புகளின் சந்தோஷத்திற்காகத்தான் மழை பெய்கிறது என்று சொன்னால் உனக்குப் புரிகிறதா? பாம்புகள் இடம் விட்டு இடம் மாற வேண்டாமா?

நீர் குடித்த புற்கள் ஓங்கி வளரும். ஓங்கி வளர்ந்த புற்களை மாடுகளும் ஆடுகளும் மான்களும் எருமைகளும் பறித்து உண்ணும். நிறைய பால் சுரக்கும். மற்ற மிருகங்களுக்கு மாமிசம் கிடைக்கும். இறந்த மிருகங்கள் மண்ணில் புதைந்து, மழையில் காய்ந்து இன்னும் உரமாகும். மரங்களை உயரமாய் வளர்க்கும். காய்ந்தநிலத்தில் இலைகளும் சருகுகளும் விழுந்து, உரமாகத் தயாராக இருக்கின்ற நேரத்தில் மழை பெய்து, அவைகளை மண்ணோடு கலக்க முயற்சி நடக்கிறது. அந்தக் கலவை தான் உரம். அந்த உரத்தால்தான் மரங்களும் மற்ற தாவரங்களும் வளர்கின்றன. தாவரங்கள் வளர்வதால்தான் உலகில் உயிரினம் உருப்படியாய் இருக்கிறது.

எனவே, எல்லா விஷயத்திற்கும் எல்லா உயிரினத்திற்கும் ஆதாரம் மழை. மழையின் தலைவன் இந்திரன். இந்த்ராய் நமஹ.''

பரத்வாஜர் கை கூப்பினார். மற்ற மாணவர்களும், கை கூப்பினார்கள். இந்திரனை புகழ்ந்து பாடினார்கள். இடக்காலை தரையில் ஊன்றி, வலப்பக்கம் கம்பு ஊன்றி வலக்காலை கம்பின் மீது சுற்றிப்போட்டு, கை கூப்பி வட்டமாக நின்று இந்திரனைப் போற்றிப் புகழ்ந்து பாடினார்கள்.

இந்திரனுக்குப் பிடித்த விஷயம் ஒலி. எனவே, இந்திரனை மகிழ்விக்க ஒரு மாணவன் இடுப்பிலிருந்து, மரக் கொம்பாலான எக்காளம் எடுத்து, பலமாக ஊதினான். அந்தப் பிரதேசம் முழுவதும் அந்த சங்கொலி ஒரு அதிர்வை ஏற்படுத்தியது.

இந்திரனுக்குப் பிடித்த இன்னொரு விஷயம் லப்பை என்கிற கொடி. அதன் ரசம். லப்பை என்கிற கொடியை தேடிக் கண்டுபிடித்து, அதற்கு பூஜை செய்து, அதனிடம் அனுமதிகேட்டு, அது பூமியில் இருக்கும் பொழுதே அந்தக் கொடியை எடுத்து, பற்களால் கடித்து, அந்த ரசத்தை உறிஞ்சிக் குடிக்கிறபொழுது, அந்த ரசத்தின் பாதி சக்தி இந்திரனுக்குப் போகிறது. எனவே, அவர்கள் புல்வெளியிலிருந்து, காடுகளுக்குள் நுழைந்து, லப்பை என்கிற கொடியை தேடத் துவங்கினார்கள்.

மழை விடாது பெய்து கொண்டிருந்தது.

பெரிய பெரிய இலைகளோடு கூடிய அந்தக் கொடி, ஒரு புதராக இருந்தது.

மாணவர்கள் சுற்றி உட்கார்ந்து கொண்டார்கள்.

பரத்வாஜர் செடிக்கு பூஜைசெய்தார். நமஸ்கரித்தார். கைகூப்பி செடியை குளிர்விக்கும் மந்திரங்கள் சொன்னார்கள். விழுந்து வணங்கினார். மெல்ல ஒரு கொடியை எடுத்து, கண்ணில் ஒற்றிக் கொண்டு, பற்களால் கடித்தார். நறநறத்த அந்த சப்தம் எல்லோருக்கும் தெளிவாகக் கேட்டது. பிறகு, செடியிலிருக்கும் ரசத்தை உறிஞ்சிக் குடித்தார்.

சோமரசம் இந்திரனின் வலது தொடையில் நுழையட்டும். விருப்பமுள்ள இந்திரனுள், விருப்பமுடன் சோம ரசம் நுழையட்டும். மகிழ்ச்சியுள்ள இந்திரனுள் மகிழ்ச்சியுடன் நுழையட்டும் என்று அவர்கள் மந்திரம் சொன்னார்கள்.

பரத்வாஜர் மாணவர்களை கைகட்டி நிற்க வைத்துவிட்டு சற்று மேடேறிப் போய் தனியே வானம் பார்த்து ஏதோ மந்திரங்கள் ஜபித்தார்.

''குரு என்ன செய்கிறார்'' துருபதன் வியப்போடு கேட்டான். அவன் உடம்பு லேசாக நடுங்கிக் கொண்டிருந்தது.

''மழை போதும், நிற்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறார். மழை இன்று இரவுக்குள் நிச்சயம் குறைந்து விடும். நாளை நல்ல சூரிய ஒளி உதிக்கத் துவங்கும்'' துரோணர் பதில் சொன்னார்.

முனிவர் ஜபத்தை முடித்துவிட்டுத் திரும்பினார்.

''துரோணா, சகலருக்கும் உணவு கொடு. மழை இன்னும் சற்று நேரத்தில் நின்று விடும்''

மேல் மூடியை அகற்றி பானையைத் தூக்க உயரே வருணனுக்குக் காண்பித்து, அதில் மழைத்துளிகள் சிலது விழுந்ததும் கீழே வைத்து, மூடியினாலேயே குவிந்த உள்ளங்கைகளுக்குள், அந்த கூட்டாஞ்சோறை பரிமாற எல்லோரும் ஆவலோடு உண்டார்கள்.

உண்டு முடித்து ஏப்பம் விட்டபோது மழை மெல்லியதாயிற்று. திரும்ப பர்ணசாலை நோக்கி நடந்துவந்த போது, அறவே நின்று போயிற்று.

பர்ணசாலையை அடைந்தவுடன் சுற்றி விளக்குகள் ஏற்றி அதற்குக் கீழே அமர்ந்து மாணவர்கள் உரத்த குரலில் வேதம் சொல்லத் துவங்கினர்.

இரவு சூடான கஞ்சி கொடுக்கப்பட்டது. அருந்தி விட்டு. மெல்லிய துகிலை மேலே போர்த்திக் கொண்டு, தலைக்கு மனைப்பலகை வைத்து அல்லது மான்தோலை சுருட்டி வைத்து உறங்கினார்கள்.

காடு இருட்டில் ஆழ்ந்தது. மின்மினிகள் பறந்தன.

துரோணர் சம்மணம் கட்டி, தொலை தூரம் தெரிந்த இருட்டையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

பர்ணசாலையில் கதவு திறக்கும் சப்தம் கேட்டது. பரத்வாஜ முனிவர் வெளியே வந்தார். துரோணர் அமர்ந்திருப்பதை பார்த்தார்.

''தூங்கவில்லையா துரோணா'' அருகே வந்து, தோளில் கை வைத்தார்.

''இல்லை தந்தையே... யோசித்துக் கொண்டிருக்கிறேன்''

''அப்படியா...என்ன யோசிப்பு. வா...தோட்டத்திற்குப் போய் பேசுவோம். இங்கே பேசினால் குழந்தைகள் விழித்துக் கொள்வார்கள்.''

பரத்வாஜ முனிவர் மெல்லநடந்து தோட்டத்திற்கு நடுவே இருந்த பாறைத் திட்டில் அமர்ந்தார். எதிரே இன்னொரு மரப்பலகையில் துரோணர் அமர்ந்தார்.

''என்ன நினைத்துக் கொண்டிருந்தாய் துரோணா.''

''தந்தையே...ஒரு பாடசாலை என்பது இப்படித்தான் இருக்கவேண்டுமா. வேறு விதமாக இருத்தல் கூடாதா என்று துருபதன் கேட்டான். என்னிடம் இந்தக் கேள்வி இதுவரை எழுந்ததேயில்லை. எப்படி இருக்க வேண்டும் என்று வினவினேன்.

கற்களால் கட்டப்பட்ட கோட்டையும். நடுவே பெரிய மாளிகையும், தொங்கும் விளக்குகளும், விசிறுவதற்கு சேடிப் பெண்களும், பளிங்கு போன்ற தரையும் உண்பதற்கு நல்ல உணவுகளும். குடிப்பதற்கு விதம் விதமான பானங்களும் இல்லாமல் ஒரு காட்டின் நடுவே இப்படி ஒரு பாடசாலை இருக்க வேண்டிய அவசியம் என்ன என்று கேட்டான்.

எனக்கு பதில் சொல்லத் தெரியவில்லை. அப்படி நகரத்தில் இருப்பது போல ஒரு மாளிகையில் ஒரு பாடசாலை இருக்குமானால், அது நன்றாகத்தானே இருக்கும்.

பரத்வாஜ முனிவர் வாய்விட்டுச் சிரித்தார்.

''துரோணா...எனதருமை துரோணா, மனிதர்கள் எப்படியெல்லாம் பாதிக்கப்படுகிறார்கள் என்பதற்கு நீ ஒரு சாட்சி அவன் அரசகுமாரன். பர்ணசாலையும் காடும் தெரியாதவன். பிறந்ததிலிருந்து கற்கோட்டைக்குள் வாழ்ந்தவன். அவன் அவ்விதம் தான் பேசுவான், ஆனால் இந்த காட்டின் சுகம் உனக்குள் ஏன் படியவில்லை''

துரோணா...இது சுகமென்று உனக்கு ஏன் தெரியவில்லை. இது அருமையான இடமாயிற்றே படிப்பதற்கு என்று உன்னால் ஏன் பதில் சொல்ல முடியவில்லை என்றுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

நீ ஏன் துரோணா மாளிகையை கற்பனை செய்து கொள்ளப் போனாய், மாளிகையில் எப்படி பாடம் கேட்க முடியும். சேடிகள் பின்புறமிருந்து மயிலிறகால் விசினால், எதை மனப்பாடம் செய்யமுடியும். உள்ளிருந்து நறுமணமான புகைகள் வந்து, விதம்விதமான தின்பண்டங்கள் எதிரே பரிமாறப்பட்டால், பிறகு எதைப் படிக்கமுடியும். தின்றுவிட்டு தூங்குவதுதான் மாளிகையில் இயலுமே தவிர, பாடம் படிப்பதற்கு மாளிகை உதவாது.

''நாம் எதைப்பற்றி பாடம் படித்துக் கொண்டிருக்கிறோம்.''

துரோணர் சற்றுநேரம் மௌனம் சாதித்தார்.

''வேதம் படித்துக் கொண்டிருக்கிறோம். வேதங்களில் தேவதை பற்றியும் வருகிறது. இயற்கை வர்ணனை வருகிறது. பரமாத்மாவைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அந்த தேவதைகள் நமக்கு எப்படி காட்சியளிக்கிறார்கள். எந்த ரூபத்தில் வருகிறார்கள். வருணன்

மழையாகவும், அக்கினி நெருப்பாகவும், யமன் உயிரை கவர்பவனாகவும், வாயு காற்றாகவும், அசுவினி தேவதைகள் மூலிகைகளாகவும் நம்மிடையே புழங்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இவர்களை அறிய, மாளிகையில் உட்கார்ந்து என்ன சிந்தனை.

நாம் இருவரும் நடந்துபோகும்போது எதிரே ஒரு அரசன் வருகிறான். அந்த அரசன் நமக்குப் பரிச்சயமானவன். அந்த அரசனை நாம் புகழ்ந்து போற்றுகிறோம். வாழ்க என்று சொல்கிறோம். அவன் நமக்குச் சில உதவிகள் செய்கிறான். பரஸ்பரம் வணங்குகிறோம். இது எப்போது நடக்கும். அரசன் எதிரே வந்தால் தானே நடக்கும். அரசன் அவன் தேசத்தில் இருக்க,நாம் இங்கிருந்த படியே அவனைப் பற்றி வாழ்த்துவோமா.

வாழ்த்தலாம், தவறில்லை. ஆனால், எதிரெதிரே நின்று வாழ்த்துவதுபோல ஆகுமா.''

''காட்டில் நேரிடையாக மழை தாக்குகிறபோது, இந்த வனத்தில் அக்கினி நேரடியாக சூரிய வெப்பமாய் இறங்குகிறபோது, இரவில் காற்று வீசுகிறபோது, நாம் அந்த தேவதைகளை நினைத்துக் கொள்கிறோம். அவர்களுடைய புகழை உரக்கப் பாடுகிறோம். தேவதைகள் இன்னும் நெருங்கி வருகிறார்கள்.'' அப்பா...இன்று காலை நீங்கள் செய்தது என்ன, அதைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே...''

''சொல்கிறேன் உறக்கம் என்பது மரணத்தின் ஒத்திகை. அரண்மனை சுகபோகங்கள் உறக்கத்தைத்தான் கொடுக்கும். உறக்கம் உள்ளவன் கண்பார்வையை மெல்ல மெல்ல இழக்கிறான். அவன் உடம்பு பூரிப்படைகிறது. பருமனாகிறான். பருமனாகிற உடம்பிற்கு உணவு அவசியம் தேவைப்படுகிறது. உணவு அதிகம்

போட இன்னும் பருமனாகிவிடுகிறான். பருமனாக பருமனாக ஆயுசு குறைகிறது.

காட்டில் உணவுக்கு நெடுந்தூரம் போக வேண்டும். பிறகு, நெடுந்தூரம் திரும்பிவந்திட வேண்டும். உணவு உண்டுவிட்டு திரும்பி வருவதிலேயே, உன்னுடைய உணவு செரிமனமாகிவிடுகிறது. சுண்டுவிரல் அளவு சதை கூட உடம்பில் அதிகமாக இருத்தல் கூடாது. துருபதனிடம் சொல்லி வை. மழைக்காலம் முடிந்து வசந்தகாலம் ஆரம்பித்தால், நாம் ஓடவேண்டியிருக்கும் என்று சொல். இடைவிடாது இடைவிடாது ஒருநாள் முழுவதும் ஓடுவதற்கு நான் பயிற்சி தருவேன் என்று சொல்லி வை. நானும் ஓடுவேன் என்று சொல்லி வை.

முதுகில் அம்பராத்துணியும் கையில் வில்லும் தாங்கி, உணவின்றி நீரின்றி ஒருநாள் முழுவதும் ஓடவேண்டும் என்று சொல்லி வை. அப்படி ஓட முடியவில்லை என்றால்...துருபதன் கேட்பான். அவனை எந்த இடத்தில் விழுந்தானோ, அங்கேயே விட்டுவிட்டு, வேறு வழியில் திரும்புவோம் என்று சொல். கானகத்தில் அவன் காணாமல் போவான் என்று அவனை எச்சரித்து வை, உயிர்வாழ விருப்பமிருந்தால், அவன் நம்மோடு ஓடி வரத்தான் வேண்டும். வேறு வழியில்லை என்றும் அவனுக்கு எடுத்துரை.

உனக்கும் அச்சமாக இருக்கிறதா துரோணா. கடுமையான அரைநாள் ஓட்டத்திற்குப்பிறகு ஒரு இடத்தில் நிற்போம். வட்டமாக உட்கார்ந்து ரிக்வேத ஸாகை சொல்லுவோம். சொன்னபிறகு, கண்மூடி சிறிதுநேரம் அமர்ந்திருப்போம். அந்த அமர்வு தூக்கம் போன்ற ஒரு அமைதி. பிறகு உற்சாகமாக எழுந்திருந்து, மறுபடி ஓடுவோம். இரவு எங்கேனும் ஒரு உயர்ந்த குன்றில் தங்குவோம்.

தங்கி அங்கு யஜுர்வேத ஸாகை சொல்லுவோம். சொன்ன பிறகு மௌனமாக அமர்ந்திருப்போம். அமர்ந்த வேளை, தூக்கம் போலும் ஒரு அமைதி நம்மைத் தழுவும்.

பிறகு, விடியற்காலையில் எழுந்து. மறுபடியும் ஓடுவோம்.

முதல் நாள் பேரவஸ்தையாக இருக்கும். இரண்டாம் நாள் சகித்துக் கொள்ள முடியும். மூன்றாம் நாள் ஓட்டம் பழக்கப்பட்டு விடும். நான்காம் நாள் வீடு திரும்பும்போது, இன்னும் சற்று தூரம் ஓடலாமே என்று ஆசை வரும். வீட்டைச் சுற்றி ஓடிக்கொண்டிருப்போம்,

இவை எல்லாவற்றிற்கும் காரணம் மனம். ஓட்டத்தோடு மனம் ஐக்கியப்பட்டு விட்டது என்று அர்த்தம். மனம் ஐக்கியப்படுவதை மறுக்கும் போது, முதல்நாளே வேண்டாம் என்று கெஞ்சுகிற போது, மனம் ஓட்டத்தை புறக்கணித்து விடுகிறது. மனம் ஏற்க மறுத்த எந்த விஷயத்தையும் மனிதனால் செய்ய முடியவில்லை. எனவே, ஒரு காரியம் செய்யும்போது, முழுவதுமாய் மனம் உணர்ந்து, ஓடுவது என் தொழில், ஓடுவது என் வேலை, நான் ஓடவே பிறந்திருக்கிறேன் என்பது போல செய்ய வேண்டும்.

துரோணா...நான் சொல்வது புரிகிறதா. மிகக் கூர்மையான ஒரு விஷயத்தை உனக்குச் சொல்லியிருக்கிறேன். தயவு செய்து உள்ளுக்குள் வாங்கி புரிந்து கொள், அரசனுக்குப் புரியாமல் போகலாம். அந்தணனுக்குப் புரியாமல் போகக்கூடாது.

மனம் ஒருமுகப்பட்டு செய்கிற எந்த வேலையும் எளிதாகச் செய்ய முடியும். ஒழுங்காக செய்ய முடியும். தொடர்ச்சியாக செய்ய முடியும்.

கால் வலிக்கிறதே...என்னால் முடியவில்லையே... நான் இதற்குப் பிறந்தவன் அல்லவே...நான் வேறுவிதமாக அல்லவா வாழ்ந்திருக்க வேண்டும் என்று மனம் யோசிக்கத் துவங்கினால், நீங்கள் ஓடவும் முடியாது. வேறுவிதமாக வாழவும் முடியாது. இரண்டுங்கெட்டானாகப் போய்விடுவீர்கள். இதைவிட ஆபத்தான வாழ்க்கை உலகத்தில் எதுவுமில்லை.

இப்படி செயல்திறன் இல்லாதவர்கள் அதிகமானால், ஒரு தேசம் நாசமடையும். வெறும் வாய்ப் பேச்சு அதிகரிக்கும். கும்பலாய் கூடி, இப்படி சாதனை செய்கிறவர்களை கேலி செய்கின்ற ஒரு மனோபாவம் வந்துவிடும். அவன் உயர்ந்து விட்டானா...அவனை தாழ்வடையச் செய்வதே நமது நோக்கம் என்று நாம் உயர்வதற்கு பதிலாய் மற்றவர்களை தாழ்வடையச் செய்கின்ற ஆத்திரம் அதிகரித்து விடும்.

எனவே, துரோணா...மனம் நாலு பக்கமும் விதம் விதமாய் யோசிப்பதை தடுத்து நிறுத்தவே, செயல்களில் ஈடுபடுகிறோம்,

துரோணா...ஓடு என்று குரு கட்டளையிட்டவுடன், நில் என்று சொல்கிறவரை ஓடித்தான் ஆகவேண்டும். அதுதான் ஆண்மை. அதுதான் விவேகம். அதுதான் குருகுலம்.

உன்னை எப்போது நிற்கச்செய்வது என்று குருவிற்குத் தெரியும். குரு சாதாரணமானவர் அல்ல. அவர் தாயினும் பரிவுள்ளவர். தந்தையினும் சிறந்தவர். அவரை விட உன் மீது அக்கறை உள்ளவர். வேறு எவருமில்லை.

துரோணா...நான் உன்னை தகப்பனாகவே பார்க்கவில்லை. உன்னை என் சீடனாகவே ஸ்வீகரித்திருக்கிறேன். அதனாலேயே இந்த அரசகுமாரனோடு பழகவிட்டிருக்கிறேன்.

துரோணா...நீ செயற்கரிய காரியங்கள் செய்வதற்கு இங்கே பிறந்திருக்கிறாய்.

நாளை கானகஓட்டம் நடைபெறப்போகிறது. இந்த முறை பலநாட்கள் பல்வேறு இடங்களுக்கு நான் போகப் போகிறேன் பல்வேறு சூழ்நிலைகளை மாணவர்கள் பழகவேண்டும் என்று முயற்சிக்கப் போகிறேன், மனதளவில் துருபதனை அதற்கு தயார் செய். இவன் என்ன எதிர்படுகிறதோ அதை ஏற்றுக் கொள்ளாமல் எதிர்க்கிறான்.

குளிர்காலத்தில் குளிரை நிந்திக்கிறான், மழை காலத்தில் மழையை பற்றி வேதனையாகப் பேசுகிறான்.

வெய்யில் காலத்தில், 'ஐயோ வெய்யில்' என்று அலறுகிறான். எதிர்படுகிற விஷயத்தை ஏற்கத் தெரியாவிடில், வாழ்க்கை நரகமாகப் போய்விடும்.

துருபதனிடம் இயல்பாகவே பொறுமையில்லை. எனவே, பொறுமையின் அவசியத்தை அவனுக்குச்சொல்.

துரோணா...நான் செய்கிற வேலைகளை உனக்குத் தருகிறேனே என்று பார்க்கிறாயா...இதுதான், இந்த பதினைந்து பேர்தான் கடைசி வகுப்பு, இவர்கள் தேறி, மேலே போனால், நான் மறுபடியும் வகுப்புகள் எடுப்பதாக இல்லை. நீ உன் வழியில் நான் என் வழியில் போக வேண்டிய நேரம் வெகு விரைவில் வந்து விடும். எனவே, என்னிடமிருந்து தெரிந்து கொள்வதை வேகமாகத் தெரிந்து கொண்டு, துருபதனிடமும் நெருக்கமாக இரு. பிற்பாடு துருபதன் உனக்கு உதவக் கூடும்.''

மறுநாள் விடியும் நேரத்தில் அவர்கள் குரல்கொடுத்து எழுப்பப்பட்டார்கள்.

வெளிச்சம் கிழக்குப்பக்கம் மெல்ல பூக்க ஆரம்பித்தது

அவர்கள் நதிக் கரைக்குப் போய் ஆனந்தமாக குளித்தார்கள். மெல்ல நடுங்கிக் கொண்டு பர்ணசாலைக்கு வந்தார்கள். அமைதியாக உட்கார்ந்து பிரார்த்தனை செய்தார்கள்.

இலைகளில் உணவு போட்டிருக்க குரு மாதாவை நமஸ்கரித்துவிட்டு, குருவின் அனுமதி பெற்று, வேகமாக சாப்பிட்டார்கள்.

பயணத்திற்கு வேண்டியவற்றை தலைக்கட்டாக எடுத்துக் கொண்டார்கள். இரண்டு இரண்டு பேராக பயணப்பட வேண்டும் என்று பிரித்து விடப்பட்டார்கள். என்ன ஆனாலும், அவர்கள் இரண்டு பேரும் பிரியக் கூடாது என்று அவர்களுக்கு கட்டளையிடப்பட்டது.

அடர்ந்த கானகத்தில் பதினைந்து பேரும் ஒன்றாக பயணம் செய்வது என்பது எப்போதும் இயலாதகாரியம். முடிந்தவரை நாம் ஒன்றாக பயணம் செய்து அப்படி முடியாத போது, ஒரு குறிப்பிட்ட இடத்திற்குப் போய், நாம் ஒன்று சேர்ந்து கொள்வோம். நாம் ஒன்று சேருவதற்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தை வகுத்துக் கொள்வோம். ஆனால் நான் இப்போது பிரித்துக் கொடுக்கிறேனே இருவர் இருவராக அவர்கள் ஒருபோதும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியக் கூடாது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

உடலும் உயிரும் போல நீங்கள் இருவரும் நடக்க வேண்டும் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டு கானகத்தை அனுபவித்துத் தாண்ட வேண்டும் நான் சொல்வது புரிகிறதா'' பரத்வாஜர் கேட்டார்.

மாணவர்கள் புரிகிறது என்று பதில் சொன்னார்கள்.

''கானகத்தில் துஷ்டமிருகங்கள் பற்றி உங்களுக்கு சொல்லிக் கொடுத்திருக்கிறேன். நேரடியாக பல மிருகங்களின் தாக்குதல்கள் தாண்டி தப்பித்திருக்கிறீர்கள்.

இம்முறையும் உங்களை கடவுள் காப்பாற்றுவார். நல்ல அனுபவங்கள் ஏற்படட்டும். அனுபவத்தை கிரஹிக்கக் கூடியபலம் உங்களுக்கு கிடைக்கட்டும். நான் கிளம்புகிறேன். என் பின்னே இடைவெளிவிட்டு இடைவெளிவிட்டு இரண்டிரண்டு பேராக பின் தொடருங்கள்.

துரோணரும் துருபதனும் கடைசியாக வரட்டும்.

கானக ஓட்டத்திற்கான கடைசி ஆயத்தங்களை நீங்கள் செய்து கொள்ளலாம்' பரத்வாஜர் கூறிவிட்டு. கையில் கமண்டலத்துடன் தண்டத்துடன், பாதரக்ஷையுடன் மேலே கனத்த கம்பளியுடன் பர்ணசாலைவிட்டு நடக்கத் துவங்கினார்,

மாணவர் ஜெயவீ பவ என்று கோஷமிட்டார்கள். பிறகு ஆசிரியர் போனதும் தோல்களினாலான பாதரக்ஷையை கால் விரல்களில் மாட்டி, மெல்லிய தோல்வாரால் மிக நேர்த்தியாக பாதத்தைச் சுற்றி கட்டி முழங்கால் வரை கொண்டுவந்தார்கள். முழங்காலில் சிராய்ப்புகள் ஏற்படாமல் இருக்க கவரிமான் தோலை அங்கு கட்டிக் கொண்டார்கள். கைகளில் உறை அணிந்து கொண்டார்கள். சறுக்கி விழுந்தால் அடிபடாமலிருக்க முழங்கைக்கு நடுவே மெத்மெத்தென்று தைக்கப்பட்ட தோல் கவசங்களை அணிந்து கொண்டார்கள். மார்புக்கு காண்டாமிருகத்துத் தோலை ஆடையாக போட்டுக் கொண்டார்கள். தலைப்பாகையை இறுக்க கட்டிக் கொண்டார்கள் இடுப்புத் துணியை வழித்துக் கட்டி அதன்மீது புலித்தோலை இறுக்கினார்கள் முதுகில் அம்புக் கூடையும் கைகளில் வில்லும் இடுப்பில் குறுவாளும் குத்திட்டியும் தரித்துக் கொண்டார்கள்.

பழங்கள் நறுக்கவும் மாமிசங்கள் நறுக்கவுமான கத்திகளை முழங்காலுக்கு அருகே சொருகிக் கொண்டார்கள். குடிதண்ணீர் குடித்துவிட்டு, காலிக் குவளையை முதுகில் மாட்டிக் கொண்டார்கள்.

இடுப்பில் கட்டிய புலித்தோலுக்கு நடுவே வாழைச் சருகுகளில் வெல்லக் கட்டிகளை வைத்துக் கொண்டார்கள். புலித்தோல் மீது நான்கு முழக்கயிறும் புஜங்கள் மீது ஒன்றரை முழக் கயிறும் கட்டிக் கொண்டார்கள்.

கழுத்தில் இரும்புச் சங்கிலியை மாலையாக அணிந்திருந்தார்கள். நெருப்பு உண்டாக்கும் அரணிக் கட்டையை இடது முழங்காலில் சொருகிக் கொண்டார்கள்.

நிழல் பார்த்து நேரம் கவனித்தார்கள். பறவை சகுனங்கள் பார்த்தார்கள். தொலைவே யானை பிளிறும் சப்தம் கேட்டார்கள். சந்தோஷமானார்கள். குரு மாதாவை வணங்கி, இரண்டிரண்டு பேராக, பர்ணசாலையை விட்டு வெளியேறினார்கள்.

அடர்ந்த கானகத்தில் குருபோன தடத்தை கவனமாக பதியவைத்துக் கொண்டு பின்னர் வேகமாய் தொடர்ந்தார்கள்.

ஆரம்பத்தில் மலைச் சரிவாய் புல்வெளியாய் இருந்த வனப்பரப்பு போகப்போக, புதர்கள் மண்டி காணப்பட்டது. பெருமரங்கள் அடர்த்தியாய் பல இடங்களில் இருந்ததை தாண்ட வேண்டியதாயிற்று.

காட்டிலுள்ள நாகப்பழங்கள் உள்ளங்கை பெரிது இருந்தன. இரண்டு பழங்கள் சாப்பிட்டு நீர் குடித்தால், வயிறு நிரம்பியது.

துருபதனால் தொடர்ச்சியாக ஓட முடியவில்லை. அங்கங்கே இளைப்பாறினான். அவன் இளைப்பாறும் நேரமெல்லாம், கத்தியை வைத்தோ அம்பை வைத்தோ, கவண் கல்லை வைத்தோ துரோணர் போர் முறை பழகியபடி இருந்தார்.

''எப்படி உன்னால் தூங்காமல் இருக்க முடிகிறது துரோணா.'' வியப்போடு துருபதன் கேட்டான்.

''அடுத்து செய்ய வேண்டிய செயல்கள் ஞாபகம் வருகிறபோது, தூக்கம் எப்படி வரும். நீ தூங்குகிறபோது என்னால் எப்படித் தூங்க முடியும். துஷ்ட மிருகங்களின் ஒலி இடையறாது கேட்டுக் கொண்டே இருக்கிறது. ஏதேனும் ஒரு மிருகம் வந்து உன்னை தாக்கிவிடலாம் அல்லவா...எனவே, நீ தூங்குகிறாய், சோர்வாக இருக்கிறாய் என்று தெரிந்தால்,நான் அதிகம் விழித்துக் கொள்கிறேன். சிறிது கூட எனக்கு தூக்கம் வரவேயில்லை. சோர்வாகவும் இல்லை.

எனவே,என்னைப் பற்றி கவலைப்படாதே துருபதா, துரோணர் அன்பொழுக சொன்னார்.

''நான் உன்னைவிட இரண்டு வயதுதான் சிறியவன். ஆனால், நான் ஏன் சோர்வாகி விடுகிறேன்'' துருபதன் ஆச்சரியத்தோடு கேட்டான்.

''நீ கனவு காண்கிறாய் துருபதனா. மனதுக்குள் ஏராளமாக சிந்திக்கிறாய். இடைவிடாது கற்பனையில் மிதக்கிறாய். கற்பனையில் மிதக்கிறவர்கள் கற்பனையை கலைகிறபோது, வேகமாக மனச்சோர்வு அடைகிறார்கள். மனச்சோர்வு உடற்சோர்வை அதிகரிக்கும். எனவே, கற்பனை பண்ணாமல் கண்ணில் என்ன படுகிறதோ அதோடு மட்டும் தொடர்புடையவர்களாக இருப்பது நல்லது.

கண்கள் ஏதோ ஒன்றை பார்த்துக் கொண்டிருக்க, மனம் எதையோ நினைத்துக் கொண்டிருக்கிற இரண்டு வாழ்க்கையில் சோர்வு நிச்சயம் வரும்.''

''என்னால் அப்படி இருக்க முடியவில்லையே.இதற்கு என்ன காரணம். கண்ணில் எது படுகிறதோ, அதுபற்றி மட்டுமே யோசிக்க வேண்டும் என்பது எனக்கு கை கூடவில்லையே...''

''உன்னை வனத்திற்கு அழைத்து வந்து வித்தை சொல்லித் தந்திருக்கக் கூடாது. நீ எப்பொழுதும் உள்ளுக்குள் அரண்மனை வாழ்க்கையையே நினைத்துக் கொண்டிருக்கிறாய். அங்குள்ள விஷயங்களை பற்றி மட்டுமே பேசிக் கொண்டிருக்கிறாய். கனவுகளில் கூட அந்த விஷயங்கள்தான் அதிகம் வருகின்றன. எனவே, வனத்தை அனுபவிக்க உனக்குத் தெரியவில்லை. வனம் உனக்குப் பிடிக்காத விஷயமாக இருப்பதால். மனச்சோர்வும் மனதால் உடற்சோர்வும் ஏற்பட்டு விடுகிறது''

''அப்படியில்லையே, வனம் நன்றாகத்தான் இருக்கிறது''

''இல்லை. நீ முழுமையாக வனத்தை நேசிக்கவில்லை. இங்கிருந்து வெகு சீக்கிரம் நகரத்திற்கு போய் விடப்போகிறேன் என்ற எண்ணத்திலேயே இருக்கிறாய். இங்கிருந்து நீ உன் நகரத்திற்குப் போகப் போவதே இல்லை. உன் வாழ்க்கை முழுவதும் இந்த வனத்தில் தான் கழியப் போகிறது. குறிப்பாய் இந்த இடத்தில் தான் இருக்கப் போகிறது என்று நினைத்தால் நீ எப்படி நடந்து கொள்வாய் அப்படி நடந்து கொள்.

இப்பொழுது இந்த க்ஷணம் உயிரோடு இரு. இப்போது இந்த க்ஷணத்தோடு வாழ்க்கையை நடத்து. இன்றே இப்பொழுதே, என்று மனதை ஒருமுகப்படுத்தி. என்ன சூழ்நிலையோ அந்தச் சூழ்நிலையை மட்டும் உணர்ந்து கொண்டிரு. மனதை அலைய விடாதே. உன் தாயையும் தந்தையையும் அரண்மனை மகளிரையும் நினைத்துக் கொள்ளாதே. நல்ல உறவுகள் பற்றி யோசிக்காதே பசிக்கிற தல்லவா பையிலுள்ள வெல்லக் கட்டி, மரத்திலுள்ள கொய்யாப் பழம் இவைகள் இரண்டு பற்றி மட்டுமே நீ நினைக்க வேண்டும். இந்த இடம் தாண்டியதும் பழ மரங்கள் அதிகம் இல்லாது போகும். நாம் ஆல மொக்குகளையும் அரச இலைகளையும் வேப்பந்

துளிர்களையும் வில்வ இலைகளையுமே சாப்பிடவேண்டி இருக்கும். அதற்கும் தயாராக இரு.''

''நன்றி துரோணா. நான் உன் போலவே இருப்பதற்கு முயற்சிக்கிறேன்'' துருபதன் உதறி எழுந்தான்.

நண்பர்கள் இருவரும் சந்தோஷமாக நடந்தார்கள்.

துரோணர் சட்டென்று நின்றார். மூச்சு ஆழ உள்ளிழுத்துக் கொண்டார். காதை கூர்மையாக்கிக் கொண்டார்.

''என்ன துரோணா. ஏன் நின்று விட்டாய்.''

''சிங்கங்கள்'' துரோணர் ஒரே வார்த்தையில் பதில் சொன்னார்.

''எங்கே.''

''ஒரு காத தூரத்தில் நிறைய சிங்கங்கள் இருக்கின்றன. அந்த வாசனை என் மூக்கைத் தொட்டு விட்டது.''

''சிங்கத்திற்கென்று வாசனை உண்டா''

'' உண்டு ஒவ்வொரு மிருகத்திற்கும் வாசனை உண்டு. சிங்கம் இங்கு வெகு அருகே சிறுநீர் கழித்திருக்கிறது. அதாவது சிங்கத்தின் எல்லை ஆரம்பமாகி விட்டது. நாம் இப்போது சிங்கத்தின் எல்லைக்குள் போகிறோம். நாம் நடந்து வருவதையும் சிங்கம் வெகு சீக்கிரம் உணர்ந்துவிடும். வாசனையால் அறிந்து விடும். அது தாக்குமோ அல்லது தாண்ட விடுமோ தெரியவில்லை. நாம் மிகமிக கவனமாக இருக்க வேண்டும்.''

''எவ்வளவு சிங்கங்கள் இருக்கும் என்று நினைக்கிறாய்.''

''ஒன்றுக்கும் மேற்பட்ட சிறுநீர் வாசனைகள் வந்தன அதாவது எல்லைக் கோடு மறுபடி மறுபடி

புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. அதாவது எல்லைக்கோடு புதுப்பிக்கும்படியாய் ஏதோ நடந்து கொண்டிருக்கிறது. ஒரு வேளை, இரண்டு சிங்கங்களுக்குள் எல்லைத் தகராறு இருக்கலாம், நான் தலைவனா நீ தலைவனா என்ற போட்டி நடக்கலாம். இதைத் தாண்டி நீ வரக்கூடாது; அதைத் தாண்டி நான் வரக்கூடாது என்ற ஆதிக்கங்கள் ஏற்பட்டிருக்கலாம். எனவே ஒரு போர் நடக்கின்ற இடத்திற்குள் நாம் நுழைகின்றோம். யுத்த அபாயம் நிறைந்த ஒரு இடத்திற்குள் நாம் போகப்போகிறோம்.

மனிதர்களால் ஏற்படுகிற யுத்தம் என்றால், நாங்கள் வழிப்போக்கர்கள் என்று கூறி தப்பித்துக் கொள்ளலாம். சிங்கங்கள் யாரைப் பார்த்தாலும் சீறும். எப்போது வேண்டுமானாலும் சீறும். ஆகவே, ஒவ்வொரு புள்ளி அசைவுகளையும் மிக கவனமாக மனதில் குறித்துக் கொண்டு, தைரியமாய் வா'' துரோணர் முன் நடந்தார். துருபதன் பின் தொடர்ந்தான்.

அவனுக்குள் லேசாய் ஒரு பயம் இருந்தது. அந்த பயம் மூச்சு விடுதலை அதிகரித்தது.

அடர்ந்த மரங்களை மேலேறியும், அடியில் புகுந்தும் தாண்டியதும் பளிச்சென்று ஒரு பெரிய புல்வெளி தென் பட்டது. மேடான சரளைக்கல் நிறைந்த ஒரு இடத்தில் கிட்டத்தட்ட நாற்பது சிங்கங்கள் படுத்துக் கிடந்தன. இரண்டே இரண்டு ஆண் சிங்கங்கள் இருக்க, மற்றவை கள் எல்லாம் பெண் சிங்கங்களாகவும் குட்டிகளாவும் இருந்தன.

இந்த சிங்கக் கூட்டத்தைத் தாண்டி வெகுதொலைவே வேறு ஒரு இடத்திலிருந்து தனியே ஒரு கர்ஜனை கேட்டது.

''நான் நினைத்தது சரியாகி விட்டது. துருபதா. இது யுத்த பூமிதான். அங்கே இருக்கிற சிங்கம், தன் இருப்பை இந்த சிங்கங்களுக்கு இடைவிடாது தெரிவித்த படியே இருக்கிறது. அந்த கர்ஜனையில் ஒரு பயமுறுத்தல் இருக்கிறது. ஆனால், இந்த சிங்கங்கள் அந்த கர்ஜனை யைக் கண்டு பயப்படவில்லை.

இதற்கு முன் இங்கு யுத்தம் நடந்திருக்கும் என்று தோன்றுகிறது. சில சிங்கங்கள் லேசாக காயப்பட்டிருக் கின்றன. இரண்டு ஆண் சிங்கங்களில் ஒன்றுதான் முழு பலத்தோடு இருக்கிறது. மற்றது சற்று தளர்ந்து இருக் கிறது.

முழு பலத்தோடு இருக்கிற ஆண் சிங்கம் நேற்றோ அல்லது முன் தினமோ கடும் போரில் ஈடுபட்டிருக்க வேண்டும். அதன் கால் சற்று பிசகியிருக்கிறது. பெண் சிங்கங்கள் எப்போது வேண்டுமானாலும் யுத்தம் வரலாம் என்று நாலா திசையும் பார்த்துக் கொண்டிருக்கின்றன. குறிப்பாய் இரண்டு பெண் சிங்கங்கள் கர்ஜனை வரும் திசையை அடிக்கடி திரும்பிப் பார்க்கின்றன. ஒருவேளை அந்தப் பெண் சிங்கங்களின் காதலன். அந்த ஆண் சிங்க மாக இருக்கலாம். அது துரத்தப்பட்டது. இந்தப் பெண் சிங்கங்களுக்கு வருத்தமாக இருக்கலாம்.

நாம் தாண்டுகிறபோது நம்மை இந்த சிங்கங்கள் ஒன்றும் செய்யாமல் இருக்க வேண்டும்.''

''ஏதேனும் செய்ய வந்தால் என்ன செய்வது துரோணா.''

''வில்லில் நான் பூட்டி, பலக்க ஒலித்து எழுப்பினால், சிங்கம் பயந்து பின் வாங்கிவிடும். அதை மீறி மீண்டும் வந்தால், கொண்டைப் பிரம்பால் மண்டையில் அடிக் கலாம். அதையும் மீறி அருகே வந்தால், அம்பால் நெஞ்சில் அடித்துக் கொல்லலாம்.''

''சிங்கங்கள் நம்மை ஒன்றும் செய்யாமலும் இருக் குமோ...'' துருபதனுக்கு இப்படியொரு ஆசை இருந்தது.

''இருக்கலாம். நமக்கும் இவர்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று அவைகள் அமைதியாக இருக்கலாம். அந்தப்பக்கம் மான்களும் வரிக்குதிரைகளும் நடமாடிக் கொண்டிருக்கின்றன. இந்தப் பக்கம் தரையில் குரங்குகள் இருக்கின்றன. சிங்கம் போர் வெறியில் இருந்தால் குரங்குகள் தரையில் இருக்காது.

மயில்கள் கூட நடனமாடிக்கொண்டிருக்கின்றன. பற வைகள் பெருங்கூச்சல் எதுவும் போடவில்லை. காடு முழு வதும் அமைதியாக இருக்கிறது. அந்த ஒற்றைச் சிங் கத்தின் கர்ஜனை தவிர, வேறு சப்தங்கள் இல்லை. எனவே, நாம் ஏதும் பேசாமல், சிங்கங்கள் இருக்கின்ற பகுதியைத் தவிர்த்து நேர்க்கோடாய், அந்த கர்ஜனை நடக்கிற இடத்திற்குப் போவோம்.''

அந்த ஒற்றைச் சிங்கம் நம்மை தாக்காது. இருப்பினும் இந்த இடத்தை அமைதியாகவே கடக்கலாம்,

''ஒற்றைச்சிங்கம் தாக்கும் என்று நினைக்கிறாயா.''

''தனித்து விடப்பட்ட எந்த மிருகத்தின் மனம் பேதலித்துதான் இருக்கும்.கூட்டத்தோடு இல்லாத எந்தப் பிராணியும் பெரும் அவஸ்தைக்குள்ளாகிதான் இருக்கும். மனிதன் மட்டுமே தனித்து வாழ தெரிந்தவன் துருபதா, தனித்து வாழ்கிற சுகம் மனிதனுக்குத்தான் கொடுக்கப் பட்டிருக்கிறது.

மிருகங்கள் துணையில்லை என்றால் தவித்துப் போய்விடும். இணையில்லை என்றால் துடித்துப் போய்விடும். எனவே, துரத்தப்பட்ட அந்த சிங்கம் மிகக் கோபத்தில் ஆத்திரத்தில் வெறுப்பில் இருக்கும்.

இந்த சிங்கங்கள் பற்றி நாம் கவலை கொள்ள வேண்டாம். அந்த ஒற்றைச் சிங்கத்தைப் பற்றி கவன மாய் பார்த்துக் கொண்டு முன்னேறு'' துரோணர் நடந் தார். துருபதன் பின்தொடர்ந்தான்.

அவர்கள் அந்த சிங்கக் கூட்டத்தை அமைதியாய் கடந்தார்கள்.

''துரோணா...துரோணா...துரோணா...'' துருபதன் மெல்ல கூப்பிட்டான்.

அந்த ஆண் சிங்கம் தலை நிமிர்த்தி துருபதனைப் பார்த்தது.

துரோணர் திரும்பி என்ன என்று செய்கை செய்தார்.

''இரண்டு நாழிகை இங்கே தங்கிவிட்டு, சிங்கங்களை வேடிக்கை பார்த்துவிட்டு செல்லலாமா'' அடிக்குரலில் ரகசியமாய் துருபதன் கேட்டான்.

இவர்கள் இருவரும் இலைகளற்ற ஒரு மரத்தின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டார்கள்; சிங்கங்களை வேடிக்கை பார்த்தார்கள்.

சிங்கங்கள் அவர்களை வினோதமாக பார்த்தன. ஒரு பெண் சிங்கம் நீங்கள் பார்ப்பது பிடிக்கவில்லை என் பது போல, காலை தரையில் அழுத்தி எழுந்து நின்று, அவர்களைப் பார்த்து உறுமிற்று. அந்த உறுமலுக்கு பதில் கர்ஜனை தொலைவிலிருந்து வந்தது.

அந்த ஆண் சிங்கத்தின் கர்ஜனை கேட்டதும் பெண் சிங்கத்தின் உறுமல் அதிகமாயிற்று. பெண் சிங்கம் கர்ஜனை வரும் திசை நோக்கி எழுந்து நின்று மறுபடியும் உறுமிற்று. அங்கிருந்து கர்ஜனை வெகு வேகமாகக் கேட்டது.

இங்குள்ள இரண்டு ஆண் சிங்கங்களும் எழுந்து நின்றன. அந்தப் பெண் சிங்கத்தை உறுத்துப் பார்த்தன.

ஆண் சிங்கம் எழுந்தால் பெண் சிங்கம் உட்கார்ந்து விடவேண்டும். நிற்கிற எந்தப் பிராணியும் சிங்கத்திற்குப் பிடிக்காது. தான் வரும்போது மண்டியிட்டு விடவேண்டும். அது சிறுத்தையாக இருந்தாலும் புலியாக இருந்தாலும் கோவேறு கழுதையாக இருந்தாலும் ஓநாயாக இருந்தாலும் சிங்கம் தன் எதிரே நிற்கின்ற மிருகத்தை விரும்புவதில்லை.

நிற்பது என்பது தாக்குதலுக்குத் தயாரான நிலை. தாக்க மாட்டேன் என்று ஒரு மிருகம் தரையில் படிய அமர்ந்துவிட வேண்டும். அதுதான் தலைவனுக்கு கொடுக்கின்ற மரியாதை.

ஆண் சிங்கம் எழுந்தும் அந்தப் பெண் சிங்கம் அமரவில்லை. ஒருவேளை துரத்தப்பட்ட சிங்கத்தின் காதலியாக அது இருக்கலாம்'' என்று துரோணர் சொன்னார்

உட்காராத பெண் சிங்கத்தை நோக்கி ஆண் சிங்கம் வேகமாகப் போயிற்று. இழுத்து தலையில் அடித்து அமர வைத்தது. அந்தப் பெண் சிங்கம் தரையில் அமர்ந்ததும், மறுபடியும் எழ முயற்சிக்க, அந்த ஆண் சிங்கம் கர்ஜித்தது. அருகே போய் தலைப்பகுதியை கடித்தது.

பெண் சிங்கம் வலி தாங்காமல் அலறியது. நான்கு கால்களையும் வானம் பார்த்து நிற்க வைத்து, வால் சுருட்டி ஈனஸ்வரத்தில் கெஞ்சியது.

வயதான சிங்கம் கர்ஜனை வந்த இடத்தை நோக்கி ஓடத்துவங்கியது.

மற்ற பெண் சிங்கங்கள் எழுந்து நின்றன. ஓடிய கிழ சிங்கத்தைத் தொடர்ந்து வலுவுள்ள ஆண் சிங்கம் போயிற்று.

அதன் கர்ஜனை சவாலுக்கு அழைக்கும்படி உரத்து இருந்தது

எதிர் பக்கத்திலிருந்து சிங்கம் நகர்வது தெரிந்தது. கிழச்சிங்கமும் எதிர்பட அந்த தனி சிங்கமும் வேகமாக ஒன்றை ஒன்று தாக்குகின்ற வேகத்தில் ஓடி வந்தன. பளிச்சென்று தாக்கிக் கொண்டன. கட்டிப் புரண்டன. கடித்துக் குதறின. அடித்துக் கிீறின.

அந்த சண்டையைப் பார்த்துவிட்டு வலுவுள்ள ஆண் சிங்கம் முழு வேகத்தில் அந்த சண்டையை நோக்கி ஓடியது.

இப்படியொரு ஓட்டம் துருபதன் வாழ்நாளில் பார்த்ததேயில்லை.

அந்த சிங்கம் மேலே முட்டினால் கூட ஒரு மனிதன் மரணம் அடைந்து விடுவான். அத்தனை வேகத்தில் கனத்த உடம்போடு சண்டை நடக்கிற இடத்தை நோக்கி ஓடி அங்கே கிழ சிங்கத்தோடு மோதிக் கொண்டிருந்த இன்னொரு சிங்கத்தின் மீது பலமாக மோதியது. அடித்து தூக்கிப் போட்டது.

சுருண்டு விழுந்த சிங்கத்தின் முதுகில் பல் பதித்து, கடித்து, திருப்பியது. தலையில் அடித்தது. புரட்டிப் போட்டது

அந்த சிங்கம் வலி தாங்காமல் ஓட தொடர்ந்து முதுகில் அடித்தது. பின்பக்கம் தாக்கியது. பின்னங்கால்களை கடித்து ரணப்படுத்தியது.

பெண் சிங்கங்கள் பதறின. சண்டை நடக்கும் இடத்தை நோக்கி மெல்ல ஓடின.

குட்டிகள் பின் தொடர்ந்தன.

எல்லாம் சற்று தொலைவில் நின்று வேடிக்கை பார்த்தன.

புல்லில் உருண்டு புரண்டு சண்டை போட்டு, அந்த தனித்த சிங்கத்தின் முகத்தை பலமாக கீறிவிட, கண்ணில் ரத்தம் வடிய அந்த தனித்த சிங்கம் அடர்ந்த காடு நோக்கி ஓடத்துவங்கியது.

இங்கிருந்த வலுவான ஆண்சிங்கம் அதைத் துரத்தி, அது உள்ளே போன புதர் வரையில் போய் நின்றது. அந்தப்புதருக்கருகே சிறுநீர் கழித்தது. மெல்ல திரும்பியது.

இந்த சிறுநீர் வாசனையைத்தாண்டி அந்த சிங்கம் வரக் கூடாது என்று எழுதாத கட்டளையாக ஒரு சட்டம் போட்டது.

மறுபடி வயதான ஆண் சிங்கத்தோடு சேர்ந்து கொண்டு பெண் சிங்கங்கள் நோக்கி வந்தது.

பெண் சிங்கங்கள் இரண்டு ஆண் சிங்கங்கள் வந்தவுடன், பளிச்சென்று படுத்துக் கொண்டன. முரண்டு செய்யும் அந்தப் பெண் சிங்கம் மட்டும், மறுபடி எழுந்து நிற்க, இந்த முறை ஆண் சிங்கம் அதன் அருகே வேகமாகப் போய், அதன் தலையில் வலது முன்காலை வைத்து அழுத்தி, இடது பின்காலை மற்றகால்களை அழுத்திக் கொண்டு, தரையில் படுக்கவைத்து அதன் பின்னே போய், புணர்ந்தது வேகமாக 'இயங்கியது. பிறகு அதை லேசாக உதைத்து அப்புறப்படுத்தியது.

அந்தப் பெண் சிங்கம் மறுபடியும் மல்லாந்து, கால்களை வானத்தை நோக்கி நீட்டி, வால் சுருட்டி, ஈனஸ்வரத்தில் கெஞ்சியது.

இந்த முறை அந்த ஆண் சிங்கம் அற்புதமான ஒரு வெற்றிக்களிப்போடு முன்னே நடக்க, மற்ற பெண் சிங்கள் பின் தொடர்ந்தன.

அந்தப் பெண் சிங்கங்கள் போன பிறகு அந்தக் கிழட்டு சிங்கம் நடந்தது.

துருபதனும் துரோணரும் வாய் பிளந்து இந்தக் காட்சியை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''வலிவு வலிவுதான் வேதமில்லையா துரோணா''

''கானகத்தில் வலிவுதான் வேதம்.''

''ஏன் நகரத்திலே வலிவு வேதமாகாதா துரோணா''

''துருபதா வலிவு என்பது இடத்திற்கு இடம் வித்தியாசப்படும்.

ஒரு இடத்தில் கருணை வலிவு. ஒரு இடத்தில் புத்தி வலிவு. ஒரு இடத்தில் உடம்பு வலிவு. ஒரு இடத்தில் சொல் வலிவு. ஒரு இடத்தில் அமைதி வலிவு. எனவே, வலிவு என்பது மிருகங்களுக்கு உண்டானது போல், வெறும் அடிதடியாக மனிதனுக்கு இருப்பதில்லை. புத்திமானே பலவான் என்கிற ஒரு பழமொழியும் உண்டு.

அந்த சிங்கம் புத்தியாலா ஜெயித்தது. வலிவால் அல்லவா ஜெயித்தது. வலிவு கொடுத்த சுகத்தைப் பார்த்தாயா...

பதினோரு பெண் சிங்கங்கள்.

ஒரு ஆண் சிங்கம். ஆண் நடந்து வந்தவுடன் எல்லா பெண் சிங்கங்களும் படுத்து, நான் கூடலுக்குத் தயார் என்று காத்திருக்கின்றன. மறுத்தால் ஆண் சிங்கம், பெண் தலைமீது கால் வைத்து அழுத்திப் புணர்கிறது.

புணர்வதுதான் இங்கு தண்டனை. ஒரு அறை கூவல் என்ன செய்ய முடியும் என்கிற ஒரு இறுமாப்பு. பெண் சிங்கங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால், ஆண் சிங்கங்கள் சண்டை போடும்.

என்னுடைய காதலியைத் தொட்டாய் அல்லவா... உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன் என்று அந்த தனித்துவிடப்பட்ட சிங்கம் இடையறாது கர்ஜித்துக் கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.

இந்த சண்டை இத்தோடு முடிந்து விடாது. மறுபடி நடக்கும். தினம் தினம் நடக்கும். யார் பெரியவர் என்ற தீர்மானமாகும் வரை நடக்கும். யாரோ ஒருவர் உயிரோடு இருக்கும் வரை நடக்கும்.

இது மிருக வெறி. மனிதர்களுக்கு இப்படி விதியில்லை துருபதா.'' துரோணர் சொல்ல அவர்கள் இருவரும் தரையிறங்கினார்கள். நடந்தார்கள்.

அந்த ஒற்றைச்சிங்கம் இருக்கிற இடத்தை மெல்லத் தாண்டினார்கள்.

அந்த சிங்கம் தரையோடு தரையாய் படுத்திருந்தது.

''ஆனால் இந்த சிங்கத்தைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது துரோணா.''

''என்ன செய்யச் சொல்கிறாய் துருபதா. இதனுடைய தலையெழுத்து அப்படி''

''நாம் மாற்ற முடியாதா.''

''துருபதா.'' துரோணர் சிரித்தார்.

''சிங்கத்தின் தலையெழுத்தை மாற்றுவதற்கா நாம் கானகத்திற்கு வந்திருக்கிறோம். அவைகள் வாழ்க்கை அவைகளுக்கு. நம் வாழ்க்கை நமக்கு. நாம் எதற்காக அவர்கள் வாழ்க்கையில் தலையிட வேண்டும்.''

''துரோணா. எனக்கு ஒரு உதவி செய். இந்த சிங்கத்திற்கு எப்படியாவது வலிவு கொடு.''

''இது தேவையற்ற வேலை துருபதா...''

''இல்லை. இந்த சிங்கம் ஜெயிக்க வேண்டும்...''

''ஏன்...எதற்கு ஜெயிக்க வேண்டும்.''

''இதனுடைய காதலியை அந்த சிங்கம் என்ன பாடு படுத்தியது என்று பார்த்தோமே...''

''அதனால் என்ன. அவர்கள் கூட்டத்தில் இதெல்லாம் செய்யலாம் என்று விதி இருக்கிறது. நாம் தான் செய்யக் கூடாது. நாம் செய்தால் அது கற்பழிப்பு, கொலை, அவர்கள் வாழ்க்கையில் இதற்கு வேறு அர்த்தம்.''

''இந்த சிங்கத்தை ஜெயிக்க வைத்தால் என்ன.''

''ஏன் ஜெயிக்க வைக்கவேண்டும். தானாக ஜெயிக்கட்டுமே...''

''இல்லை. கண் எதிரே இதற்கு நடந்த அவமானமும் வேதனையையும் பார்த்தோம். ஒருவன் வேதனைப்பட்டு அவமானப்பட்டு இருக்கிறபோது, நாம் அவனுக்கு உதவி செய்யக்கூடாதா?''

''இதில் சரிதவறு என்கிற விஷயம் முடிவு செய்ய முடியாது. அந்த சிங்கங்களுடைய உள்ளுணர்வு என்ன என்று நமக்குத் தெரியவில்லை. நாம் ஒதுங்கியிருப்பதே நல்லது.''

''இல்லை துரோணா. நாம் ஏதேனும் செய்தாக வேண்டும்.''

துருபதன் பிடிவாதம் பிடித்தான்.

''என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறாய்.''

''குறைந்தபட்சம் அந்த சிங்கத்தை ப்போய், தடவியாவது கொடுக்க வேண்டும்.''

''துருபதா. முட்டாள் தனமாகப் பேசாதே, அது வெறுப்பில் இருக்கிறது. அதற்கு நீ தடவிக்கொடுக்கிறாய்

தெரியுமா அல்லது தாக்க வருகிறாய் என்று என்று புரியுமா. எழுந்து சீறி அடித்தால் சின்னாபின்னமாகி விடுவாய். தள்ளி வா.''

''இல்லை அந்த சிங்கம் பலமாக காயப்பட்டிருக்கிறது. அதற்கு ஆதரவு இப்போது தேவையென்று எனக்குத் தோன்றுகிறது. அது மூச்சிரைத்து கிடப்பதைப் பார்.''

''துருபதா, அது ஒய்வெடுத்துக் கொண்டிருக்கிறது. சிறிது நேரத்தில் அதற்கு ரத்தப்போக்கு நின்றுவிடும். ரத்தப்போக்கு நின்றபிறகு, அது மான்களையோ மீன் களையோ அடித்துத்தின்னும். பலம் சேர்க்கும். இந்தத் தனிமை அதற்கு அசாத்திய நம்பிக்கையையும் வேகத் தையும் கொடுக்கும். மறுபடி அது போராடும், அதன் வாழ்க்கையை அதனிடம் விட்டுவிட்டு நாம் போவோம்.''

''இல்லை. இப்பொழுதே இந்த சிங்கத்தை ஆறுதல் படுத்தவேண்டும்.

மறுபடி இந்த சிங்கத்தை உசுப்பி சண்டை போட வைக்க வேண்டும். இதற்கு என்ன செய்ய வேண்டும் என்றால், சிறு உயிர்களை அடித்து. அறுத்து பக்குவம் செய்து. அதோடு சற்று மூலிகைகளை கலந்து, இந்த சிங்கத்தை உற்சாகப்படுத்தும் வகையில் உணவாய் போட்டால் என்ன.''

'உணவால் மட்டும் சண்டையிடும் உற்சாகம் வந்து விடாது.''

''பிறகு வேறு என்ன வேண்டும்.''

''மனதை உற்சாகப்படுத்த வேண்டும்.''

'' அதை எப்படி செய்வது துரோணா.''

''மந்திரஜபம் செய்வதால் சிங்கம் ஒருவேளை வேகம் கொண்டு இயங்கலாம்.''

''அப்படியா...என்ன மந்திரம் அது. சரி செய்து பார்க்கலாம்.''

''அமிர்தசஞ்சீவினி மூலிகை இங்கே அருகேயுள்ள நதிக்கரையில் கிடக்கும். நான் போய் பறித்துவருகிறேன். நீ கொழுத்த மீன்களை அடித்துவா. அந்த மீன்களுக்குள் மூலிகைச் சாறை பிழிந்து, லேசாக மீனை சூடு பண்ணி உணவாக சிங்கத்திற்கு கொடுப்போம். சிங்கம் உண்ணுமா என்று தெரியவில்லை. உண்டால் சிங்கம் அரை நாழிகையில் பலமாகிவிடும்.''

''அது மட்டும் போதுமா.''

''தெரியவில்லையே...''

''போதாது என்று நான் நினைக்கிறேன்''

துருபதன் குழந்தை போல பேசினான்.

துரோணர் வாய் விட்டுச் சிரித்தார்.

''வேறு என்ன செய்ய வேண்டும் என்று நினைக் கிறாய், துருபதா.''

''நீ சொன்னாயே, மந்திர ஜபம் செய்து ஏற்றலாம் என்று, அதையும் செய்வோமே.''

''வயசாளிகளுக்கும் நோயுற்றவர்களுக்கும் குழந்தை களுக்கும் உற்சாகம் ஏற்றுவதற்காக ஒரு மந்திர ஜபம் இருக்கிறது. அந்த மந்திர ஜபத்தை செய்து, சற்று நீர் தெளித்தால் அவர்கள் மனச்சோர்விலிருந்து உடனடியாக வெளிவந்து உற்சாகமாவார்கள்.

''அப்படியா...மீன் உணவு போட்டு விட்டு, மந்திர ஜபமும் செய்யலாம்.''

அவர்கள் செய்தார்கள்.

மீனை சிங்கம் கடித்துத் தின்றது. இவர்களை ஒரு கண்ணால், ஆச்சரியத்தோடு பார்த்தது. எழுந்து மெல்ல நடமாடியது. நாக்கால் தன் கைப்புண்களை துடைத்துக் கொண்டது. உள்ளங்கையால் முகத்தை தடவிக் கொண்டது.

துரோணர் சிங்கத்தின் உற்சாகத்திற்கு மந்திர ஜபம் செய்தார். அமிர்த சஞ்சீவினி மூலிகை ரசம் ஒரு சிறு தொன்னையில் எடுத்து, சிங்கத்திற்கு அருகே போய் அதன் கண்களில் கொட்டினார்.

சிங்கம் வேகமாக கர்ஜித்தது. சிறிது எரிச்சலால் தள்ளாடியது. வில்லை தரையில் அடிக்க விலகிப்போய், படுத்து அமர்ந்து கொண்டது. சற்று நேரம் மௌன மாக இருந்தது.

மருந்து கண்களில் விழுந்து ரத்தப்போக்கை உடனடி யாக நிறுத்தியது, காயத்தை விரைவே மாற்றியது.

உள்ளே போன அமிர்தசஞ்சீவினி மருந்தும் அதற்கு உற்சாகத்தை கொடுத்தது.

துரோணரும் துருபதனும் அதற்கு வழிவிட்டு, விலகிக் கொண்டார்கள்.

சிங்கம் எழுந்து நின்றது. மிக வேகமாக கர்ஜித்தது. புல்வெளி நோக்கி பாய்ந்து ஓடத்துவங்கியது.

அங்கு மிக மோசமான ஒரு போர். நடக்கத் துவங்கியது.

புல்வெளியிலிருந்த ஆண் சிங்கங்கள் திகைத்தன. தனித்த சிங்கம் ஓடி வருவதைப் பார்த்து போருக்குத் தயாராயின. இரண்டு ஆண் சிங்கங்களை ஒரே வீச்சில் தனித்த சிங்கம் அடித்துச் சாய்த்தது. பாய்ந்து பாய்ந்து

குதறியது. விதம்விதமாக விரட்டியது. மடக்கி கழுத்தைத் திருப்பி உடைத்து ஒரு சிங்கத்தைக் கொன்றது. அடுத்த சிங்கத்தை முகத்தில் அடித்து கிழித்தது. அடுத்த வாயை அழுந்தக் கடித்து திருப்பிப் போட்டது. பற்களால் முக சிங்கம் அடிதாங்காமல் கானகத்தின் மறு கோணத்திற்கு ஓட, அந்த சிங்கம் பெண் சிங்கங்களை ஆக்ரோஷமாய் சுற்றி வந்தது. வாலிப

பெண் சிங்கங்கள் மறுபடியும் தரைபணிந்தன.

ஒரு இளமையான பெண்சிங்கத்திடம் அந்த ஆண் சிங்கம் நிற்க, அந்தப் பெண் சிங்கம் நான்கு கால்களை யும் வானத்திற்கு காட்டி, நான் தயார் என்று அறிவித்தது.

அந்த ஆண் சிங்கம் ஆக்ரோஷமாக பெண் சிங்கத் தின் தலையைக் கவ்வியபடி அதோடு கூடிப்புணர்ந்தது.

மாணவர்கள் இருவரும் அதை வேடிக்கை பார்த்தார் கள். இறங்கி அடர்ந்த காடு நோக்கி நடக்கத் துவங்கி னார்கள்.

அன்றிரவு படுக்கும்போது, அந்த சிங்கங்கள் ஞாப கமே அவர்களுக்கு வந்தது. ஆளுமை செய்கிற ஆசை அவர்களுக்குள் அதிகமாகப் படிந்தது,

வாழ்க்கையில் சில காட்சிகளை மனிதர்கள் காணா மல் இருப்பது நல்லது. கண்டுவிட்டால் மரணபந்தமும் அந்தக் காட்சிகள் மனதிலிருந்து நீங்காமல் மறுபடி மறு படி ஏதேனும் ஒரு செயலை துளிர்க்க வைத்துக் கொண்டி ருக்கும்.

துரோணருக்கும் துருபதனுக்கும் இந்த சிங்கத்தின் ஆக்ரோஷமான கூடல் கடைசிவரை மறையவே இல்லை. அதை சிந்திக்கசிந்திக்க அவர்களுடைய ரஜோகுணம் அதி கரித்தது. அந்த ரஜோகுணம் அதிகரிக்க, அவர்கள் காடு

களை எளிதாக தாண்டினார்கள். உறக்கமில்லாமல் ஓடினார்கள். பசி தாங்கி அமைதியாய் இருந்தார்கள்.

வாழ்க்கையில் சிங்கம் போல் போராட வேண்டும் என்று நினைத்துக் கொண்டார்கள்.

முதல் நாள் போல் அல்லாமல் இரண்டாம் நாள் அமைதியாக கழிந்தது. வனத்தின் சேறு நிறைந்த பகுதியை கவனமாக அவர்கள் தாண்டினார்கள். ஒவ்வொரு அடியும் மிகுந்த கவனத்தோடு எடுத்து வைக்க நேர்ந்தது.

பதட்டப்பட்ட துருபதனை அமைதிபடுத்தி, பல புதர்களில் இருந்தும் சரிவுகளில் இருந்தும் காப்பாற்றி, துரோணர் மிக கவனமாக வேறு ஒரு பகுதிக்கு சாமர்த்தியத்துடன் நகர்ந்தார்.

மூன்றாம் நாள் காலை அவர்கள் வழியை ஒரு யானைக்கூட்டம் மறித்திருந்தது உள்ளே நுழைய முற்பட்ட துருபதனை துரோணர் தடுத்து நிறுத்தினார்.

“இதென்ன...சிங்கக் கூட்டங்கள் என்று நினைத்தாயா. ஓடித்தப்பித்துக் கொள்ளலாம் என்று யோசிக்கிறாயா. யானைகள் மிகக் கூர்மையானவை. மிக வேகமானவை. மிக மூர்க்கமானவை. அது தவிர இந்த யானைக்கூட்டத்தில் எந்தச் சண்டையும் இல்லை. இவைகள் மிக ஒற்றுமையுடன் நமது வழியை மறித்திருக்கின்றன.

யானைகள் சிங்கங்கள் போல் பயந்தவை அல்ல. காட்டு ராஜா என்று சிங்கத்தை வர்ணித்தாலும் சிங்கம் கடைசி நேரம் தனது திட்டத்தை மாற்றிக் கொண்டு, வேறுபக்கம் பாய்ந்தோடி விடும். எதிரி திடமாக இருப்பது தெரிந்தால் வந்த வேகத்திலேயே பின்வாங்கும்,

நூறு தப்படி தூரத்தில் நின்றிருந்த சிங்கம் வேகமாக ஒரு ஆளைத்தாக்க வந்து, அந்த ஆள் ஈட்டியை தயாராக வைத்துக் கொண்டு, உறுத்து சிங்கத்தின் கண்களைப் பார்த்தால் போதும். சிங்கம் எழுபத்தி ஐந்தாவது தப்படியில் பளிச்சென்று திசை திரும்பும். வேறு பக்கமாய் ஓடிப்போய் இடைவிடாது கர்ஜிக்கும்.

சிங்கம் கூட்டமாய் வேட்டையாடும் திறனுடையது. இரண்டு சிங்கங்கள் தாக்குவது போல் போக்கு காட்ட மூன்றாவது சிங்கம் மிகக் கடுமையாகத் தாக்கும். இந்த மூன்று சிங்கங்களையும் இரண்டு பேர் பிரிந்து நின்று, ஒரு சிங்கத்தை ஊனப் படுத்திவிட்டு, இரண்டாவது சிங்கத்தை முறைத்துப் பார்த்தால், மூன்றாவது சிங்கம் அருகே வராது.

அதையும் தவிர, சிங்கத்திற்கு நான் ஒலி பயம். மெல்லிய அதிர்வுகள் கொண்ட சப்தத்தை சிங்கத்தால் தாங்க முடியவில்லை. பறையடித்தால் முறைக்கும். சிங்கம் மணியடித்தால் மிரளும்.

நன்கு வேட்டையாட உணவு முடித்து தன் குடும்பத்தோடு, ஆற அமர சிங்கம் சாப்பிட்ட பிறகு, அருகே யார் வேண்டுமானாலும் நடக்கலாம். சிங்கம் எழுந்து தலை தூக்கிப் பார்த்துவிட்டு மறுபடி படுத்துக் கொள்ளும்.

நல்ல உணவிற்குப் பிறகு, தூக்கம் போடும் சிங்கம் போல, சாதுவான பிராணி உலகத்தில் எதுவுமில்லை.

ஆனால், யானைகளை இப்படியெல்லாம் வகைப் படுத்தவே முடியாது. யானைகளும் கலவரமான மிருகங்கள்தான். ஒரு வில்நாணை இழுத்துக்கட்டி, பயங்கரமான ஒரு முறை ஒலி செய்தால் யானைகள் திக்குக்கு ஒன்றாய் நகருவதை மிகக் கூர்மையாய் கவனித்தவர்கள் கண்டு கொள்வார்கள்.

போகாது. பலம் பொருந்திய யானை

ஒரே திக்கில் யானைகள் எந்த திக்கிலிருந்து ஓசைவரும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக சட்டென்று நான்கு திசைகள் நோக்கி திரும்பிவிடும், முன்னேறும். தேடிப்பார்க்கும், எதுவும் இல்லை என்று சொல்வதற்காக மத்திம இடத்திற்கு வரும். மறுபடியும் நாண் ஒலி எழுப்ப மறுபடியும் திசைகள் தேடி அலையும்.

ஆண் யானைகள் அலைய பெண் யானைகள் குட்டி யானைகளை கால்களுக்கிடையே வைத்துக் கொண்டு அதே போல திக்குக்கு ஒன்றாய் எதிரிகளை எதிர்பார்த்து காத்திருக்கும். தும்பிக்கையை நாலாபக்கமும் அலைந்து வாசனை பார்க்கும். காதுகளை விறைக்க வைத்து வாலைத் தூக்கி எங்கிருந்து சப்தம் வருகிறது என்று துல்லியமாய் கேட்கும்.

''முச்சுவாங்குகிற சப்தம் கூட யானைக்குத் தெரிந்துவிடும் உடம்பின் வாசனையை தெளிவாக கண்டுபிடிக்கும் உடனே ஒரு யானை உரத்து குரல் கொடுத்து திசை காட்ட மூன்று நான்கு யானைகள் சேர்ந்தாற்போல, அந்தத்திசை நோக்கி மிகவேகமாக ஓடிவரும்.

யானைகள் ஓடிவரும் வேகம்தான் மிக பயங்கரமானவை. கோபத்தில் எது கிடைத்தாலும் யானைகள் துவம்சம் செய்யும்.

துருபதன், துரோணர் சிங்கக் கூட்டத்தை பயமுறுத்த நாண்ஒலி செய்ததுபோல, யானைக்கூட்டத்தையும் பயமுறுத்த நாண் ஒலி செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டு, வில்லை சட்டென்று வளைத்து, நாணை இறுக்கி மிக வேகமாக ஒலி செய்தான்.

துரோணர் திடுக்கிட்டார். திரும்பிப் பார்த்து, துருபதன் கையில் இருக்கிற வில்லைப் பிடுங்கினார், கீழே போட்டார்.

''என்ன முட்டாள்தனம் இது. ஏன் இப்படி ஓசை செய்கிறாய்.''

யானைகள் அதற்குள் மிரண்டுபோய் இருந்தன. நாலாபக்கமும் அலையத்துவங்கின.

வெகு எளிதில் இவர்கள் வாசனையை பெரிய யானை கண்டுகொண்டது, இவர்களை நோக்கி மற்ற மூன்று யானைகளோடு அதிரடியாய் ஓடிவந்தது.

''மரம் ஏறலாம் மரம் ஏறலாம்''

துருபதன் பெரிய மரத்தை நோக்கி ஓடினான். துரோணர் அவன் முதுகில் பளிச்சென்று அடித்தார்.

''முட்டாள். எவ்வளவு பெரிய மரமாக இருந்தாலும், யானை இடித்து சாய்க்கும். கோபமுள்ள யானையின் வலிவுபற்றி உனக்குத் தெரியாது. அதுமட்டும் ஒருவேளை மரத்தை இடித்துச் சாய்க்க முடியவில்லையென்றால், கீழே காவல் இருக்கும். நான்கு நாள் ஐந்து நாள் அசையாமல் காத்திருக்கும். உன்னால் மரத்தின் மீதிருந்து உயிரைவிடுவது தவிர வேறு வழியில்லை.

எனவே ஓடு, வளைந்துவளைந்து ஓடு. அதோ...அந்தக் குன்றில் ஒரு சரிவு இருக்கிறதா பார். நீ ஒரு திசையும் நான் ஒரு திசையுமாய் ஓடுவோம். அந்தக் குன்றின் சரிவில் ஓர் கிளையில்லா மரம் இருக்கிறது பார், அந்த மரத்திற்கு அருகில் போய் நின்று, யானை தொடர்ந்து துரத்தினால் அச்சரிவில் குதித்துவிடுவோம்.

எப்படியேனும் தப்பித்துக்கொள்.

அவர் வேறுபக்கம் ஓடினார். துருபதன் வேறுபக்கம் ஓடினான். வளைந்து வளைந்து ஓடினான். அவரும் வளைந்து வளைந்து ஓடினார்.

இரண்டாகப் பிரிந்தன. யானைகளால் யானைகள் நேராக ஓடமுடியும் வாசனைப் பிடித்துக்கொண்டு வளைந்து வளைந்து ஓடவேண்டும் என்பது யானைக்கு குழப்பமாக இருந்தது.

யானையின் குழப்பத்தை பயன்படுத்திக் கொண்டு, அவர்கள் மலைச்சரிவின் அருகே போய் நின்றார்கள்.

ஒரு யானை அவர்களைப் பார்த்துவிட்டது. எனவே, மிகவேகமாக அந்த இடம் நோக்கி வந்தது. மற்ற யானைகளும் பின்தொடர்ந்தன.

சரிவைப் பார்த்தார்கள். மிகப் பெரிய புல் சரிவு அது யானை வெகுநிச்சயமாய் இந்தச்சரிவில் இறங்காது. இறங்கினால் உருண்டு விழவேண்டியிருக்கும். ஆனால், மனிதர்கள் இறங்கிவிடலாம். இறங்கினால் எப்படி மேலேறுவது என்பதுதான் பிரச்சனை யானைவரும்வரை துரோணர் யோசித்துக் கொண்டிருந்தார். என்ன செய் வது என்று தெரியாமல் நாலுபக்கமும் பார்த்துக் கொண் டிருந்தார்.

யானைகள் இப்போது பரவலாகி அந்தக் குன்றை நோக்கி, ஒரு முற்றுகையிடும் படைபோல, மெல்ல மெல்ல மேலேறிக் கொண்டிருந்தன.

கொம்பன் யானை முன்னால் வந்து அவர்களைப் பார்த்து பிளிறியது, முழுபலத்தோடு காலூன்றி மேட்டில் ஏறியது.

துருபதன் பயந்தான். துரோணரை கட்டிப்பிடித்துக் கொண்டான். துரோணர் அவனை இறுக்க கட்டிக் கொண்டார். வில்லையும் அம்பையும் சரியாக வைத்துக் கொண்டார், அப்படியே சரிவில் படுத்துப் புரண்டார்.

நண்பர்கள் இருவரும் வெகுதூரம் வெகுதூரம் உருண்டபடியே போனார்கள்.

யானைகள் உயரத்தில் நின்று அவர்கள் உருண்டு சரிவதை வேடிக்கை பார்த்தன. ஒரு கட்டத்தில் கையிலி ருந்த கத்தியை பூமியில் வேகமாகக் குத்தி, தடுப்பு ஏற் படுத்தி, அதில் காலூன்றி. சரிவில் அழுத்தமாக நின் றார்கள்.

உடம்பெங்கும் துரோணருக்கு சிராய்ப்பு இருந்தது. துருபதன் மயங்கிக் கிடந்தான்.

வெறுமே முதுகு பக்கமாய் புல்லில் சறுக்கினால் கூட, சிறு கற்களும் குச்சிகளும் முதுகில் கோடு போடும். ரத்தம் வரவழைக்கும். நெஞ்சில் சம எடையுள்ள இன்னொரு மனிதனை படுக்க வைத்துக் கொண்டு, புல்வெளியில் சறுக்க வேண்டும் என்கிறபோது, கற்கள் துரோணரின் முதுகை பாளம் பாளமாக அறுத்தன. வலிதாங்காமல் துரோணர் அலறினார்.

ஆயினும் பல்லைக் கடித்துக் கொண்டு, சரிவில் சறுக் கினார். தரை தொட்டார். சமவெளிக்கு வந்து துருப தனை புரட்டி போட்டு விட்டு, அப்படியே குப்புறப் படுத்து, தூங்கிப் போனார்.

எதிர்பக்க குன்றில் யானைகள் வரவைப் பார்த்து ஆச்சரியப்பட்ட கழுதைப் புலிகள் ஒரு மனிதன் குப்புறப் படுத்துக் கிடப்பதைப் பார்த்து சந்தோஷமாக ஊளை யிட்டன. ரத்த வாசனையை உணர்ந்தது. ஒன்றை யொன்று பார்த்துக் கொண்டன. கிட்டத்தட்ட பதி னாறு கழுதைப் புலிகள் அரைவட்டமாய் பிரிந்து அவர் களை நோக்கி ஓட்டமும் நடையுமாய் சென்றன.

வலியிலும் அயர்ச்சியிலும் குப்புறப்படுத்த துரோ ணரின் அடிமனத்திற்குள் ஆபத்து என்று குரல் கேட்டது. திடுக்கிட்டு எழுந்தார். நாலா பக்கமும் சுற்றிப் பார்த் தார். உருவிய கத்தியோடு எல்லா திசைகளையும் கூர்ந்து கவனித்தார்.

படுத்துக்கிடந்த துருபதனை உலுக்கி எழுப்பினார். துருபதன் தள்ளாடினான். பயம் காரணமாய் விழித்துக் கொள்ளாமல் முன்னும் பின்னும் அலைந்தான்.

இன்னும் வேகமாக உலுக்கி அவனை விழிக்க வைத்தார். எகிறு குதி எகிறு குதி என்று மூங்கிலால் அவன் கால்களை அடித்தார்.

அவன் எகிறி குதித்தான்.

மறுபடி மூங்கில் வீசினார். கால் படாமல் மறுபடி எகிறி குதித்தான்.

புதர்களில் சலசலப்பு கேட்டதும் நாணை இறுக்கிக் கட்டி, பளிச்சென்று இரண்டு முறை ஒலி எழுப்பினார்.

சில கழுதைப் புலிகள் பின் வாங்கின. கழுதைப் புலிகளை பார்க்காமல் அம்பு தொடுத்து, ஒரு கழுதைப் புலியின் கழுத்தில் தைக்க வைத்தார் மறுபடியும் இன்னொன்றை அடித்தார். புதர் பக்கம் ஓடிப்போய் அவைகள் சிதறும்போது, இரண்டை பின்னங் கால்களில் அடித்து உதைத்தார். நான்கு கழுதைப் புலிகள் அடிபட்டு விழவும், மற்றவை தலைதெறிக்க குன்றை நோக்கி ஓடின.

இப்பொழுது துருபதன் மறுபடியும் சோர்வாகத் துவங்கினான். அவனை அணைத்துக் கொண்டார். மெல்ல திசைகளின் மீது கவனத்தோடு, அவனைத் தாங்கியவாறு நடக்கத் துவங்கினார்.

இரண்டு குன்றுகளுக்கு நடுவே ஆறு அற்புதமாக போய் கொண்டிருந்தது. சின்னஞ்சிறு பாதைகளில் மோதி, சுழலோடு நகர்ந்து கொண்டிருந்தது.

நண்பர்கள் இருவரும் நீர் குடித்தார்கள். முகம் கழுவிக் கொண்டார்கள். காயத்தில் தண்ணீர் அடித்து ஊற்றிக் கொண்டார்கள் ஆற்றில் இறங்கி, ஆற்றோடு

நடக்கத் துவங்கினார்கள். நீர் போக்கில் போய் எங்கேனும் படித்துறை இருக்கும் கிராமத்தில் படியேறி, கரையேறி, அது என்ன இடம் என்று தெரிந்து கொண்டு அதற்கு மேல் திசைபார்த்த, பயணத்தை தொடரலாம் என்று துரோணர் தீர்மானித்தார்.

தளர்வாக இருந்த துருபதனை உற்சாகப்படுத்திக் கொண்டு, கிராமத்திற்கு வந்தார். கரையேறினார்.

அது வேடர்கள் வசிக்கும் கிராமம். ஆயுதபாணிகளாக இரண்டு இளைஞர்கள் வந்ததும், வேட ஆளைஞர்கள் அவர்களை சுற்றிக் கொண்டார்கள். யார் என்று வினவினார்கள்

துரோணர், பரத்வாஜ முனிவருடைய சிடர்கள் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார்.கை கூப்பி வணங்கினார்.

துவண்டு கிடக்கும் துருபதனை வேடவ இளைஞர்கள் வாங்கிக் கொண்டார்கள். கொண்டு போய் விட்டுத் திண்ணையில் படுக்க வைத்தார்கள்.

பசி அதனால்தான் சோர்வு என்று விளக்கினார்கள். வாயில் தேன் தடவினார்கள். குடிக்க பழரசம் கொடுத்தார்கள், பெரிய பப்பாளிகளை அறுத்து, பரிமாறினார்கள் துருபதன் வேகமாக சாப்பிட்டான்.

துரோணருக்கு நீட்டினார்கள். பசியில்லை என்று துரோணர் மறுத்துவிட்டார்.

''நாங்கள் கொடுத்தால் வாங்கிக்கொள்ள மாட்டீர்களா'' என்று வேடுவ இளைஞர்கள் கேட்டார்கள். உடனே அவர்கள் கொடுத்த விஷயத்தைத் தொட்டு, கண்ணில் ஒற்றிக்கொண்டார்.

''தேவைக்கு அதிகமாக சாப்பிடுகிறபோது உடம்பு ஊனமாகிறது. எனவே எனக்கு இப்போது உடம்பு தேவையில்லை. அதேநேரம் உங்கள் உணவை இப்போது முழுமனதாக நான் அங்கீகரித்துவிட்டேன்,'' என்று இனிமையாகப் பேசினார்.

ஒரு பாறையில் குத்திட்டு உட்கார்ந்து துருபதனையே கவனித்துக் கொண்டிருந்தார்.

இரவுமுழுவதும் நன்கு தூங்கிய துருபதன் மறுநாள் எழுந்து உற்சாகமாய் பயணத்திற்கு தயாரானார்.

''உன்னுடைய நண்பன் உறங்கவுமில்லை உண்ணவு மில்லை. உன்னையே பார்த்துக்கொண்டிருந்தான்'' என்று வேடுவர்கள் சொல்ல, ஓடிப்போய் துரோணரை தழுவிக் கொண்டான்

''நாம் கிளம்பலாமா. குருநாதர் கவலையாக இருப் பார், மற்றவர்களும் வருத்தப்படுவார்கள். இவர்களிடம் என்ன இடம் என்பதை விசாரித்துவிட்டேன். இப்படி ஆற்றங்கரைப்பக்கமாகவே நடந்துபோக வெகுவிரைவில் நாம் அவர்களை அடைந்துவிடலாம். இன்று முழுவதும் நாம் அவர்களை அடைந்துவிடலாம். இன்று முழுவதும் நாம் நடக்க வேண்டியிருக்கும். உன்னால் முடியும் அல்லவா'' துரோணர் துருபதனை அன்பொழுகக் கேட்டார்.

துருபதன் மெல்லிய குரலில் தன் தலையைத் தடவிய வாறே பேசும் துரோணரை கனிவோடு பார்த்தான்.

''எந்த ஜென்மத்து பந்தம். எப்பேர்ப்பட்ட பந்தம் இது. தனக்காக உயிரையும் துச்சமாக மதித்து தன்னை காவல்புரிய வேண்டிய கட்டாயம் அவனுக்கு என்ன. பாதுகாப்பான இடத்திற்கு வந்தபோதும் கூட, தூங்கா

மல் தன்னையே பார்த்துக் கொண்டிருக்கிற ஒரு 'நண்பன் கிடைக்க நான் என்ன தவம் செய்திருக்க வேண்டும்.

துருபதன் நெகிழ்ந்து போனான். துருபதனும் துரோ ணரும் பேசிக்கொள்ளாமல், பரத்வாஜ் முனிவர் நிர்ண யித்த எல்லை நோக்கி வேகமாக நடக்கத்துவங்கினார்கள்.

''இதோ...இந்த ஆறு தாண்டி அக்கரைக்குப் போய் விட்டால், குருவினுடைய இடத்திற்கு போய்விடலாம்'' துரோணர் சந்தோஷமாக சொன்னார்.

துருபதன் அசையாது நின்றான். ''துரோணா'' என்றுகூப்பிட்டான்.

''என்ன துருபதா''

''இந்த மூன்று நாட்களும் நீ செய்த உதவிக்கு, நான் என்ன கைம்மாறு செய்தாலும் அது நிறைவாகாது. இருந் தாலும் இப்பொழுது இந்த நீர் மீதும் மண் மீதும் புல் மீதும் வானத்தின் மீதும் சுற்றியுள்ள உயிரினங்கள் மீதும் சத்தியம் செய்து சொல்கிறேன். என் ராஜ்ஜியத்தின் பாதியை உனக்கு நான் தர மன முவந்துள்ளேன். உன்னையும் அரசனாக்க ஆசைப்படுகிறேன்.

துரோணர் வாய்விட்டு சிரித்தார்.

''துருபதா ஏன் நெகிழ்ந்து பேசுகிறாய்?''

''நான் அந்தணன், அரசாட்சி செய்யும் உரிமை எனக்கில்லை, அரசனுக்கு அடுத்தபடியாக இருக்கும் தகுதியே என்னிடம் இருக்கிறது.

ராஜ்ஜியம் கிடைத்தாலும் அந்தணன் அரசபதவியை ஏற்ககூடாது. அரசனாக வாழக்கூடாது, எனவே எனக்கு பாதி ராஜ்யம் தரும் ஆசையை, எண்ணத்தை விட்டு விடு, அமைதியாக குருவிடம் வா''

''இல்லை துரோணா. உனக்கு ஏதேனும் ஒரு விதத்தில் நான் நன்றி செலுத்தியாக வேண்டும். ஏதாவது கேள். நான் அரசன், உனக்கு கொடுக்க கடமைப் பட்டவன். ஏதாவது கேள்''

''இப்போது வேண்டாம் துருபதா. வேறே தேனும் ஒரு சமயத்தில் எனக்கு சிறிதளவு பொருள் தேவைப்படும் போது உன்னிடம் வந்து கேட்கிறேன். மற்றபடிக்கு எனக்கு பெரிய ஆசைகள் எதுவுமில்லை துருபதா. உன் நட்பு போதும். உன் அன்பு போதும். நெகிழ்ந்து நெகிழ்ந்து என்னிடம் பேசுகிறாயே, இந்த பிரியம் போதும்''

அவர்கள் பரத்வாஜ் முனிவர் நிர்ணயித்த இலக்குக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களே முதலில் வந்து சேர்ந்த மாணவர்களாக இருந்தனர். பரத்வாஜ் முனிவர் அவர்களை வரவேற்றார்.

''இந்த பயணத்தின் நோக்கம் என்னவாக இருக்குமென்று நினைக்கிறாய் துருபதா''

பரத்வாஜ் முனிவர் கேட்டார்.

''மனிதருக்கு மனிதரின் சகாயம் தேவை. எந்த மனிதரையும் எந்த காலமும் பகைத்து கொள்ளாமலிருப்பதே புத்திசாலித்தனம்''

''அற்புதம். மிகச் சரியான பதில் கடுமையான அனுபவம். நல்ல பாடத்தை விரைவாக கற்றுக் கொடுக்கிறது இப்படி மனிதர்கள் ஒருவர் மேல் ஒருவர் அன்பு வைத்தும் பிற்பாடு ஒருவர் மேல் ஒருவர் சண்டை போட்டுக் கொள்கிறார்களே ஏன் என்று தெரியுமா''

''மனிதன் தான் பாதுகாப்பாக இருக்கிறான் என்று கருதுகிற போது வன்முறைக்கு எண்ணுகிறான். தான் ஒரு கோட்டைக்கு நடுவே வீரர்கள் சூழ உட்கார்ந்து கொண்டிருக்கிறோம் என்ற எண்ணம் வந்தவுடனே யாரையாவது தாக்க வேண்டும் என்ற எண்ணம் வந்து விடுகிறது. பாதுகாப்பு என்கிற விஷயந்தான் யுத்தத்திற்கு அடிப்படையான விஷயம். பயம் இருப்பின் யுத்தம் வராது. தனிமை இருப்பின் யுத்தம் வராது தானும் தன் கூட்டமும் என்கிற போது வெகு வேகமாய் போர் பற்றிய குணம் வந்து விடுகிறது. கூட்டமாய் வாழும், கூட்டத்தோடு யோசிக்கும் எல்லா மனிதர்களும் முட்டாள்களே தான் தனி என்பதை புரிந்து, தனிமை பற்றி யோசிக்கிற மனிதன்தான் கெட்டிக்கரன். அவனுக்கு வாழ்வின் நிலையாமை வெகு எளிதில் பிடிபட்டுவிடும். பாதுகாப்பு என்பது தான் நிலைத்து வாழும் இயல்பினன் என்ற தவறான எண்ணத்தைக் கொடுத்து விடுகிறது''

''இதுவும் அழகான பதில். நீங்கள் இருவரும் திரும்பவும் பர்ணசாலை போகலாம். பிறகு துருபதன் தன்னுடைய ஊருக்கு போகட்டும். நீ இல்வாழ்க்கையில் ஈடுபட்டு தொடர்ந்து ஜப தபங்கள் செய்துவா'' என்று கட்டளையிட்டார்.

மற்ற மாணவர்கள் வந்து சேர அவர்கள் ஒட்டுமொத்தமாய் ஆடியும் பாடியும் சிரித்தும் கேலி பேசியும் பர்ணசாலைக்கு திரும்பினார்கள்.

ஒரு மாதம் என்பது விரைவில் கழிந்தது. துரோணரும் துருபதனும் பிரிந்தார்கள். பிரியும் போது ஆரத் தழுவிக் கொண்டார்கள்.

''எப்போது வேண்டுமானாலும் எது வேண்டுமானாலும் என்னிடம் வந்துகேள், நான் நிச்சயம் உனக்கு கொடுப்பேன்.'

துருபதன் மறுபடியும் கையிலடித்து சத்தியம் செய்தான்.

"இந்த பிரியம் போதும். இந்த அன்பு போதும்" துரோணர் மறுவாக்கு சொன்னார்.

ஆனால் எல்லா சத்தியங்களும் செயலுக்கு வருவதில்லை. செய்த சில நாட்களிலேயே சில சத்தியங்கள் செத்துப் போய்விடுகின்றன.

"தன்னுடைய தேசமான வட பாஞ்சாலத்திற்கு துருபதன் தேர் ஏறிப்போனான். அவனை அவன் தந்தையான பிருஷதன் வரவேற்றான்.

ஒரு ஆண்டு மிகக் கடுமையாக உழைத்து தன் மகன் கற்றுக்கொண்ட வித்தைகளை கண்ணாரப் பார்த்தான். மகனை தழுவிக் கொண்டு மனமாரப் பாராட்டினான்.

"என் தேசம் இனி சுபிட்சமாகிவிடும். என்னைக் காட்டிலும் நீ சிறந்த அரசனாக இருப்பாய் உன் பெயர் சரித்திரத்திலே பொறிக்கப்படும்," என்று ஆசீர்வதித்தான்.

அரசவைப் பொறுப்பிலிருந்து மெல்ல மெல்ல விலகி மகனுக்கு இடம் கொடுத்தான்.

"பிருஷதன் இறந்து போக துருபத மன்னனை பரத்வாஜ முனிவர் ஆசிரமத்தில் அவன் செய்த கடுமையான உழைப்பு அவன் உடம்பை இரும்பாக மாற்றியிருந்தது. அவனுடைய வில் வித்தையும் குதிரை ஏற்றமும் மற்ற ஆயுதப்பயிற்சியும் மக்களை திகைக்க வைத்தன.

நீதி நெறி விஷயங்களை அவன் தெளிவாக தெரிந்து கொண்டிருந்ததால் அவன் கண நேரத்தில் முடிவெடுத்து ஜனங்களை சமாதானப் படுத்தினான். நல்ல தீர்ப்புகளை வழங்கினான்.

அருகே இருந்த மந்திரிகளை நன்கு புரிந்து கொண்டான். பல திருமணங்கள் செய்து கொண்டான். வாழ்க்கையை நன்கு அனுபவித்து வாழ்ந்தான்.

துரோணர் கிருபரின் தங்கையான கிருபியை மணந்து கொண்டார், பரத்வாஜ முனிவரின் உடல் நீத்து, மேல் உலகம் போக கிருபர் பர்ணசாலையிலேயே தங்கி வந்தார். இடைவிடாது பயிற்சியை மேற்கொண்டு வந்தார். காடுகளில் கிடைக்கும் கனிகளும் கிழங்குகளும் தாவரங்களும் அவருக்கு போதுமானதாக இருந்தன.

கிருபி எளிமையாக வாழ பழக்கப்பட்டவள் என்பதால் அவளுடைய வாழ்க்கையும் சந்தோஷமாக இருந்தது துரோணருக்கும் கிருபிக்கும் அஸ்வத்தாமன் என்கிற மகன் பிறந்தான்.

அந்தக் குழந்தை பிறந்ததும் குதிரை போல கனைத்து சிரித்தது. எனவே அவனுக்கு அஸ்வம் போல அதாவது குதிரையைப் போல சிரிப்பவன் என்று பெயரிட்டார்.

ஒரு குதிரையின் வலிமை யோடு அஸ்வத்தாமன் வளர்ந்து வந்தான் துரோணர் இடைவிடாது விற்பயிற்சி செய்து வந்தார்.

"பருவ மழை தவறாது பெய்து கொண்டிருந்தது."

வட பாஞ்சாலம் செழிப்பான இடம். நதிகள் சீறிப் பாய்கின்ற போது வண்டல் மண் பிரதேசம் எது போட்டாலும் விளைந்து நல்ல பலன் கொடுத்தது. மக்கள் உரமாக வளர்ந்தார்கள். இடையறாது ஆடல் பாடல் நகரத்தில் கேட்டுக் கொண்டே இருந்தது.

வாழ்க்கையை பாஞ்சாலத்து மக்கள் சுகமாக அனுபவித்தார்கள். இதற்கு காரணம் தங்கள் மன்னனே என்று நம்பினார்கள். அவன் வந்ததிலிருந்து தந்தையின்

காலத்து சுபிட்சத்தை விட அதிகமாக இருக்கிறது என்று புகழ்ந்து பாடினார்கள். புலவர்கள் கொண்டாடினார்கள். மறையவர்கள் எழுந்து நின்று உரக்க ஆசிர்வதித்தார்கள். அந்தப்புரத்து பெண்கள் கொண்டாடினார்கள்.

துருபதன் நல்ல அரசன்தான். ஆனால் இந்த புகழ்ச்சியும் கொண்டாட்டமும் கொஞ்சம் அதிகமாக இருந்தன. துருபதனுக்கு இந்தப் புகழ்ச்சிகள் தேவைப்பட்டன. எல்லோரும் அரசனை வாழ்த்துகிற போது ஒரு புலவர் மட்டும் வேறு விதமாக அரசனை கவர எண்ணினார்.

''அரசனே உங்களை வாழ்த்தப்போவதில்லை வாழ்த்த வயதில்லை எனவே வணங்குகிறேன்.''

என்று வசனம் பேசினார்.

இது வரை வாழ்த்திய புலவர்கள் திடுக்கிட்டார்கள். என்ன இது எளிதில் அரசன் கவனத்தை தட்டிக் கொண்டு போகிறானே என்று கவலைப் பட்டார்கள்.

அரசன் ஆச்சர்யமடைந்தான்.

''நீங்கள் பெரிய புலவர் மேதை நீங்கள் என்னை வாழ்த்தலாம். வாழ்த்துவதுதான் முறை வணங்குவது தவறில்லை. இருப்பினும் நீங்கள் வாழ்த்த வேண்டும் என்றுதான் விரும்புகிறேன்'' என்று அடக்கமாக சொன்னான்.

''இல்லை அரசே அரசன் விஷ்ணுவின் அம்சம் விஷ்ணு வணங்கத் தக்கவர் எனவே விஷ்ணுவின் அம்சமான உங்களை வாழ்த்து வதை விட வணங்கு வது நல்லது. விஷ்ணு நலமாக இருக்கட்டும் என்று யாரும் வாழ்த்துவார்களா? வேதங்கள் கூட விஷ்ணுவை வணங்கத்தானே செய்கின்றன'' புலவர் சாமர்த்தியமாக பதில் சொன்னார்.

'மன்னருக்கும் எண்ணம் வேறு திசையில் போயிற்று'

''அரசன் விஷ்ணு அம்சம் என்றால் என்ன?'' துருபதன் கேட்க வேறு ஒரு புலவர் எழுந்தார்.

''விஷ்ணு காக்கும் கடவுள் அரசன் காக்கும் தன்மை உடையவன் எனவே காக்கும் கடவுளான விஷ்ணுவை அரசனுக்கு ஒப்பிட்டு பேசப்படுகிறது. அவ்வளவே'' என்றார்.

இன்னொரு புலவர் எழுந்தார்

''விஷ்ணு சௌலப்யன் ஒரு அரசன் சௌலப்யனாக இருந்தால் அவரை விஷ்ணு என்றுகூறப்படுவது வழக்கம். சௌலபியம் என்று கூறப்படுவது வழக்கம். சௌலபியம் என்ற சொல்லுக்கு சகஜமாக, இனிமையாக எல்லோரிடமும் பழகுபவன் என்ற பொருள்'' என்றார்.

வேறொரு புலவர் எழுந்தார்.

''இது கலியுகத்தின் ஆரம்பம் கடவுள் அவதரித்திருக்கிறார் என்று பல சான்றோர்கள் கூறுகின்றனர். ஒரு வேளை அந்த அவதாரம் நீங்களாகக் கூட இருக்கலாம். இதனால்தான் உங்களை விஷ்ணு என்று கொண்டாடுகிறோம்'' என்று தன்னையும் சேர்த்துக் கொண்டார்.

அரசன் குழப்பமானான். நான் கடவுளா. அவதாரமா என்று யோசித்தான். அரியணையில் நன்கு சாய்ந்து கொண்டான். அவதாரம் என்பதற்கு உண்டான அடையாளம் ஏதும் தன்னிடம் இருக்கிறதா என்று கேட்டான்.

அரசனாக இருப்பவன் புகழ்ச்சியைப் பற்றி அக்கறை படக்கூடாது. போவோர் வருவோர் புகழ்ச்சிக்கெல்லாம் காது கொடுத்து கேட்டுக் கொண்டிருக்கக் கூடாது. இம்மாதிரி பொய்யான புலவர்களை வைத்துக் கொண்டு என்னைப் பற்றி என்னநினைக்கிறீர்கள் என்ன கேள்வி கேட்டிருக்கக் கூடாது.

ஏற்கெனவே அதித கற்பனையும் கொண்ட புலவர்கள் இன்னும் அதிகமாக பொய்யுரைக்கத் துவங்கிவிடுவார்கள் அந்த பொய்யுரைகள் அரசனை திசைமாற்றும்.

உன்னைப் போல் மனிதர்கள் உலகத்தில் எவரும் இல்லை என்று ஒரு சில பொற்காசுகளுக்காக அவர்கள் வீரா வேசமாக பேசுவார்கள். கண்ணில் ஜலம் ததும்ப நடிப்பார்கள்.

பாக்களை, வார்த்தைகளை வெகு நாளாக யோசித்து தேடி எடுத்து கொண்டு வந்து இது தான் நீ என்று நூறு பேருக்கு முன் கூறுவார்கள். நூறு பேரையும் கைதட்ட வைப்பார்கள். அரசன் முதலில் பேச்சுக்குப் பிறகு கை தட்டலுக்கும் நெகிழ்ந்து போய் அசந்து கிடப்பான். இதுவே ஓர் அழிவின் ஆரம்பம். பிரச்சினைகளின் முதற் புள்ளி.

துருபதனுக்கு புகழ்ந்தால் பிடிக்கிறது என்பதை புலவர்கள் புரிந்து கொண்டார்கள். வானளாவ புகழ ஆரம்பித்தார்கள். புலவர்கள் புகழ்ந்ததும் வெறுமே இருந்தால் நமக்கு நல்லதல்ல என்று மந்திரிகள் புகழ்ந்தார்கள். மந்திரிகள் புகழ்ந்ததும் சேனாதிபதிகள் புகழ்ந்தனர். அந்தப்புரத்தில் உள்ள மனைவிகள் புகழ்ந்தார்கள். வேலைக்காரர்கள் புகழ்ந்தார்கள். உறவினர்கள் புகழ்ந்தார்கள். தெருவில் உள்ள மக்கள் புகழ்ந்தார்கள். புகழ்ச்சியைத் தவிர வேறு எதுவும் காதுக்குள் ஏறாமல் போயிற்று.

ஏதேனும் ஒரு கால கட்டத்தில் துருபதன் விழித்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் விழிக்காமல் உறங்கிக் கிடந்தான். எல்லா நேரமும் புகழ் மயக்கத்தில் மிதந்து கிடந்தான். உண்மை என்ன என்பதை ஆராயாமல் கற்பனைக்குள் சஞ்சரிக்கத் தொடங்கினான்.

மன்மதனைப்போன்றவனே என்றதும் கையில் கரும்பு வில்லை எடுத்துக் கொண்டு அலைய வேண்டும் என்ற ஆசை வந்தது. சிவபெருமான் நெற்றிக் கண்ணால் எரிப்பது போல நீ உன் பகைவர்களை எரிக்கிறாய் என்று சொன்னதும் உண்மையிலேயே தான் சிவபெருமான் தானோ என்று மீசை மீது கைபோட துவங்கினான்.

மனிதர்கள் புகழ்ச்சிமீது கவனமாய் இருக்கவேண்டும். குறிப்பாய் அரச சிம்மாசனத்தில் வீற்றிருப்பவர்கள் மிக மிக கவனமாய் இருக்க வேண்டும்.

துருபதன் அக்கறையின்றி போதையில் மிதந்தவன் போல புகழ்ச்சிக்கு ஆசைப்பட்டான். மறுபடி மறுபடி புகழ்ச்சியில் கண் செருக விழுந்து கிடந்தான். அவன் மூத்தோர் செய்த புண்ணியத்தால் அரசாங்கம் சரிவர நடந்துகொண்டிருந்தது. இயற்கை வளம் குன்றாமல் இருந்தது.

ஆனால் அறுபது வருடத்திற்கு ஒரு முறை இயற்கை தன்னை சுருக்கிக் கொள்ளும் மழை வளம் இல்லாது பூமியை இயற்கை காய அடிக்கும். நன்கு நீரை உறிஞ்சிக் கொள்வதற்கு வாட்டமாக பூமியை பாளம்பாளமாக வெடிக்க வைக்கும்.

அடுத்த வருடம் இன்னும் பலத்த மழை பெய்வதற்காக இந்த வருடம் சற்று நீரின்றி நிலைதடுமாற வைக்கும். இதை புத்தியுள்ளோர் புரிந்து கொள்வார்கள். இல்லாதோர் அதிகம் புலம்புவார்கள்.

''மன்னா நீரே இல்லை. குளமே இல்லை. ஆறே இல்லை. எல்லாம் வற்றிக்கிடக்கிறது'' என்று மக்கள் குழு உன் ஆட்சியில் இப்படி நடக்கலாமா என்று அவர்கள் எழுதமுது கவிதை பாட மன்னன் தடுமாறினான.

பண்டக சாலையை திறந்து வைத்தான். என்ன செய்வது என்று அந்தணர்களோடு உட்கார்ந்து ஆலோசனை நடத்தினான்.

இந்த முறை வனப்பகுதியிலும் நீரில்லை. நீர் இருக்காது என்று துரோணருக்கு தெரியும். ஆகவே ஒன்றுக்கு நான்கு பசுக்களாக வாங்கி தன் கொட்டிலில் கட்டி இருந்தார்.

பசுக்களை அருகே உள்ள சுனைக்கும் ஓட்டிப்போய் நீர் குடிக்க வைத்து மறுபடியும் அழைத்து வந்தார். சிறிய அளவு தானியங்கள் பயிரிட்டு அதிலிருந்து உணவுக்கான விஷயங்களை எடுத்து வந்தார்.

ஆனால் காட்டு விலங்குகள் நீரின்றியும் உணவின்றியும் தடுமாறி பர்ணசாலை பக்கம் அதிகம் நடமாடின ஒரு இரவு இரண்டு புலிகள் ஆசிரமத்துக்குள் நுழைந்து ஒரு பசுவை அடித்துத் தின்றது. புலிக்கு பயந்த பசுக்கள் கயிறை அறுத்து வெகு தூரம் ஓடின. இருட்டில் மலைச் சரிவு தெரியாமல் உருண்டு விழுந்து இறந்தன.

நான்கு பசுக்களில் ஒன்று காணோம். இரண்டு பசுக்கள் சரிவில் விழுந்து இறந்தன. ஒரு பசு புலியால் கொல்லப்பட்டு விட்டது.

வெறும் கன்று மட்டும் இருந்தது. தாயை இழந்த கன்று அழத் தொடங்கியது. பாலில்லாமல் அஸ்வத்தாமனும் அழத் துவங்கினான். கிருமி மனம் நொந்தாள்.

''கிழங்கு உண்ணும் வயது வரவில்லையே. இலைகளையும் தழைகளையும் உண்ணச் சொல்லி வற்புறுத்த முடியாதே. இந்த குழந்தைக்கு பால் அல்லவா வேண்டும். இந்த நேரம் பால் இல்லாது போனால் அவன் வாழ் நாள் முழுவதும் சோர்வுள்ளவனாக அல்லவா இருப்பான். எலும்புகள் வரவேண்டிய நேரம் பற்கள்

முளைக்க வேண்டிய நேரத்தில் ஒரு குழந்தைக்கு உணவு இல்லாமல் போகக்கூடாது. அவன் பற்கள் நன்கு சரியாக வளர வேண்டுமென்றால் நல்ல பால் உணவு வேண்டும். நான்கு பசுக்கள் இருந்தபோது மூன்று கறவைகள் முழுவதுமாக பால் கறந்தன. அந்த பாலை வைத்துக் கொண்டு நான் பாலாடைகளை தயாரித்து வந்தேன் குழந்தை போஷாக்காக வளர்ந்து வந்தான். இப்போது எதுவுமில்லை. எனவே, தயவு செய்து எங்கிருந்தாவது ஒரு பசு சம்பாதித்துக் கொண்டு வாருங்கள் என்று கிருபி புருஷனை வேண்டிக் கொண்டாள்.

''பரசுராமன் தன்னுடைய செல்வங்களை எல்லாம் தானம் செய்கிறார் என்று கேள்விப்படுகிறேன். கிருபி அங்கே போய் நம் குழந்தைகளுக்கு ஏதேனும் வாங்கி வருகிறேன். நான் கேட்டால் பரசுராமர் மறுக்க மாட்டார்.''

ஓட்டமும் நடையுமாய் பரசுராமனுடைய இடத்திற்கு துரோணர் போனார்.

பரசுராமர் துரோணர் உள்ளே நுழையும்போது, கடைசி கறவை மாட்டையும் வேறு ஒருவருக்கு தானம் கொடுத்து, கையலம்பிக் கொண்டிருந்தார்.

''துரோணரா...வா, தந்தை இப்போது இல்லையென்று கேள்விப்பட்டேன். பர்ணசாலையை நீ மட்டும் நடத்திக்கொண்டிருக்கிறாயா. மாணவர்கள் இருக்கிறார்களா. ஏதும் இல்லாமல் தனியே நின்று விற்பயிற்சி செய்கிறாயா, உட்கார். என்ன வேண்டும் உனக்கு'' என்று அன்பொழுகக் கேட்டார்.

''பிள்ளைக்குப் பாலூட்ட ஒரு பசு வேண்டும் என்று வந்தேன்'' என்று துரோணர் பரிதாபமாகச் சொல்ல,

''கடவுளே...கடைசி பசுவையும் இப்போதுதானே கொடுத்தேன். என்னிடம் வேறு செல்வமில்லை. என்னிடம் கடைசியாக இருப்பது என்னுடைய அஸ்திர வித்தைகள்தான். அதை வேண்டுமானால் தருகிறேன். உனக்கு உபயோகப்படுமா'' துரோணரைப் பார்த்து கேட்டார்.

''வேறு என்ன செய்வது பரசுராமரே அஸ்திர வித்தையை எனக்கு சொல்லிக் கொடுங்கள். அந்த அஸ்திரவித்தையை வைத்துக் கொண்டு, வேறு எங்கேனும் மாணவர்களுக்கு சொல்லிக் கொடுக்கிறேன்.

இப்பொழுது உடனடியாக எனக்கு கறவை மாடுகள் தேவைப்படுகின்றன என் மனைவி காத்திருப்பாள். எனவே, விரைவாக எனக்கு அஸ்திரங்கள் கொடுங்கள்.''

ஒரு கை ஜலம் எடுத்து என் வித்தைகள் முழுவதும் உனக்கு போக்கடவது என்று தானம் செய்ய, பரசுராமர் அஸ்திர வித்தை முழுவதும் சொல்லிக் கொடுக்காமலேயே, துரோணரின் மனசுக்குள் நெஞ்சுக்குள், புத்திக்குள் புகுந்துக் கொண்டது.

துரோணர் பணிவாக பரசுராமரை வணங்கி, விடைபெற்று வெளியேறினார்.

வெளியே வெய்யில் அதிகம் கொளுத்தியது. எந்த இடத்திலும் சிறிதளவு கூட, நீர் இல்லாமல் வெகுதூரம் நடக்க நேரிட்டது. களைப்பைக் கொடுத்தது.

வெகு தொலைவே நீர் இருப்பதை துரோணர் வாசனையால் உணர்ந்தார் வேகமாக நீர் இருக்கும் இடம் நோக்கி நடந்தார்.

ஒரு தேங்கிய குட்டை நீர் பார்த்து முகர்ந்து விட்டு குடிக்காமல் தொடர்ந்து பயணப்பட்டார்.

எங்கே போவது என்று கவலைப்பட்டார்.

மலைச்சரிவு பார்த்ததும் துருபதன் ஞாபகம் வந்தது. அவர் ஒரு குதிரை கடன் வாங்கிக்கொண்டு, வடபாஞ்சாலம் நோக்கி வேகமாக போனார். வழி முழுவதும் பஞ்சம் தலைவிரித்து ஆடுவதை, அவரால் பார்க்க முடிந்தது.

ஆனால். இது வெகுவிரைவில் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை வந்தது. இன்னும் ஒரு மூன்று வாரத்திற்கு மன்னன் பல்கடித்து அரசாட்சியை செல்வனே நடத்தினானென்றால், உணவு பங்கீட்டை நியாயமாக செய்தானென்றால், இந்த பஞ்சத்திலிருந்து தப்பி விடலாம்.

இயற்கை தான் செய்த வஞ்சனைக்கு ஒட்டிக்கு இரட்டிப்பாக பலன்தரும் புத்தி உள்ளது. அடுத்தபடி மழை மிக வேகமாக இருக்கும். பூமியின் அடி ஆழம் வரை நீர் ஊடுருவும். அது நல்லது என்று எண்ணியபடி துருபதனின் அரண்மனையை அணுகினார்.

''நான் துரோணர் உங்கள் மன்னனின் நண்பன்'' என்று வாயிற்காப்பாளனிடம் சொன்னார். வாயிற்காப்பானர்கள் அவரை விழுந்து வணங்கி அழைத்துப் போனார்கள்.

மன்னர், அந்தணர்களோடு யாகம் நடத்துவது பற்றி பேசிக் கொண்டிருந்தார். அவரைச் சுற்றி மந்திரிகள் இருந்தார்கள். மந்திரிகளை சுற்றி ஊர் பொதுமக்கள் இருந்தார்கள். சேனாதிபதிகள் இருந்தார்கள்.

ஒரு அந்தணர், எப்படி யாகம் செய்ய வேண்டும் என்பதை விவரித்துக் கொண்டிருந்ததை எல்லோரும் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

துரோணர் உள்ளே நுழைந்து, துருபதா நலமா என்று உரக்கக் கேட்டார். மொத்த சபையும் துரோணரை பார்க்கத் திரும்பியது.

துருபதனுக்கு தன்னை ஒருவர் அப்படி அழைத்தது பிடிக்கவில்லை. ஒரு மன்னனை யாரும் பெயர் சொல்லி அழைப்பதேயில்லை.

"துருபதா என்னை யாரென்று தெரியவில்லையா" துரோணர் மறுபடியும் உரக்கக் கூவினார்.

துருபதன் உற்றுப் பார்த்தான். யாரென்று புரிந்து கொண்டான்.

ஆயினும் அருகே இருந்த புலவர்கள் முகம் சுளித்தார்கள். ராணிகள், என்ன இது என்பதைப்போல் ஆத்திரத்தோடு பார்த்தார்கள். சேனாதிபதிகள் வாளில் கை வைத்தார்கள். மந்திரிகள் எழுந்து நின்று 'உஷ்' என்று விரல் வைத்துச் சொன்னார்கள்.

அவர்கள் எல்லோரும் எதிரொலிக்கின்ற விஷயத்தை பார்த்துவிட்டு துரோணர் சிரித்தார்.

"அரசவைக் கூட்டமா, எதற்காக அரசவைக்கூட்டம் நான் சொல்லட்டுமா. நாட்டில் பஞ்சம் வந்திருக்கிறது. என்ன செய்வது என்று நீங்கள் கூட்டம் போடுகிறீர்கள் என்ன செய்தாலும் இந்தப்பஞ்சத்தை நீங்கள் அனுபவித்து தான் ஆகவேண்டும். வேறு வழியில்லை.

இந்த வருடத்தின் பலன் இது. குறைந்த மழை. நிறைந்த வெய்யில். அறுபது ஆண்டுகளுக்கு ஒருமுறை இவ்விதம் ஏற்படுவது வழக்கம். இப்படி ஏற்படுவது நல்லது.

ஒருமுறை பூமி வற்ற வேண்டும். நீர்நிலைகள், மொத்தமாக வற்றினால்தான் அடியிலிருக்கிற சேறு வெய்யில்பட்டு மலரும். அப்படி சேறு மலர்ந்தால் தான் நீருக்கு நல்லது. ஏனெனில், வெகுநாள் தேங்கிய நீர், விஷமாகிவிடும்.

நான் சொல்வது புரிகிறதா, ஓரளவிற்குமேல் வெய்யிலின் கிரணங்கள் குளங்களிலோ குட்டைகளிலோ ஆறின் அடிப்புறத்திலோ தொடமுடியாது. வெறும் வெளிச்சம் மட்டுமே பாயும். வெப்பம் பாயாது. ஆனால், ஆறின் அடிப்புறத்தில் எப்போதேனும் ஒருமுறை வெய்யில் நேரடியாகத் தாக்குவது நல்லது. ஆற்றிலுள்ள கூழாங்கற்களை எல்லாம் வெய்யில் சூடு செய்வது, அங்குள்ள கிருமிகளை அழிக்கும். இல்லையெனில், நீருக்கடியிலே கிருமிகள் வம்சம்வம்சமாக நீரிலேயே தங்கி நீரை விஷமாக்கக்கூடிய, குடித்தால் ஆட்களை முடமாக்கக்கூடிய தன்மையை அடைந்துவிடும்.

எனவே, பூமி தன்னை புதுப்பித்துக்கொள்ள வருண பகவானை வேண்டி, மழையின்றி மல்லாந்து கிடக்கிறது. எனவே, இதற்காக யாகம் செய்யாதீர்கள். இது வேண்டாம் என்று மறுக்காதீர்கள்" என்று சொன்னார்.

அந்தணர்களில் ஒருவர் எழுந்தார். "நாங்கள் படுகிற கஷ்டம் எங்களுக்குத் தெரியும். ஏதோ காட்டில் வாழுகின்ற உன்னை மாதிரி ஆட்களுக்குத் தெரியாது." என்று வேகமாகப் பேசினார்.

அந்த அந்தணர் அப்படிப் பேசியது துருபதனுக்கும் பிடித்திருந்தது.

துரோணர் திரும்பிப் பார்த்தார்.

"உன்னைப் போல் ஒரு முட்டாள் அந்தணனை நான் இதுவரை என்வாழ்க்கையில் பார்த்ததில்லை" துரோணர் சட்டென்று சீறினார்.

அவசரப்பட்டு ஒரு அந்தணர் இப்படி பேசவேக் கூடாது. சபையில் ஒரு அரசன் இருக்கும் பொழுது, ஒரு அரசனுக்கு யோசனையாக இன்னொருவர் பேசிக்கொண்டிருக்கும் போது, உடனடியாக அமைச்சர் வேண்டு

மானால் குறுக்கிடலாமே தவிர, அந்தணர் குறுக்கிடக் கூடாது.

அரசன் அனுமதியில்லாமல் அந்தணர் பேசக்கூடாது. எந்த அனுமதியும் இல்லாமல் பேசுகிறீர்கள் என்றால், நீர் அந்தணரா என்பதில் எனக்கு சந்தேகமாக இருக்கிறது.

ஒருவேளை உன் அவசரத்தைப் பார்த்தால் விஷயம் இப்படி இருக்குமோ என்று தோன்றுகிறது; இந்த அரசனை எப்படியாவது ஒரு பெரிய ஹோமங்கள் செய்யச் சொல்லி பொற்பதுமைகள் தானமாக வாங்கிக் கொண்டு மிகப் பெரிய செல்வந்தராகலாம் என்று இங்குள்ள அந்தணர்கள் அத்தனை பேரும் திட்டமிட்டு கொண்டிருக்கிறீர்களோ என்று தோன்றுகிறது. கலிகாலத்தின் ஆரம்பம். காசு சம்பாதிக்க அந்தணன் ஆசைப்பட்டு விட்டால் அது மிகப்பெரிய தவறான விளைவுகளுக்கு இழுத்துக் கொண்டு போய் விடும். நீங்கள் ஹோமங்கள் செய்வது பற்றி யாகங்கள் செய்வது பற்றி எனக்கு ஆட்சேபனை ஒன்றும் இல்லை. ஆனால் மழைவராது என்பதை மட்டும் புரிந்து கொள்ளுங்கள். ஏனெனில் இந்த வருடம் மழை பொய்க்கும்.

துரோணர் உண்மையை தெளிவாக சொன்னதும் அந்தணர்கள் ஆச்சர்யப்பட்டார்கள். கோபத்தில் நெளிந்தார்கள்.

“இவன் யார் தெரியுமா? துரோணன் பரத்வாஜ முனிவரின் மகன். மிகப்பெரிய கர்வி இவனிடம் ஏன் வாய் கொடுத்தாய். தேவையில்லாமல் ஏன் நம் மொத்த குலத்தையும் அவமானப்படுத்த வைக்கிறாய். அவன் சொல்வது உண்மையென்றாலும் அரச சபையில் அரசனெதிரில் அவன் சொல்லும்படி நேர்ந்து விட்டதே. இது உன்னால் அல்லவா நேர்ந்தது. உட்கார்” என்று எழுந்து பேசிய அந்தணனை அதட்டி பேசி உட்கார வைத்தார்கள்.

அந்தணர்கள் வரண்டு போய் உட்கார்ந்ததைப் பாத்ததும் சேனாதிபதிகள் அருகே வந்தனர். நீ யார் என்று ஒரு சேனாதிபதி கேட்டார்.

“உனக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நான் இங்கு பேச அரசன் என்னை செவிமடுக்க ஒரு அந்தணன் உட்கார ஒரு விஷயம் நடந்து விட்டது. நான் யார் என்பது அந்தணர்களுக்கு புரிந்து விட்டது. நான் யார் என்று அரசனுக்கு தெரிந்து விட்டது. நடுவே நீ ஏன் வந்து நான் யார் என்று கேட்கிறாய். விலகிநில். பேச்சு துவங்கிய பிறகு ஒரு ஆளின் பெயர் கேட்பது. ஒரு கெட்டிக்கார மந்திரிக்கு அழகல்ல. என்ன நடக்கிறது என்று தெரியாமல் கண்மூடி கிறக்கத்திலிருக்கிறாய் என்பது புரிகிறது. ஆகவே மௌனமாய் என்ன நடக்கிறது என்பதை கேட்டுக் கொண்டிரு. விலகிப்போ,

சேனாதிபதிகள் வாளை உருவினார்கள்.

“அரசனின் அனுமதியில்லாமல் சபை நடக்கின்ற இடத்திலே நீங்கள் நுழைந்தது குற்றம். எனவே இப்போதைக்கு வெளியேறுங்கள். வெளியேற மறுத்தால் நீங்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுவீர்கள்” என்று நெருங்கி வந்தார்கள். அவர்களின் மூச்சுக் காற்று துரோணரின் மீது பட்டது.

“துருபதனின் அரச சபையில் எவ்வளவு பெரிய வீரர்கள் இருக்கிறார்கள். ஆயுதமே இல்லாமல் ஒரு அந்தணன் வந்து நிற்கிறேன். இரண்டு பேர் வாளை உருவிக் கொண்டு வெளியே போ இல்லையெனில் வலுக்கட்டாயமாக வெளியேற்றி விடுவோம் என்று பயமுறுத்துகிறார்கள்.

ஒருசாதாரண மரியாதை கூட தெரியாத சேனாதிபதிகளை எப்படி துருபதன் அருகில் வைத்துக் கொண்டிருக்

கிறான். துருபதணின் அரசாங்கம் மிகப்பெரிய சிக்கலில் இருக்கிறது என்று நினைக்கிறேன். ஏன் இப்படி முட்டாள் களின் சாம்ராஜ்யமாக வளர்த்துக் கொண்டிருக்கிறாய். துருபதா, நீ விழித்து கொள்ளவில்லையா. உறங்கிக் கொண்டிருக்கிறாயா. அரச சபை வெகு சில நாட்கள் தான் கூடுகின்றனவா. ஏன் தகுதியில்லாதவர்களை அருகில் வைத்து ஆட்சி செய்து கொண்டிருக்கிறாய்'' என்று மறுபடியும் உரத்துக் கேட்டார்.

இந்த முறை பெண்கள் பக்கம் இருந்து சலசலப்பு எழுந்தது. யார் இந்த ஆள். எதற்கு இப்படி அரசனை நிந்தனை செய்கிறான். ஏக வசனத்திலே பேசுகிறானே, அரசருக்கு எவ்வளவு மனவருத்தம் இருக்கும். அரசருக்கு முகம் வாடிவிட்டது. ஐயோ இந்த வாட்டத்தை நாம் எப்படி போக்க முடியும். பொய்யான பெண்கள் பொய் யாய் புலம்பினார்கள்.

அரசனுக்கு அந்த புலம்பல்காதில் விழுந்தது. அவன் காதில் விழும்படியாகவே புலம்பத் துவங்கினார்கள், இதில் ஏதேனும் லாபம் இருக்கும் என்று எண்ணினார் கள்.

துரோணரின் கூர்மையான காதில் இந்த புலம்பல் எட்டியது.

''துருபதா ஒரு அரசன் தனக்காக பரிதாபப் படுபவர் களை அருகே வைத்துக் கொள்ளவே கூடாது. உலகத்தில் மிகவும் மோசமான விஷயம் ஐயோ உனக்கு இப்படி நேர்ந்து விட்டதே என்று பரிதாபப்படுகின்ற மக்கள் தான் ஒருவனை பார்த்து பரிதாப்படுவது போல நடித்து பலபேர் அவனை அழிந்து விடுகிறார்கள்.

தன்னைப் பார்த்து பரிதாபப்படுபவன் மீது உடனடி யாக ஒரு அரசன் கோபப்படவேண்டும். வீரமுடையவன் எந்த பரிதாபத்தையும் எப்போதும் ஏற்பதே இல்லை.

குறிப்பாக பெண்களுடைய பரிதாபத்தைஏற்பதேஇல்லை. பரிதாபப்படுகிற பெண்களை ஒருக்காலும் நம்பாதே.''

துருபதன் கடைசியாக மணந்து கொண்ட பெண் கோபப்பட்டு சபையை விட்டு பின்பக்கமாய் வெளியேறி னாள். அவள் தான் அரசர் முகம் மிகவும் வாடிவிட்டதே என்று வருத்தபட்டவள். தன் வருத்தம் பொய்யானது என்பதை துரோணர் காட்டி கொடுத்ததும் அவளுக்கு மனம் கலங்கிப் போயிற்று. எனவே அரசனுடைய அனுதாபத்தை அதிகம் பெறுவதற்காக அந்த இடத்தை விட்டு வேகமாக வெளியே போனாள். அவளைத் தொடர்ந்து அவள் சேடிகளும் வேறு சில அரசிகளும் நகர்ந்தார்கள்.

துருபதன் கோபமானான். அருகே உள்ள அந்தணரை அழைத்து அவர் காதில் என்ன வேண்டும் என்று மட்டும் கேட்டுக் கொண்டு வா என்று சொன்னான்.

அந்த அந்தணர், துரோணருக்கு அருகில் வந்தார். என்ன வேண்டும் என்று மன்னர் கேட்கிறார்.

''மன்னனை பார்க்க நான் வரவில்லை என்று சொல். என் நண்பனைப்பார்க்க வந்திருக்கிறேன், என் நண்பனி டம். என் குழந்தை அசுவத்தாமனுக்காக ஒரு பசுமாடு கன்றோடு வாங்கிப் போவதற்காக வந்திருக்கிறேன். ஒரு கறவை மாடு என் நண்பன் துருபதனிடம் வேண்டும் என்று கேள்''

அந்த அந்தணன் அவ்விதமே போய் துருபதனிடம் சொன்னான்.

அந்தணர்கள். ''நண்பனா... அரசன் இந்த அந்தண னுக்கு நண்பனா'' என்று வாய்விட்டு திகைத்தார்கள். புலவர்கள், என்ன கூத்து இது யார் யாருக்கு என்று ஒரு வரைமுறையே இல்லாமல் இருக்கிறது, மந்திரிகள்

சொன்னார்கள். தலைகிறுக்கு பிடித்தவன் போல் இருக்கிறது.

அதிகம் கண்டு கொள்ள வேண்டாம் என்று சைகையில் பேசிக் கொண்டார்கள். சேனாதிபதிகள், அடித்து துரத்துங்கள் ஐயா இவனோடு என்ன பேச்சு என்று முணு முணுத்தார்கள்.

சகலமும் துரோணர் கேட்டுக் கொண்டிருந்தார்.

துருபதனிடம் அந்த அந்தணர் போய் சொன்னதும் துருபதன் எழுந்து நின்றான். அந்த சபைக்கு நடுவே நல்ல பெயர் வாங்க வேண்டும் என்று அவசரப்பட்டான் சற்று ஆத்திரப்பட்டான். படியிறங்கினான். துரோணரைப் பார்த்தான்.

"நீர் யார் என்று தெரிகிறது. துரோணரே."

துரோணர் முகம் மலர்ந்தார்.

"ஆனால் ஒரு அரச சபையில் ஒரு அரசன் முன்பு வந்து அவன் பெயரைச் சொல்லி அழைப்பது தவறு என்று உனக்கு எந்த சாஸ்திரமும் சொல்லி தரவில்லையா நீ படித்த படிப்பு இதுதானா? உமக்கு எழுதப்படிக்க எவரும் கற்றுக் கொடுக்கவேயில்லையா. அப்படி கற்றுக் கொண்ட போது நீர் தெரிந்த நாகரீகம் எது எந்த தேசத்திலே அரச சபையில் நுழைந்து அரசனின் பெயரைச் சொல்லி அழைப்பார்கள்.

துரோணரே உமக்கு கறவைப் பசு தர நான் கடமைபட்டிருக்கிறேன். பஞ்சமான இந்த தேசத்தில் மழை பெய்யாது, மக்கள் வாடுகின்ற நேரத்தில் இந்த தேசத்தின் ஒவ்வொரு உயிரையும் காப்பாற்ற வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது.

அரசன் என்பவன் தெய்வ அம்சம். விஷ்ணுவின் அம்சம். விஷ்ணு, காக்கும் கடவுள். எனவே காக்கும்

பொறுப்பு எனக்கு தரப்பட்டிருப்பதால் உம்மைக் காப்பதற்காக உமது மகனை காப்பதற்காக உமது மனைவியை காப்பதற்காக நிச்சயமாக ஒரு கறவைப் பசு, கன்றோடு சேர்ந்தகறவைப் பசு நிச்சயம் தருகிறேன். ஆனால் கேட்க வேண்டிய முறை இதுவல்ல. நாளை காலை விடியும் நேரத்தில்இங்கு வந்து வேத சாகைகள் சிலது சொல்லி அதற்கு தட்சணையாகஒரு கறவை பசு வாங்கிக்கொண்டு போ. உமக்கு தட்சிணையாகத்தான் கொடுக்க முடியுமே தவிரவேறு எந்தவிதமாகவும் ஒரு அந்தணனுக்கு அரசன் தர முடியாது.

இந்த முறை என் பெயர் சொல்லி அழைத்ததை மன்னிக்கிறேன். வெய்யில் அதிகமாக இருக்கிறது. இதில் நினைவு பிசகி வேறு ஏதேனும் ஒரு ஆத்திரத்தில் என் பெயர் சொல்லி அழைத்திருக்கலாம். ஆனாலும் இன்னொரு முறை இவ்வாறு செய்தால் நீங்கள் தண்டிக்கப்படுவீர்கள் என்று எச்சரித்து இத்தோடு நீங்கள் வெளியே போகலாம் என்று உத்தரவிடுகிறேன்".

துரோணர் திகைத்துப் போனார். சபை கை கொட்டியது.

'எவ்வளவு ஆணித்தரமானப் பேச்சு. ஒரு அந்தணன் மீது கருணையும் அதே சமயம் கண்டிப்பும் கொண்டுஇந்த அரசர் பேசிய பேச்சு, பொன் எழுத்திலே பதிக்கவேண்டியது' என்று அந்த அந்தணர் கூட்டம் ஆரவாரித்தது.

சேனாதிபதிகளும் தலையாட்டினார்கள். பொய்யர்கள் நிறைந்த சபை என்பதால் ஆரவாரம் அதிகமாக இருந்தது.

ஆரவாரம் அடங்கும் வரை துரோணர் காத்திருந்தார்.

துருபதா, என் நண்பனே...என்னை நீ நினைவில் வைத்திருப்பது பற்றி சந்தோஷம். ஆனால், நீ பேசிய வார்த்தைகள் உனக்கு எப்படி மறந்து போயிற்று என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

காலம் வார்த்தைகளை விழுங்கிவிடுமா. கவிதை போன்ற 'வார்த்தைகளை நீ என்னிடம் சொல்லியிருக்கிறாயே...நான் செய்த சாதாரண உதவிக்கு என்னை தலைமேல் வைத்து கொண்டாடியிருக்கிறாயே... மனம் நெகிழ்ந்து பேசியிருக்கிறாயே.

துருபதா. ஒரு அரச சபையில் பல்வேறு பணிகளுக்கு நடுவே, என் முகம் நீ ஞாபகம் வைத்துக் கொண்டிருப்பது சந்தோஷம் எனினும் எவ்விதம் பழகினோம் என்பதை ஒருவேளை மறந்திருக்கலாம் அல்லது இவர்களுக்கு முன்பு சொல்ல, உனக்கு வெட்கமாக இருக்கலாம்.

துருபதா. சிங்கங்களிடமிருந்தும் யானைகளிடமிருந்தும் உன்னைக் காப்பாற்றி மலைச்சரிவிலிருந்து உன்னை மீட்டுக் கொண்டு வந்து, ஆற்றோரமாய் நடந்து, மூன்று நாட்கள் ஒரு பயணம் மேற் கொண்டோமே...ஞாபகம் இருக்கிறதா. அப்பொழுது உன் உயிரைக் காப்பாற்றியதற்காக, தேசத்திலே பாதியைத் தருவேன் என்று சொன்னாயே...ஞாபகம் இருக்கிறதா. ஒரு அந்தணன் நாடாளக் கூடாது. நீ சொன்ன வார்த்தைகள் போதும். இந்தப் பிரியம் போதும் என்று நான் சொன்னேனே...உனக்கு ஞாபகம் இருக்கிறதா.

மறந்துபோக வாய்ப்பில்லை. இருப்பினும் மது மயக்கம் அதிகமாக இருந்தால். சிலசமயம் நடந்தவைகள் அவ்வப்போது மறந்து போகும். பிறகு நினைவுபடுத்திக் கொண்டால், மறுபடியும் நெஞ்சு முன் வந்து நிழலாடும்.

உன் கண்களில் அந்தக்காட்சிகள் தெரிந்து கொண்டிருப்பதை, நானும் பார்க்கிறேன் துருபதா. அந்தச்

சரிவிலே என் மார்பில் நீ படுத்துக்கொண்டு, யானைகளிடமிருந்து நீ உயிர் தப்பிய காட்சி, உனக்கு மறந்திருக்காது. எனக்கும் மறக்கவில்லை. மறந்திருப்பின் துரோணரே... என்று என்னை நீ அழைத்திருக்கவே மாட்டாய்,

பாஞ்சாலதேசம் வரை என் ஆஸ்ரமம்விட்டு வந்திருப்பது, உன்னிடம் ஒரு கறவைமாடு கேட்பதற்காக...இல்லை அது வெறும் சாக்கு. உன்னைப் பார்ப்பதற்காக வந்தேன். அரசசபையில் யாகம் வளர்ப்பதற்காக, மழை வேண்டி நீ முயற்சி செய்து கொண்டிருக்கிறாய். என்பது கேட்டு இன்னும் விரைவாக ஓடிவந்தேன்.

ஒரு நண்பனிடம் பேசும் போது, யாரிடம் அனுமதி வாங்கவேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. நமது நட்பு பற்றி இங்கு கூடியிருக்கும். அறிவிலிகளுக்கு எப்படி தெரியும், வந்திருப்பது யார் என்றுகூடத் தெரியாமல் இங்குள்ள ஒரு அந்தணன் எழுந்து நின்று எனக்கு அறிவுரை சொல்கிறான். ஆச்சரியமாக இருக்கிறது. இப்பேர்பட்ட முட்டாளை எப்படிநீ அரசவையில் அனுமதித்தாய்

இவன் சாதாரணமான புரோகிதம் செய்யக் கூட தகுதியில்லாதவன். வேதமந்திரம் தெரிந்து புரோகிதம், செய்வதாய் நடிப்பவன். அவ்வப்போது சில வார்த்தைகளைத் தெரிந்துகொண்டு நூறு பேருக்கு நடுவே கூட்டமாய் நின்றுகொண்டு எதையும் மனனம் பண்ணாமல், மற்றவர்கள் வாயசைப்பை வைத்துக்கொண்டு தானும் வாயசைக்கிறவன், மற்றவர்கள் வாங்கும் அதே தங்கத்தை, தானும் தட்சணையாக வாங்கிக்கொண்டு போகிறவன்.

இவன் முகத்தைப்பார். பிறவியிலேயே திருடன் என்பது தெரிந்துவிடும்.

துருபதா, என்னை கைது செய்ய உருவிய வாட்களுடன் உன்னுடைய இரண்டு சேனாதிபதிகள் வருகிறார்

கள். உருவிய வாளோடு இரண்டுபேர் அருகே வந்தால் அவர்களை எப்படி அப்புறப்படுத்துவது என்பதுதான் நமக்கு கற்றுக்கொடுத்த முதல்பாலபாடம். ஆறு தட்டுகளில் இருவர் உயிரையும் மாய்த்துவிடமுடியும். இந்த அரசவையை களங்கப்படுத்த நான் விரும்பவில்லை.

இவர்கள் இருவரும் வெறும் தடியர்கள். சோற்றுத் தின்னிகள். வெறும் மாமிசம் தின்றுவிட்டு கொழுத்துக் கிடப்பவர்கள். ஆண்மை அதிகரிப்பதற்காக மீனும் நண்டும் மாறி மாறித்தின்று, இவர்கள் அக்குளிலிருந்து மிகமிக அசிங்கமான ஓர் துர்நாற்றம் வீசிக்கொண்டிருக்கிறது.

இவர்கள் உடம்பு வெம்மை இவர்களை சுருக்கிக் கொண்டிருப்பதை அறியாமல் இருக்கிறார்கள். இவர்களது தலைமுடி கொட்டிப்போனது, இவர்களது வெம்மையின் காரணமாகத்தான், தலைமுடி கொட்டியதை மறைப்பதற்காக, பெரிய தலைப்பாகை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். மீசையை பெரிதாக வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். முடியில் என்ன இருக்கிறது.

வீரம் என்பது நெஞ்சின் உறுதி, வைராக்கியம். சிறிது கூட வைராக்கியம் இல்லாதவர்களை எப்படி சேனாதிபதியாக வைத்துக் கொண்டிருக்கிறாய்.

உன்னுடைய மந்திரிகள். சேனாதிபதிகளை விட மோசமாக இருக்கிறார்கள். ஒரு அந்தணன் எந்த நேரத்தில் உள்ளே நுழைந்தாலும், வருக தங்கள் வரவு நல்வரவாகுக என்று சொல்லவேண்டும். அதற்கு பிறகே நீங்கள் வந்த நேரம் சரியில்லை. சற்று இளைப்பாறுங்கள். தாகத்திற்கு தண்ணீர் குடியுங்கள். விசிற ஆட்கள் அனுப்புகிறேன் படுத்துத் தூங்குங்கள். அரசர் ஓய்வானதும் உங்களுக்கு சொல்லி அனுப்புகிறேன், என்று சொல்லவேண்டும். என்னைப் பார்த்ததும் வெளியே போ

என்று சொல்ல ஒரு மந்திரிக்கு துணிச்சல் இருக்குமானால், அவன் அமைச்சனே இல்லை என்று அர்த்தம், வெறும் ஏவலாள். யாரேனும் ஏதேனும் சொன்னால் உடனே ஓடிப்போய் நிறைவேற்றுகிற கூலி ஆள். இவன் அமைச்சனே இல்லை. எடுபிடி. வெறும் கூடம் பெருக்குகிறவன். துணி துவைக்கிறவன். இடங்களை தண்ணீர் ஊற்றி சுத்தப்படுத்துகிறவன்.

இவனையெல்லாம் எப்படி மந்திரியாக வைத்துக் கொண்டிருக்கிறாய்.

துருபதா. உன் ராஜ பரிபாலனம் சரியாக இல்லையென்பது வெட்டவெளிச்சமாக தெரிந்துவிட்டது.

ஏதோ மூத்தோர் புண்ணியத்தில் ஓடிக் கொண்டிருக்கிறதே தவிர உன் சாமர்த்தியத்தாலோ உன் எதிரே அமர்ந்து கொண்டிருக்கிற இந்த குருட்டு கும்பல் சாமார்த்தியத்தாலோ இவை ஓடவில்லை. உன் தந்தை மிக அழகான நிர்வாக வழிகள் செய்துவிட்டு போயிருக்கிறார். அதை கடைப்பிடிப்பதால் ஓரளவு அரசாங்கம் நடக்கிறது. இல்லையெனில் உன் தேசம் இந்த பஞ்சத்திற்கு வெறும் குப்பை மேடாகத்தான் போயிருக்கும்.

உன்னை விட உன் மந்திரிகள் கூட்டத்தைவிட, உன் சேனாதிபதிகளைவிட, உன்னுடைய மக்கள் விழிப்பானவர்கள். அவர்கள் தெள்ளத்தெளிவாக தெரிந்திருக்கிறார்கள். ஸ்லோகங்கள் சொல்கிறார்கள். இந்த வருடம் இதனால் மழை இருக்காது. இதை பெரிதுபடுத்த வேண்டாம் என்று அழகிய கவிதைகளில் பாடல்கள் சொல்கிறார்கள். இந்த ஒருவருடம் பல்லைக் கடித்துக் கொண்டால் அடுத்த வருடம் நன்றாக மழையை அனுபவிக்கலாம் என்று இப்போதே பேசிக் கொள்கிறார்கள். அவர்களுக்குத் தெரிந்திருப்பது இவர்களுக்கு ஏன் தெரியவில்லை. தெரியுமா. உன்னிடமிருந்து காசு கறப்பதற்காக

நாடகமாடிக் கொண்டிருக்கிறார்கள். பொய்யர்களை சுற்றி வைத்துக்கொண்டு என்ன ஆலோசனை செய்து கொண்டிருக்கிறாய் என்று எனக்குத் தெரியவில்லை. மக்களுக்கு உணவு கொடுத்தால் போதும்.

இன்னும் மூன்று மாதம், மெல்ல பனி துவங்கிவிடும். பிறகு ஒரு மழை இருக்கும். அந்த மழைக்குப் பிறகு வசந்தம் நல்ல பூக்களைக் கொடுக்கும். காய் கனிகள் அதிகரிக்கும். பிறகு மறுபடியும் மழைக்காலம் வரும். அந்த மழைக்காலத்தில் பூமி பிளப்பது போல மழை பெய்யும். அந்த மழையில்...துருபதா...துருபதா...இந்த தேசம் செழிக்கும். அடுத்த வருடம் மழை மிக்க கடுமையாக இருக்கும் என்பதை இப்போதே சொல்லிக் கொள்கிறேன். அதற்கு உன் நாட்டு மக்களையும் உன்னையும் தயார் படுத்திக் கொள்.

இந்த சாதாரண விஷயத்தைக்கூட உனக்கு ஆலோசனை சொல்ல அறிவார்ந்த ஒரு நபர் உன்னுடைய அரசவையில் இல்லையே என்றுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது.

பரத கண்டத்தில் இந்தப் பகுதி முழுவதும் விஷயமறிந்த அந்தணர்களும் ஞானிகளும் முனிவர்களும் ரிஷிகளும் வசித்து வந்திருக்கிறார்கள், இன்னும் இருக்கிறார்கள். உன் கண்களுக்கு அவர்கள் ஏன் தென்படவில்லை. ஞானிகள் வேண்டும் என்று பிரார்த்தனை செய். சாதுக்கள் உன்னைத் தேடி வரவேண்டும் என்று பிரார்த்தனை செய். அறிஞர்கள் உன் தேசத்தை நாடி வர வேண்டுமென்று வேண்டுதல் செய். அதற்காக காத்திரு. ஏங்கு. இல்லையெனில் வெறும் கல்விக் கூட்டம் மட்டுமே உன்னை சுற்றிக் கொண்டிருக்கும்.

ஞானிகளை தரிசிப்பதற்கு ஒரு அரசன் ஏங்க வேண்டும். தினசரி என் தேசத்திற்கு கடவுள் வரட்டும் என்று

பிரார்த்தனை செய்ய வேண்டும் கடவுள், ஞானியின் ரூபத்தில்தான் வருவார்கள்.

ஞானிகள் எளிமையாக இருப்பார்கள். இதோ இங்கே உட்கார்ந்திருக்கின்ற வைரக் கடுக்கன்களும் பட்டுப் பீதாம்பரங்களும், பெரிய தலைப்பாகைகளும், வெறும் வேடதாரிகளைத்தான் எனக்கு நினைவூட்டுகின்றன.

துருபதா, விழித்துக் கொள். உறங்காதே. நாளை காலை வருகிறேன்.''

துரோணர் வேதனையோடு திரும்பினார். வாசல் நோக்கி நடந்தார் துருபதன் கோபமானான். எழுந்தான்.

''துரோணா...நில்'' என்று கூச்சலிட்டான்.

''படகு ஏறி ஆற்றைக் கடந்தால், படகு நீரிலிருந்து காப்பாற்றி விட்டதாகவா அர்த்தம். படகை மனிதன் உபயோகப்படுத்திக் கொண்டான் என்றுதான் அர்த்தம். யானை துரத்த சரிவில் இறங்கி தப்பித்த என்னை நீ காப்பாற்றியதாக சொல்வது முட்டாள்தனம். உன்னைப் படுக்க வைத்து உன் நெஞ்சு மீது நின்று சறுக்கி நான் தரையை அடைந்தேன். மற்றபடிக்கு இதில் உன் வீரம் என்று எதுவுமில்லை. உன் தந்தை நடத்திய பள்ளிக்கூடம் அதாவது நீ இப்போது இருக்கிற பர்ணசாலையே என் தந்தையால் அமைக்கப்பட்டது. என் தந்தை கொடுத்த காசால் உருவானது, நாங்கள் அளித்த பசுமாடுகளாலும், ஆடுகளாலும் அது ஒரு இடமாக உருவாகியது. இல்லையெனில், அது வெறும் காடாக இருந்திருக்கும். அந்த நன்றியை மறந்துவிட்டு எல்லாம் அறிந்தவன் போல் நீ பேசுவது அதிக பிரசங்கித்தனம்.

உனக்கு நான் பாதி ராஜ்யம் கொடுப்பதாக சொன்னேனா. என் சொந்தத் தம்பிக்குக்கூட என் தேசத்தை பங்கு தரமாட்டேன். யாரோ தெருவில் போகிற அந்தணன் நீ. உனக்கு நான் பாதி ராஜ்யம் கொடுக்கிறேனென்றால் இது மிகப்பெரிய பொய் என்றே அர்த்தம். ஒரு அந்தணன் இவ்வளவு பெரிய பொய் சொல்வது நல்லதல்ல. இது மழையின்மைக்கு இன்னொரு காரணம்.

ஒரு அரச சபையில் அரசன் முன்னாலேயே இவ்வளவு பெரிய பொய் சொல்கிறாயே மக்களிடம் நீ என்ன பொய்யெல்லாம் சொல்லி இருப்பாய், ஏமாத்துகிற அந்தணன் ஊரிலிருக்கும் வரை எந்த தேசத்தில் ஐயா மழை பெய்யும் பொய் சொல்கிற அந்தணனை, மக்களுக்கு புறம்பான அந்தணனை சவுக்கால் அடித்து துரத்தும்படி நீதி சாஸ்திரம் உத்தரவிட்டிருக்கிறது. உடனடியாக நாடு கடத்தும்படி சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, நான் கோபப்படுவதற்கு முன் இந்த இடத்தை விட்டு போய்விடு. ஓர் அந்தணன் இந்த தேசத்தில் ஒரு அரசவையில் படியேறி வெறுங்கையோடு போவதை நான் விரும்பவில்லை. நீ என்னோடு படித்தவன். என்னுடைய குருவின் மகன் என்கிற முறையில், ஒரு அந்தணன் என்ற தகுதியில் உனக்கு ஒரு கறவை மாடு நாளை காலை தரப்படும். நின்று வாங்கிக் கொண்டு போ. அது வரை கோட்டைவாசலில் காத்திரு. நீ வெளியே போகலாம்.''

துருபதன் சொல்ல, அருகில் இருந்த சேனாதிபதிகள் அவர் நெஞ்சுமீது கைவைத்து நெட்டித் தள்ளினார்கள். அவர் பின்புறமாய் நகர்ந்துபோய் சுவற்றில் முட்டிக் கொண்டார்.

''விநாச காலே விபரீத புத்தி என்பதற்கு அழகான உதாரணம் துருபதா நீதான். ஒரு மோசமான கால கட்டம் வரும் போது புத்தி கேவலமாக யோசனை செய்ய ஆரம்பித்து விடுகிறது. எல்லாம் வல்ல அரசன் போல நீ பேசுகிறாய். நீ என்னை தூஷித்தது பரவா யில்லை. என் தகப்பனை தூஷித்ததும் ஏற்கத் தகுந்ததே. ஆனால். நமது நட்பை தூஷித்தாய் அல்லவா...நீ மனிதனே இல்லை [என்பது இப்போது நிரூபணமாகி விட்டது.

மனிதனே இல்லாதவன் அரசனாய் இருப்பதில் என்ன லாபம். இது பேய் அரசாங்கம்.பிசாசின் ராஜ்யம். பூத கணங்கள் சூழ உட்கார்ந்திருக்கும் வெறும் காட்டேரி நீ. ஒரு மனிதன் தன்னை மிகவும் கேவலப்படுத்திக் கொள்வது என்பது நான் இப்போது தான் கண்ணெதிரே பார்க்கிறேன். நட்பை புறக்கணித்து விட்டு உயிர் காத்த அன்பைப் புறக்கணித்து விட்டு செய்த சத்தியத்தை மறந்துவிட்டு பொய் சொல்கிறாய். துருபதா இது அடுக்குமா? இதனால்தான் மழை பொழியவில்லை.

இந்த தேசத்தில் மழை இல்லையெனில் அறம் பிழைத்த நீ காரணம் துருபதா உன்னுடைய திறமையின்மை காரணம் உன்னுடைய சத்தியமின்மை காரணம் உன்னைச் சூழ்ந்திருக்கிற திருடர்கள் காரணம்.''

கூட்டம் ஆரவாரித்து எழுந்தது.

''என்ன சொன்னாய் என்று எல்லோரும் கூவினார்கள்.

துரோணர் கால் அகட்டி அவர்களை எதிர் கொள்ள தயாராக இருந்தார். துருபதன் அவர்களை கையமர்த்தி தடுத்தான் தடதடத்து துரோணருக்கு அருகே வந்தான். அவரை முறைத்துப் பார்த்தான்.

''இங்கு ஒரு கொலை நடக்கும் முன்பு வெளியே போ. ஒரு அந்தணனை இந்த இடத்தில் கொல்ல நான் விரும்பவில்லை. ஆயினும் அத்து மீறினால் கொலை

செய்யவும் நான் தயங்க மாட்டேன் வெளியே போ'' என்று மறுபடியும் கத்தினான்.

துரோணர் அமைதியாய் துருபதனை உற்றுப்பார்த்தார். கண்களை மூடிக்கொண்டார். உள்ளே யோசித்தார் ''இது துராங்கார பூமி மோசமான இடம். கேவலமான ஆட்கள். இங்கிருப்பதை விட நகர்ந்து வெளியே போவது நல்லது இவன் கையால் கறவைபசு வாங்கினால் அந்தப்பசுவிலிருந்து விஷம்தான் வருமே தவிர, பால் வராது. எனவே அது நமக்குத் தேவையற்ற பொருள். வேறு எங்கேனும் போய் சம்பாதித்துக் கொள்ளலாம்'' என்று வெளியே வந்தார்.

துரோணர் வெளியே நகர்ந்ததும் உள்ளிருந்த அரச சபைக் கூட்டம் ஆரவாரித்தது. மன்னன் வாழ்க என்று கூச்சலிட்டது. ''துருபதன் ஜெயிப்பான், துருபதன் ஜெயிப்பான்'' என்று கோஷம் போட்டது.

துரோணருக்குப் பின்னே ஒற்றர்களும் காவலர்களும் வந்தார்கள். நகரத்தைதாண்டும் வரை அவரைக் கண் காணித்தார்கள். நகர் தாண்டியதும் அவரைப் பார்த்துச் சிரித்து விட்டு. திரும்பவும் மாளிகைக்குப் போனார்கள்.

துரோணர் மனம் ஒடிந்துபோய் துக்கம் நெஞ்சை அடைக்க நாக்கு உலர்ந்து போக கடும் வெய்யிலில் மெல்ல கால்போன போக்கில், நடந்து போனார்.

தன்மார்புமீது கட்டித்தழுவியபடி பதினைந்து வயது துருபதன் கண்ணில் பயமும் கலவரமும் மின்ன, உயிருக்கு ஆசைப்பட்டு ஒடுங்கிக் கிடந்தது ஞாபகம் வந்தது.

என் தேசத்தில் பாதியைத்தருவேன் இது சத்தியம் என்று சொன்ன கை ஞாபகம் வந்தது. இவரைக் கட்டிக் கொண்டு பிரியுமுன்பு அழுத அழுகை ஞாபகம் வந்தது.

துரோணர் நகரத்தின் எல்லைக்குப் போனார். திரும்பி பார்த்தார் இன்னும் ஒருவருடம் இந்தப் பஞ்சம் தொடரட்டும் என்று சொல்லிவிட்டு மேலே நடந்தார்.

ஒரு பெரிய புழுதிக்காற்று நகரத்திற்குள் பிரவேசித்தது. மக்கள் திண்டாடினார்கள்.

2

கௌரவ அரசகுமாரர்களான நூறு பேரும் பாண்டவ அரசகுமாரர்களான ஐவரும் அந்தப்புல்வெளியிலேயே விளையாடிக் கொண்டிருந்தார்கள். எல்லார் கையிலும் அம்பும் வில்லும் இருந்தன.

அரசகுமாரர்களுக்கு படிப்பு, விளையாட்டு பொழுது போக்கு எல்லாமுமே ஆயுதப் பயிற்சிதான். எனவே அவர்கள் ஆயுதங்களோடு அந்தப் புல்வெளியில் உலாவிக் கொண்டிருந்தார்கள்.

பீமன் இடுப்பிலிருந்து ஒரு பந்தை எடுத்தான். துரியோதனிடம் காட்டினான். துரியோதனன் அங்கே வந்தான்.

''இந்தப் பந்தை உயர வீசப்போகிறேன். இந்தப் பந்து மறுபடியும் தரைக்கு வராதவாறு, இன்று இரவு வரை நாம் இதை அடித்து அடித்து மேலே செலுத்திக் கொண்டிருக்கவேண்டும். ஒருபொழுதும் இதை கீழே விடக்கூடாது. யாருடைய அம்பு பந்தை மேலே செலுத்துகிறது என்று பார்ப்போம்'' என்று சொல்லி, பந்தை வானத்தை நோக்கி வெகு தூரம் போட்டான்.

பந்து கண்ணிலிருந்து மறையும் அளவிற்கு, உயரே போனது.

அர்ஜுனன் நாணேற்றிக் காத்திருந்தான். கௌரவர்களும் மளமளவென்று நாணேற்றி அம்போடு இருந்தார்கள்.

பாதிதொலைவு பந்து வரும்போது அர்ஜுனன் அம்பு செலுத்தினான், ஒரு சிறிய புள்ளியாய் பந்து திரும்பி வரும்போது அம்பு மேலே போய் பந்தை அடித்து இன்னும் உயர்த்தியது. மறுபடியும் பந்து காணாமல் போயிற்று, திரும்பவும் பந்து தோன்றும்போது துரியோதனன் வில் வளைத்தான். துரியோதனன் வில் வளைக்கு முன்பு தர்மபுத்திரர் தன்னுடைய அம்பை விட்டான். அந்த அம்பு பந்தை தாக்கி உயரே தள்ளியது, பந்து மறுபடியும் காணாமல் போயிற்று.

இந்தமுறை துச்சாதனன் மிக தயாராக பந்துக்காக காத்திருந்தான். காற்று திசைமாறியது. காற்று திசை மாற்றத்தை புரிந்துகொண்டு நகுல சகாதேவர்கள் வேறு பக்கம் ஓடினார்கள். அம்பு வளைத்து காத்திருந்தார்கள். அவர்கள் நினைத்தபடி அந்த இடத்தில் பந்து வரத்துவங்கியது. நகுலன் முதல் சரத்தால் பந்தை அடிக்க, அந்த அம்பை தொடர்ந்து இரண்டாவது சரத்தால் சகாதேவன் அடிக்க இரண்டு அம்புகளின் தாக்கத்தால் மறுபடியும் பந்து உயரே கிளம்பியது. காணாமல் போயிற்று. பீமன் கவண் கல்லை கழற்ற ஆரம்பித்தான். பந்து கண்ணுக்குத் தெரிந்ததும் கவண் கல்லை உதறினான். கல் மேலே பறந்தது. பந்தை தாக்கியது. வெகு உயரம் கொண்டு போயிற்று. கல் மட்டும் திரும்பிவர அதை பந்து என்று நினைத்துக்கொண்டு சரமாரியாக கௌரவர்கள் கல்லை அடித்தார்கள். கனமான கல்லில் அம்பு பட்டு திரும்பி அவர்கள் மேலேயே விழுந்தது. போட்டுவிட்டு தலையை

பொத்திக் கொண்டார்கள், இரண்டு மூன்று அம்புகள் கௌரவர்கள் மீது விழுந்தன.

பாண்டவர்கள் வாய்விட்டு சிரித்தார்கள். மறுபடியும் பந்து தோன்ற துரியோதனன் வேகமாக அடித்தான். ஆனால் அடித்த அடி பிழையாக இருந்தது. பந்து திசை மாறியது. அம்பு அதிக உயரத்திற்கு பந்தை எடுத்துப் போகவில்லை. உரசிப்போனதால் பந்தினுடைய நிலை தடுமாறி சற்று தொலைவே உள்ள கிணற்றில் வேகமாக இறங்கியது. நீரில் பொத்தென்று விழுந்தது. கௌரவர்களும். பாண்டவர்களும் ஓடிப்போய் கிணற்றினுள் எட்டிப்பார்த்தார்கள். பந்து நிர்மலமான அந்த தண்ணீரில், அடி ஆழத்தில் படுத்துக் கிடந்தது. படிகள் இல்லாத அந்த கிணற்றில் எப்படி இறங்கி எடுப்பது என்று எல்லோரும் யோசித்துக் கொண்டிருந்தார்கள். வேலையாட்களை அழைத்து வருகிறேன் என்று துச்சாதனன் போக. நான் குதித்து எடுக்கிறேன் என்று பீமன் உடைகளை அவிழ்க்க தர்மபுத்திரர் இரண்டுபேரையும் தடுத்தார். வேறு ஏதேனும் வழி இருக்கிறதா என்று யோசிக்கலாம் என்று சொல்லி உடைகளில் உள்ள நூல்களில் ஒரு தொட்டில் கட்டி கீழே இறங்கலாமா என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தார்.

அப்போது துரோணர் தளர்ந்த நடையோடு கிணற்றுக்கு அருகே வந்தார். நீர் வாசனை அவரை அந்த கிணற்றுக்கு அருகே வரவழைத்தது. கிணற்றை சுற்றி நூற்றுக்கணக்கான சிறுவர்கள் இருப்பதை பார்த்து திகைத்தார்,

''யாரேனும் விழுந்து விட்டார்களா?''என்று கவலையோடு அருகே வந்தார் ''என்ன குழந்தைகளே. கிணற்றடியில் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள். யாரேனும் தவறி விழுந்து விட்டார்களா?'' என்று அவர்களைப் பார்த்து கேட்டார்.

''இல்லை அய்யா. எங்கள் பந்து விழுந்து விட்டது. அந்த பந்து நீருக்குள் கிடக்கிறது. அதை எப்படி எடுப்பது என்று நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நீங்கள் யார் என்று தெரியவில்லை, எனினும் ஒரு அந்தணர் என்பது புரிகிறது. ஐயா உங்கள் வரவு நல்வரவாகுக, அஸ்தினாபுரம் உங்களை கை கூப்பி வரவேற்கிறது'' என்று தர்மபுத்திரர் கை கூப்பினார்

துரோணர் அவர்களை ஆசீர்வதித்தார். ''யாராவது ஒரு அந்தணனைப் பார்த்தால் போதும் இந்த தர்மபுத்திரன் உடனே காலில் விழுந்து விடுகிறான். ஒரு அரசனுக்கு உரிய கம்பீரமும் இந்த தர்மபுத்திரனுக்கு வருவதேயில்லை என்று துரியோதனன் நினைத்தான்.

துரோணர் சுற்றும் முற்றும் பார்க்கவும் தன்முகத்தை திருப்பிக் கொண்டான்.

இருந்த நூறு பேரில் இந்த ஒரு சிறுவன் மட்டும் முகத்தை திருப்பிக் கொள்வதை துரோணர் பார்த்தார். மெல்ல சிரித்தார்.

''பந்து கிணற்றில் விழுந்து விட்டது. அவ்வளவு தானே...இதை எடுப்பது ஒன்றும் சிரமமில்லையே...''

''இல்லை ஐயா கிணறு மிக ஆழம். என் தம்பி பீமன் நீரில் குதிக்கறேன் என்று சொன்னான். நான்தான் தடுத்து விட்டேன்.''

''குதித்துவிடலாம். பந்தை எடுத்துவிடலாம். மேலே ஏறுவது கடினம். எனவே, பீமன் குதிக்காமல் இருப்பதே நல்லது. எங்கே பந்து! காண்பியுங்கள்.''

துரோணர் குனிந்து பார்த்தார். ''நான் எடுத்துத் தருகிறேன். கவலை வேண்டாம்'' என்று சொன்னார்.

ஆளுக்குஒரு நீண்ட துடப்பம்போன்ற புல்லைபறித்து வரச்சொன்னார். துரியோதனனைத் தவிர மற்ற எல்லோ

ரும் நீண்ட மெல்லிய துடப்பம்போன்ற புற்களைபறித்து வந்து அவரிடம் கொடுத்தார்கள். அவர் என்ன செய்ய போகிறார் என்று ஆச்சரியத்தோடு பார்த்தார்கள்.

அந்தப் புற்களை துரோணர் தடவிக் கொடுத்தார். மந்திரங்கள் ஜபித்தார். மந்திரத்தின் மூலம் புற்களை உறுதியாக்கினார். கூர்மையாக்கினார். ஒவ்வொரு புல்லாக மந்திரம் சொல்லி நீரில் குறிபார்த்து எறிந்தார். புல்லின் மீது புல்லாக, புல்லின்மீது புல்லாக புல்லின் மீது புல்லாக குத்திக்கொண்டு நின்றது.

முதற்புல் பந்தில் போய் ஆழத்தைத்தது. வரிசையாக சங்கிலிபோல் மற்ற புற்கள் ஒன்றின் மீது ஒன்று தைக்க, கடைசி புல்லை இழுக்க மெல்ல வெளியே வந்தது.

பந்தை மேலே எடுத்து, தருமபுத்திரரிடம் நீட்டினார்,

தருமபுத்திரர் அதைவாங்கி அதிசயத்தோடு துரோணரைப்பார்த்தார். ''ஐயா நீங்கள் யார்?'' என்று கேட்டார். துரியோதனனும் வியந்தான்.

''நீங்கள் என்னுடைய தேசத்திற்கு வரவேண்டும்'' என்று உரக்கச் சொன்னான்.

துரோணர் திரும்பி துரியோதனனைப் பார்த்தார். அவன் முகமாறுதலை கவனித்துக் கொண்டார்.

காலை யாரோ தொடுவது போல் இருந்தது. அர்ஜுனன் தனது சிரத்தை அவர் காலில் பதிய வைத்தான். நெற்றியை அவர் புறங்காலில் தடவினான். எழுந்து முழங்காலை கட்டிக் கொண்டான்.

''நீங்களே என் குரு, என் குருவை நான் கண்டுகொண்டேன். என் குரு நீங்கள் என்பதை நான் உணர்ந்துகொண்டேன். என்னை விட்டு எங்கும் போகாதீர்கள். என் வீட்டிற்கு வாருங்கள். தயவு செய்து வாருங்கள். உங்களுக்குத் தெரிந்த வித்தைகள் முழுவதும் எனக்கு கற்றுக் கொடுங்

உங்களை கரம்கூப்பி கெஞ்சிக்கேட்கிறேன். எனக்கு கள். விற்பயிற்சி சொல்லிக் கொடுங்கள்'' அவரை நோக்கி கை கூப்பினான்.

துரோணர் அவன் சிரசின் மீது கைவைத்தார். நிச்சயம் செய்கிறேன் என்று சத்தியம் செய்தார்.

அர்ஜுனன் எழுந்து அவர் கையை கோர்த்துக் கொண்டான். அவரை அஸ்தினாபுரத்திற்கு அவர்கள் அழைத்துப் போனார்கள்.

அஸ்தினாபுரத்து அரண்மனைவாசலில் பீஷ்மரும், கிருபரும் ஓடிவந்து கொண்டிருந்தார்கள். வரவேற்று உள்ளே அழைத்துக்கொண்டு போனார்கள். இளைப்பாற இடம் கொடுத்தார்கள். விசிற ஆட்கள் அமைத்தார்கள். உண்ணவும் பருகவும் கொடுத்தார்கள்.

அவர் சிரமம் செய்த பிறகு, அவருக்கு புதிய துணிகள் கொடுத்து, அருகே அமர்ந்து பேசினார்கள்.

''ஒரு கறவை மாடு என்ன ஆயிரக்கணக்கான மாடுகள் தருகிறோம். தேர் அனுப்பி உங்கள் மகனையும் மனைவியையும் அஸ்தினாபுரத்திற்கு அழைத்து வந்து விடுங்கள். கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் வில் வித்தை சொல்லிக் கொடுங்கள். பரசுராமரிடமிருந்து நீங்கள் அஸ்திரப் பயிற்சி வாங்கிக் கொண்டதை இப்பொழுதுதான் கேள்விப்பட்டேன். நீங்கள் நேரே வந்திருப்பது எங்கள் பாக்கியம்'' என்று கைகூப்பினார்கள்.

''கிருபர் குருவாக இருக்கும் போது நான் எதற்கு இன்னொரு குரு'' என்று துரோணர் தயங்கினார்.

''நான் பரம்பரையாக வருகின்ற குல குருவே ஒழிய, எனக்கு அஸ்திரவித்தைகளில் பழக்கம் அதிகமில்லை. ராஜகுமாரர்கள் நன்கு படிக்க வேண்டும். வில்லிலும் வாளிலும் மற்ற ஆயுதப்பயிற்சியிலும் உயர்ந்த நிலையை

அடைய வேண்டும். உங்களைப் போன்றவர்கள் துணை இல்லையென்றால், அவர்களால் அடைய முடியாது.

நீங்கள் யார் என்பது அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். அவர்களைக் கூப்பிட்டு அறிமுகப்படுத்துகிறேன்.'' என்று கௌரவர்களையும் பாண்டவர்களையும் கிருபர் அழைத்தார்.

''என்னைப் போல பல நூறு மடங்கு பலமுள்ளவர். புத்தியுள்ளவர், தெளிவுள்ளவர், உங்கள் தாத்தா பீஷ்மரைப் போல வைராக்கியம் உள்ளவர். இவர் எதிரே ஒரு சொல்கூட நீங்கள் தவறாகப் பேசக்கூடாது என்பது என் கட்டளை. ஒரு சின்ன அசைவுகூட, இவருக்கு எதிராக நீங்கள் நடந்துவிடக் கூடாது என்பது என்னுடைய உத்தரவு மீறி நடந்தீர்கள் என்றால், அதன் விளைவு பயங்கரமாக இருக்கும் என்பதை இப்பொழுதே சொல்லி வைக்கிறேன்.

எந்த கால கட்டத்திலும் துரோணருக்கு எதிராக தவறு எதுவும் செய்துவிட முடியாது என்பதை தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள். இந்த துரோணர், மனமிரங்கி உங்களுக்கு பாடம் சொல்லிக் கொடுக்க இசைந்திருக்கிறார்.

அவருடைய மனைவியையும் மகனையும் போய் அழைத்த வந்த பிறகு, நல்லநாள் பார்த்து, பாடம் துவங்கும். எனவே, நீங்கள் எல்லோரும் துரோணரை வணங்கி ஆசீர்வாதம் வாங்கிக் கொள்ளுங்கள்'' என்று கிருபர் உத்தரவிட, சகலரும் பணிந்தார்கள்.

அர்ஜுனன் முதலில் துள்ளி எழுந்தான். போகலாமா என்று கேட்டான். எங்கே என்று துரோணர் பதிலுக்கு கேட்டார்.

உங்கள் வீட்டிற்கு உங்கள் மனைவியையும் உங்கள் மகனையும் பார்க்க ஆசையாக இருக்கிறது. அவர்களை

யும் வணங்க வேண்டும் என்று விருப்பமாக இருக்கிறது நான் தேரோட்டி வருகிறேன். நாம் இருவரும் பேசிக் கொண்டே போகலாம்'' என்று ஆவல் பொங்க சொன்னான்.

கற்றவரைக் கண்டால் அர்ஜுனனுக்கு அத்தனை ஆனந்தம். வித்தை உடையவர்களைக் கண்டால், அர்ஜுனனுக்கு அவ்வளவு பணிவு. ஆர்வமும் பணிவும் உள்ளவன், நல்ல நண்பர்களை எளிதில் பெறுகிறான்.

துரோணர் சரி என்று சொன்னார்.

அர்ஜுனன் தேரோட்ட, அருகே துரோணர் அமர்ந்து கொள்ள, அவர்கள் வழியெல்லாம் பலதும் பேசிக்கொண்டு போனார்கள்.

கடைசிவரை துரோணர் துருபதனிடம் பட்ட அவமானத்தை அர்ஜுனனிடம் சொல்லவே இல்லை. அதை மறக்க முயற்சித்தார். ஆனால் உள்ளுக்குள்ளே ஒரு துண்டு நெருப்புபோல, கனன்று அனல் வீசிக்கொண்டே இருந்தது.

துருபதன் தேசத்தில் மறுவருடமும் பஞ்சம் நீடித்தது. எந்த ஹோமங்களுக்கும் மழை வரவில்லை.

துருபதன் தனியே போய் வருணபூஜை செய்தான். வருணனிடம் கதறினான். என் மக்களைக் கொன்று விடாதே' என்று கெஞ்சினான்.

மழை மூன்றாம் வருடம் பெய்யத் துவங்கியது நீர் நிலைகள் நிரம்பின. இனி எவரிடமும் அதிர்ந்து பேசுவதில்லை என்ற சபதத்தை மழை பெய்ய அவன் எடுத்துக் கொண்டான். துரோணரிடம் அவ்வாறு பேசியதற்காக உள்ளூற வருந்தினான். சுற்றியுள்ளவர்கள் முட்டாள்கள் தானோ என்று சந்தேகப்பட்டான். அடிக்கடி பரிசோதித்தான். சபையைக் கலைத்தான், தேர்ந்த சிலரை மட்

டும் அருகே வைத்துக் கொண்டு, புகழ்பாடிகளை வெளியே துரத்தினான். அதிகநேரம் தனியே இருந்து, யோசித்து முடிவுகள் எடுத்தான்.

துரோணரைத் துரத்தியது மிகப்பெரிய பிசகு என்பதை, மறுபடி மறுபடி உணர்ந்தான்.

துரோணர் அஸ்தினாபுரத்திற்குப்போய், அங்கு பஞ்ச பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் பாடம் சொல்லிக்கொண்டு இருக்கிறார். அர்ஜுனனுக்கு மிகக்குறிப்பாய் அதிகம் உதவிகள் செய்கிறார். மிகத் தேர்வான நிலையில் அவனை வைத்திருக்கிறார் என்று கேள்விப்பட்டான்.

அர்ஜுனனுடைய அன்பு துரோணரை திணறடித்தது. அவன் பணிவு மனதைக் கரைய வைத்தது. அவன் நன்றியும் இடத்தில் பார்த்தாலும் துரோணரை அவன் சாஷ்டாங்கமாக வணங்கினான். குருவை தெய்வத்தைப்பார்ப்பது போல் பார்த்தான். தான் அரசகுமாரன் என்பதை முற்றிலும் மறந்துபோய் குருவிற்கு முன்னே சாதாரண பணியாள் போல நின்றான், குருவினுடைய துணைவியாருக்கு சேவைகள் செய்தான். குருவினுடைய குழந்தையை தலையில் வைத்துக் கொண்டாடினான். அவனுக்கு குளிப்பாட்டினான் அவன் தூங்கும் பொழுது காவல் இருந்தான். விசிறினான் கால்பிடித்துவிட்டான்.

குருவின் மனைவிக்காக அவள் உத்தரவிடாமலேயே சிறிய வேலைகள் செய்தான். அவருடைய சௌகர்யத்தை உற்றுப்பார்த்துக் கொண்டே இருந்தான் வேலையாட்களை அதிகப்படுத்தினான். அரண்மனையின் வசதிகளை பார்த்துப்பார்த்து நிர்வகித்தான்.

துரோணருக்கு வீடு பற்றிய எந்தக்கவலையும் இருக்கக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தான்.

அர்ஜுனனுடைய கனிவு துரோணருடைய மனதை கொள்ளை கொண்டது.

விதுரர் அர்ஜுனனை தனியே அழைத்தார்.

''அர்ஜுனா...துரோணர் மீது நீ வைத்திருக்கின்ற மரியாதை எனக்கு மிகுந்த சந்தோஷத்தை தருகிறது. துரோணரைபோன்ற நல்ல அந்தணர்கள், நெகிழ்ச்சியானவர்கள் சிறிய உபகாரத்திற்கும் மகிழ்ந்து போகிறவர்கள். சிறிய பாராட்டுதல்களுக்கும் நாணி வெட்கப்படுகிறவர்கள். தாம் செய்த ஒவ்வொரு உதவிக்கும் பிரதி உபகாரம் செய்ய வேண்டும் என்ற எண்ணமுடையவர்கள்.

குறிப்பாய் அவருடைய மகனை நீ பாதுகாப்பதும், அவனுக்குத் துணையாக இருப்பதும் அவருடைய மனைவிக்கு சேவை செய்வதும் துரோணரை மிகுந்த சந்தோஷத்திற்கு ஆளாக்கி இருக்கிறது. தன்னை மட்டும் கௌரவப்படுத்தாது தன் குடும்பத்தோடு தன்னை கௌரவப்படுத்துகிறான் என்ற எண்ணம் துரோணருக்கு மிகப்பெரிய மகிழ்ச்சியை தரக்கூடும், அதனால் உனக்கு லாபம் அதிகம்,

வில்வித்தைகள் நிறைய சொல்லிக் கொடுப்பார் அவர் சொல்லிக் கொடுப்பதை கிரஹிக்கின்ற நிலையிலே நீ இருக்கவேண்டும். பயிற்சியை அதிகப்படுத்தவேண்டும். வித்தையைக் கற்றால் மட்டும் போதாது அர்ஜுனா இடைவிடாத பயிற்சிதான். உன்னை மிகச்சிறந்த வில்லாளியாக்கும் இடைவிடாது பயிற்சி செய்பவரைத்தான் ஆசிரியர் கொண்டாடுவார். அதிகம் கற்றுக் கொடுப்பார். எனவே, நீ பாடம் முடிந்த பிறகு, வகுப்பு முடிந்தது என்று வீட்டிற்குப் போகாதே. வேறு இடத்திற்குப்போ பயிற்சி செய்.''

வகுப்பு முடிந்து எல்லா மாணவர்களும், பசியும் அலுப்புமாய் திரும்பிவரும் போது அர்ஜுனன் மட்டும் தனியே இருப்பான். துரோணரை வலம்வந்து நமஸ்கரிப்பான் அவர் உத்தரவு கொடுத்ததும், அடுத்த வனத்திற்கு ஓடுவான். வனத்தில் நடுவே நின்று, அப்போது சொல்லிக் கொடுத்த அஸ்திரவித்தையை திரும்ப திரும்ப செய்து பார்ப்பான். ஒரு சிறிய தவறுகூட நேராத வண்ணம் தன் மனதையும் கையையும் புத்தியையும் வில்லையும் பழக்கி வைத்திருந்தான்.

வில்மேலே சார்த்திக் கொண்டுதான் உணவு சாப்பிடுவான். வில்லை படுக்கையில் வைத்துக் கொண்டு தான் தூங்குவான். வில்லை வைத்துக் கொண்டுதான் நீரில் குளிப்பான். வில் இல்லாமல் அர்ஜுனன் இருந்ததே யில்லை.

விதுரர் இதைப்பார்த்து சந்தோஷப்பட்டார். அவனை அருகே அழைத்தார்.

''அர்ஜுனா குறிபார்த்து அம்புவிட எது முக்கியம்'' கேள்வி கேட்டார்.

''பார்வை மூக்கியம்.'' என்று பளிச்சென்று பதில் சொன்னான்.

''ஒஹோ பார்வை இல்லையெனில் அம்பு எய்த முடியாதோ,''

''ஆமாம், பார்வை இல்லையெனில் குறி எது என்று தெரியாது. குறி எது என்று தெரியாவிட்டால், அம்பு எய்துவது கடினம்தானே.''

''தவறு அர்ஜுனா, சரியாக யோசிக்காமல் பதில் சொல்கிறாய், மறுபடியும் யோசித்துவிட்டு, நாளை வந்து பதில் சொல்,''

விதுரர் அவனை திரும்பி வீட்டிற்கு அனுப்பினார்.

அர்ஜுனன் பதறிப் போனான். இடைவிடாமல் விதுரர் கேள்வி பற்றியே யோசித்தார். குறி தப்பாமல்

அம்பு எய்ய என்ன வேண்டும். பார்வை வேண்டும் என்று சொன்ன பதிலில் தவறு இருப்பதாக அவனுக்குத் தெரியவில்லை. ஆனாலும். விதுரர் தவறு என்று திருப்பி அனுப்பிவிட்டார்.

என்ன காரணம் என்று புரியவில்லை என்று தவித்தபடி யோசனை செய்தான். அதை யோசித்தபடியே இரவு சாப்பிட உட்கார்ந்தான்.

சாப்பிட உட்கார்ந்தபோது பெரும்காற்று உள்ளே புகுந்து. விளக்குகளை அணைத்தன. கும்மிருட்டு பரவியது. ஆனால் உண்ணும் உணவை கை வாய்க்கு எடுத்துப்போயிற்று, கை சரியாக கலத்தில் மறுபடியும் வந்து உட்கார்ந்தது,'உணவை எடுத்தது. மறுபடியும் வாய்க்குப் போயிற்று. மறுபடியும் தட்டுக்கு இறங்கியது.

மறுபடியும் உணவை எடுத்தது. மறுபடியும் வாய்க்கு கொண்டு போயிற்று. ஆக, இருட்டும் நேரத்திலும் கை தன்னுடைய செயலை இடைவிடாது செய்து கொண்டிருக்கிறது.

சுற்றி ஒளியில்லாமல் எதுவுமே தெரியாமல் இருந்தபோதும், பழக்கத்தினால் கையும் மனமும் ஒருசேர இயங்குகின்றன. எனவே, குறிதப்பாது எய்ய, குறிதப்பாது அம்பு விட என்ன வேண்டும். பயிற்சி வேண்டும். பழக்கம் வேண்டும். இரவு நேரத்திலும் நான் பயிற்சி செய்ய வேண்டும். அர்ஜுனன் யோசித்தான், உணவை முடித்துவிட்டு, வில்லும் அம்புமாய் காட்டிற்குள் ஓடினான்.

ஒரு அம்பு அடித்து ஒரு இலக்கு ஏற்படுத்திக் கொண்டான். எந்த இடத்தில் அம்புபோய் தைத்ததோ அந்த இடத்தை ஒலியாலும் மனதாலும் நினைவுபடுத்திக் கொண்டு மறுபடி மறுபடி அதே இடத்தை அடித்துரைத்தான்.

விடிந்தபோது, அந்த ஒரு பள்ளியில் கிட்டதட்ட நூறு அம்புகள் பொத்துக் கொண்டிருந்தன.

அர்ஜுனனுக்கு புரிந்துபோயிற்று. விதுரரை மானசீகமாய் வணங்கினான். அன்றுமுதல் இரவு பயிற்சி செய்ய ஆரம்பித்தான்.

தான் சொல்லிக் கொடுத்த வித்தையை தன்னைக் காட்டிலும் அதிகமாக நேசிக்கும் மாணவனை குரு உயிராக மதிக்கிறார். துரோணருடைய ஒவ்வொரு தொடலிலும் ஆசீர்வாதம் இருந்தது. அர்ஜுனனை அவர் தனியே அழைத்து, பல அஸ்திரப்பயிற்சிகள் சொல்லிக் கொடுத்தார்.

கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் அவர் சொல்லிக் கொடுத்த வித்தையை ஊர்மக்கள் பார்க்க அரங்கேற்றினார்.

துரோணரை எல்லோரும் கொண்டாடினார்கள்.

துரோணர் கௌரவர்களையும் பாண்டவர்களையும் அழைத்து தனக்கு குருதட்சணை வேண்டும் என்று கேட்டார். நிச்சயமாகத் தருகிறோம் என்று அவர்கள் சத்தியம் செய்தார்கள்.

மறுநாள் சொல்வதாகச் சொல்லி துரோணர் தனியே போய் மௌனமாக அமர்ந்தார். துருபதனை நினைத்துக் கொண்டார். அவர் மனதில் மறுபடியும் சினம் மூண்டது

ஒரு நாள் விடியற்காலையில் அர்ஜுனனைத் தட்டி எழுப்பி, துரோணர் ஆற்றங்கரைக்கு கூட்டிக் கொண்டு போனார். முதல்நாள் ஏற்பட்ட கடும்பயிற்சியின் காரணமாக, உடம்பு வலிபோக மது அருந்திவிட்டு கௌரவர்கள் படுத்திருந்தார்கள்.

மறுநாள் ஒய்வு என்று துரோணர் சொன்னதால் வெகுநேரம் வரை தூங்கலாம் என்பதற்காக ஆட்டம் பாட்டங்களில் ஈடுபட்டு உறங்கப் போனார்கள், கௌரவர்கள் உறங்கும் நேரத்திலும் அர்ஜுனன் வனத்திற்கு போய் இரவு நேரப் பயிற்சியை விடாது செய்தான். ஒரு நடுநிசியில் வீடு திரும்பினான். நன்றாக குளித்து விட்டு சொம்புநிறைய பால் குடித்துவிட்டு சுவரில் சாய்ந்து கண் மூடி அலுப்பு தீர அமர்ந்திருந்தான்.

பிறகு ஒரு நாழிகை படுக்கலாமென்று வில்லை நெஞ்சில் அணைத்தபடி படுத்தான்.

குருநாதரின் காலடி சத்தம் கேட்டதும் பளிச்சென்று எழுந்து உட்கார்ந்தான். அவரோடு கிளம்பினான்.

அவர்கள் இருவரும் நடப்பதைபார்த்து தர்மபுத்திரன் விழித்துக் கொண்டான்.

"தர்மா நீ உறங்கு. எனக்கு அர்ஜுனனோடு ரகசியம் பேச வேண்டியிருக்கிறது."

துரோணர் அடிக்குரலில் பேசினார். "சரி" என்று தர்மபுத்திரன் கை கூப்பி வணங்கினான். சந்தோஷமாக மறுபடியும் நித்திரைக்குப் போனான். அவர்கள் கிழக்கே விடிவெள்ளி உதயமாகும் நேரத்தில் ஆற்றங்கரையில் அமர்ந்திருந்தார்கள்.

காற்றின் சிலிர்சிலிர்ப்பையும் ஆற்றின் அசைவையும் கூர்ந்து கவனித்துகொண்டிருந்தார்கள். சில வண்டுகளின் ஓசை, தூரத்தே சில பறவைகளின் கூவல், அவைகளின் இறக்கைகள் சலசலப்பு, மரங்கள் காற்றில் உராய்வதால் ஏற்படும் சப்தம்.வழி தவறிய ஒரு ஓநாய் தன் கூட்டத்தை அழைக்கும் அழுகை சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

"அர்ஜுனா இந்த பிரபஞ்சம் வெளியால் ஆனது. வெளி முழுவதும் சப்தங்கள் நிறைந்திருக்கின்றன. தோன்றிய பல்வேறு சப்தங்கள் ஒன்றோடொன்று கலந்து மருகி தன்னுடைய அடையாளமிழந்து ஒட்டுமொத்தமாய் எங்கோ பிரபஞ்சத்தில் ஒரு பகுதியில் மிதந்து கிடக்கின்றன. இந்த ஆற்றின் சப்தமும் அந்த ஒநாய் அழுகையும் பறவையின் கூவலும் இப்போது ஒலிக்கிறது.

அந்த ஒலி என்னவாகும். காற்றில் நகர்ந்து மேலெழுந்து பிரபஞ்சத்தினூடே ஊடுருவி, சிதறி, மெலிந்து வலுவில்லாது. தன் அடையாளமில்லாது எங்கோ கிடக்கும். அழிந்து விடாது. பிரபஞ்சம் முழுவதும் வெளியால் ஆனது. வெளி சப்தங்கள் நிறைந்தது.

உன்னுடைய வில்லை வளைத்து நாணை இழுத்து ஒரு ஹூங்காரம் செய்கிறாய் என்று வைத்து கொள். அந்த சப்தம் எங்கே போகும் அர்ஜுனா.

பிரபஞ்சத்தில் தான் எங்கோ பரவிக் கிடக்கும். அது போல ஒவ்வொரு உணர்வுகளிலிருந்து கிளம்பும் ஓசைகளும், சப்தங்களாக மாறி இந்த பிரபஞ்சத்தின் எங்கோ மூலையில் மறைந்து கிடக்கின்றன. தியானத்தின் மூலம் உடம்பை மனதை மெல்லியதாக்கி கொண்ட, துல்லியமாக்கிக் கொண்ட ரிஷிகள் இப்படி மறைந்து கிடக்கும் சப்தங்களை கண்டுபிடித்து அவைகளுக்கு ஒரு வடிவம் கொடுத்து அந்த வடிவத்தை இறுக்கி வரிசையாக்கி மந்திரம் என்று சொல்கிறார்கள்.

உதாரணமாக, இந்த உலகத்தின் அசைவுக்கு முதல் காரணம் ஓம் என்ற சப்தம் என்று கண்டுபிடித்தார்கள். பிரபஞ்சத்தின் ஓர் சக்தி அசையும் போது அந்த சக்தியின் அசைவு, அலைவு ஓம் என்று சப்தத்தை உண்டாக்குகிறது என்று உணர்ந்து கொண்டார்கள். அதுமட்டுமல்ல ஒவ்வொரு உணர்வும் ஒவ்வொரு சப்தத்தை வெளிப்படுத்து

கிறது என்பதை புரிந்து கொண்டார்கள். அன்பு ஒரு சப்தத்தை வெளிப்படுத்துகிறது. ஆத்திரம் ஒரு சப்தத்தை வெளிப்படுத்துகிறது. கோபம் ஒரு சப்தத்தை வெளிப்படுத்துகிறது. காமம், காதல் தனியான ஒரு சப்தத்தை வெளிப்படுத்துகிறது. இந்த சப்தத்தை மறுபடியும் கண்டு பிடித்து மந்திரமாக்கினார்கள். பூமி முழுவதும் உரம் இருக்கிறது. தாவரங்கள் அந்த உரத்தை உறிஞ்சி வளர்கின்றன. நாம் சில தாவரங்களை நன்கு வளர வேண்டுமானால் என்ன செய்கிறோம். உரம் தயார் செய்கிறோம் வேறு இடத்திலிருந்து உரம் கொண்டு வந்து செடிகளுக்கு போடுகிறோம். அதே போல் நாம் வலுவாக இருக்க வேண்டுமென்றால் நாம் சில காரியங்களை திறமையாக செய்ய வேண்டுமென்றால் அந்த உணர்ச்சியை தூண்டி விடவேண்டுமென்று ரிஷிகள் கண்டுபிடித்தார்கள்.

அந்த உணர்ச்சிகள் மூலம் என்ன சப்தம் வெளியாகிறதோ அந்த சப்தத்தை மறுபடி மறுபடி சொல்லி, அந்த உணர்வை பக்குவப்படுத்தினார்கள். உதாரணமாக ஓர் ஆண்மகன், காமத்தில் திறம்பட, தன் மனைவியோடு செயல்பட வேண்டுமென விரும்பினால் அதற்கு ஒரு மந்திரம் இருக்கிறது.

காமம் உடம்பிலிருந்து வெளிப்படும் போது ஏற்படுகின்ற சப்தம் ரிஷிகள் கண்டுபிடித்து, அதை மந்திரமாக்கி அந்த மந்திரத்தை சொல்லி காமத்தில் ஈடுபடுகிறபோது நல்லபடியாய் உடம்பு இயங்க வேண்டும் என்பதற்காக அதை திரும்ப திரும்ப சொல்லச் செய்தார்கள்.

அமைதியாக இருக்க ஒரு மந்திரத்தை கற்றுக் கொடுத்தார்கள். கோபம் வரும்போது, அந்த கோபத்தை கூர்மைபடுத்த இன்னொரு மந்திரம் கண்டுபிடித்தார்கள். விளைவுகள் வலிமையாக இருக்க ஒரு மந்திரம் கண்டு

பிடித்தார்கள். ஜனங்களை வசியப்படுத்த, முகம் அழகாக இருக்க மந்திரம் கண்டு பிடித்தார்கள்.

குருவை வணங்கும் போது அடிமனதிலிருந்து பிறப்பதற்காக ஓர் மந்திரத்தை சொல்லிக் கொடுத்தார்கள் அர்ஜுனா. அசைவினால் சப்தங்கள் ஏற்படுகின்றன உணர்வும் அசைவும் சப்தத்தை உருவாக்குகின்றன.

உணர்வினால் ஏற்பட்ட சப்தத்தை கண்டுபிடித்து அந்த சப்தத்தால் உணர்வை அசைய வைத்தார்கள். தாவரத்திற்கு தனியான உரம் அமைப்பது போல், இந்த வழியை ரிஷிகள் நமக்குச் சொல்லிக் கொடுத்தார்கள்.

நம் மனதின் உணர்வுகள் மட்டுமல்ல பஞ்ச பூதத்தின் அசைவுகளையும் அவர்கள் கண்டு கொண்டார்கள். தீ என்பது என்ன செய்தால் வளரும் என்பதை கண்டு கொண்டார்கள். ஒரு சிறிய பொறி நெருப்பை வைத்து விட்டு அதை அருகே வைத்து மந்திரம் சொன்னால் அது கொழுந்து விட்டு எரியத் துவங்கும்

மழை வேண்டுமென்றால் அதற்காக ஒரு மந்திரம் இருக்கிறது. அதை இடைவிடாது சொன்னால் மழை அடித்து பெய்யும். அந்த மழை நிற்பதற்கும் ஒரு மந்திரம் இருக்கிறது. மந்திரம் சொல்லி இடி இடிக்கலாம். மந்திரம் சொல்லி பூமியை குலுங்க வைக்கலாம். மந்திரம் சொல்லி காற்று வீச வைக்கலாம்.

பஞ்ச பூதங்களையும் அதன் சப்தங்களால் ஏற்பட்ட அசைவையும் கண்டுபிடித்து அந்த சப்தங்கள் மூலம் இந்த மந்திரங்களை அவர்கள் ஏற்படுத்தினார்கள். அஸ்திரம் என்பது இதுவே. உன் கையிலிருக்கும் அம்பை ஒரு குறிப்பிட்ட மந்திரம் சொல்லி தூண்டி விட்டாயானால் அது நெருப்பு கக்கிக் கொண்டு எதிரியின் மீது பாயும், அல்லது கடும் மழையை ஏற்படுத்தும். அல்லது குளிர் கொண்டு வந்து கொட்டும். அல்லது புகை மூட்டம்

செய்யும். அல்லது விஷத்தை கக்கும். அல்லது சூறாவளிகளை ஏற்படுத்தும்.

எனவே, அம்பு என்பது ஓர் உபாயம். மந்திரம் அந்த அம்பின் மீது சவாரி செய்கிறது. இதுவரை வில் வித்தை மட்டுமே சொல்லிக் கொடுத்தேன். இனி அஸ்திர பயிற்சிகள் ஆரம்பிப்போம். அஸ்திர பயிற்சி எல்லோராலும் செய்ய முடியாது. எவனுக்கு மன உறுதி இருக்கிறதோ, எவனுக்கு வைராக்கியம் இருக்கிறதோ, எவன் புத்தியும் மனமும் கூர்மையாக இருக்கிறதோ அவனால் மட்டுமே அஸ்திர பயிற்சிகள் செய்ய முடியும். அவனால் மட்டுமே மந்திர மந்திர உபதேசங்கள் பெறமுடியும். அவனால் மட்டுமே உபதேசம் பெற்ற மந்திரங்களை கவனமாக உச்சரித்து பிரயோகம் செய்ய முடியும்.

ஆத்திரமுள்ளவனுக்கும் அவசரமுள்ளவனுக்கும் மந்திர உபதேசங்கள் சொல்லித்தரக் கூடாது என்ற கட்டளைகள் இருக்கின்றன. எனவே, பஞ்ச பூதங்கள் காட்சியும் மனதின் உறுதியும் மந்திரசக்திக்கு கட்டுபடுகின்றன. மந்திர சக்தியால் திசைமாறுகின்றன. மந்திர சக்தியால் உற்சாகமாகின்றன. உக்கிரமடைகின்றன. எனவே, அர்ஜுனா இந்த நல்ல நாளில் விடியற்காலை குரு ஹோரையில் இந்த விஷயத்தை உனக்கு சொல்லிக் கொடுக்கிறேன்.

முதல் மந்திரம் ஜனங்களை உன் பக்கம் வசியம் செய்யும் மந்திரம். யார் பார்த்தாலும் யார் இவன் என்று வியந்து பார்க்க வைக்கும் மந்திரத்தை உனக்கு முதன் முதலில் உபதேசிக்கிறேன்,

தானே அள்ளி அள்ளி கொடுக்கின்ற ஒரு குரு ஒருவனுக்கு கிடைப்பதற்கு மிகப்பெரிய அதிர்ஷ்டம் வேண்டும். அந்த அதிர்ஷ்டத்தை பயன்படுத்திக் கொள்ள பணிவு வேண்டும்.

குருவோடு பழகுவது எளிதல்ல. அது தெய்வத்தோடு பழகுவதையும் விடகடினம். அறிவிலும் வித்தையிலும் ஞானத்திலும் ஒழுக்கத்திலும் சிறந்த ஒரு மனிதரோடு நெருங்கி பழகி அவரைப் புரிந்து கொண்டு, அவரை அனுசரித்து போய் அவருக்கு உதவியாக இருந்து அவர் மனம் குளிர்ந்து, தானே வித்தைகள் சொல்ல முன் வரும்போது மௌனமாய் அதை ஏற்று உள்வாங்கிக் கொள்ளுதல் என்பது வெகுசிலருக்கே கிடைக்கும்.

பெரிய அரச பதவியைவிட, மிகப்பெரிய செல்வத்தை விட, அழகிய பெண் மனைவியாக அமைவதை விட, புத்தியும் ஆரோக்யமுள்ள குழந்தைகள் பெறுவதை விட இது மகத்தானது. இந்த விஷயத்தின் மூலம் மேற் சொன்ன எல்லா விஷயங்களும் எளிதாக கிடைக்கும். குரு ஒருவரை உயர்த்த தீர்மானித்து விட்டால் அதற்கு எதிர்ப்பேது யாரால் அதை தடுக்க முடியும். சாதாரண எதுவுமில்லாத, மிக குறைவான புத்தியுடைய ஆட்களை கூட குரு உயர்ந்த இடத்தில் அமர வைத்து விடுவார்.

அர்ஜுனன் போன்ற கூரிய மதி படைத்தவர்கள் கிடைத்த போது குரு சந்தோஷமடைகிறார். அவன் வைராக்கியம் கண்டு பரவசமாகிறார், கூர்த்த மதியும் வைராக்கியமும் அமைதியும் கர்வமில்லா தன்மையும் நிறைந்த இளைஞர்களை இன்னும் அருகே இழுத்துக் கொள்கிறார்.

இவர்களால் உலசத்திற்கு லாபம் உண்டு என்பதை புரிந்து கொண்டு தன்னுடைய வாழ் நாளிற்கு பிறகு தன் பெயரைச் சொல்லக் கூடிய ஓர் தகுதி இவனுக்கு மட்டுமே இருக்கிறது என்று தேர்ந்தெடுத்து அவனுக்கு சகலமும் சொல்லித்தருகிறார். யாருக்கு என்ன எப்போது சொல்லித் தரவேண்டுமென்கிற தீர்மானமும் குருவாலேயே நிர்ணயிக்கப்படுகிறது.

"பார்த்தனே, மிக எளிய முறையில் நான் கற்ற அஸ்திர விஷயங்களை அதே முறையில் உனக்கு தெரிவிக்கிறேன் வா" என்று மறுநாள் விடிகாலையில் அழைத்துப் போனார்.

அர்ஜுனன் அவர் கூடவே நடந்தான் அர்ஜுனனுடைய சிறப்பும் துரோணருடைய சிறப்பும் உலகத்திலுள்ள மக்கள் சுமையை குறைப்பதற்காக ஏற்பட்டவை. எனவே அவருக்கு வெகுமதியாய் கிடைத்த அஸ்திர வித்தையை அர்ஜுனனுக்கு அன்போடு கொடுத்தார். எனக்குக் கிடைத்தது உனக்கும் கிடைக்கட்டும் என்கிற நெகிழ்ச்சியில் சகலமும் அவனுக்குச் சொல்லி என் மனதில் நான் புரிந்து கொண்டவை நீ புரிந்து கொண்டவையாக மாறட்டும் எனக்குத் தெரிந்த மந்திரங்கள் உனக்குத் தெரிந்த மந்திரங்களாய் ஆகட்டும். என்னுடைய உள்ளிருந்து எழும் சப்த ஒலிகளை நீ கேட்காமலேயே புரிந்து கொள்ளும் தன்மை உனக்கு வரட்டும்." என்று சொல்லி அவர் கையில் நீர் வார்த்தார்.

அர்ஜுனன் மாறிப்போனான். அஸ்திரவித்தைகள் முழுவதும் உள்ளே தேக்கிக் கொண்டான். அஸ்திர வித்தை அவன் மனதுக்குள் நுழைந்ததும். அவனது பொலிவும் தோற்றமும் கம்பீரமும் அதிகமாயின. முகத்தில் இறுக்கம் கூடியது. மௌனம் அதிகரித்தது! கண்கள் கூர்மையாயின. எந்நேரமும் இரையைத்தேடும் பருந்து போல அதிகம் அசையாது மிதப்பது போல் நடந்து, தன் காரியத்திலேயே மிகக் கருத்தாக இருந்தான்.

கௌரவர்கள் பேச்சாலும் போகத்தாலும் அதிக உணவாலும் தங்களை இழந்து எழுந்து அடங்கும் காக்கைகள் போல, அதிகம் ஆரவாரித்துக் கொண்டிருந்தார்கள்.

அர்ஜுனனுடைய பொலிவைப் பார்த்துவிட்டு தருமபுத்திரரும் பீமனும் அவனை மரியாதையோடு நோக்கினார்கள். நகுலனும் சகாதேவனும் தாழ்பணிந்து வணங்கினார்கள்.

குந்தி கைதூக்கி ஆசிர்வதித்தாள். பீஷ்மரும், கிருபரும் விதுரரும் அர்ஜுனனை தூரத்திலிருந்து பார்த்து மனதுக்குள்ளேயே பாராட்டிக் கொண்டார்கள்.

தாயோடும் தமயனோடும் அர்ஜுனன் சூழ்ந்திருந்த ஒரு நேரத்தில், துரோணர் அர்ஜுனனைப் பார்த்து,எனக்கு என்ன காணிக்கை தரப் போகிறாய், "அர்ஜுனா" என்று பிரியமாகக் கேட்டார். அர்ஜுனன் உடனே எழுந்து நின்று கைகட்டி. அவரது உத்தரவிற்கு காத்திருந்தான். நீங்கள் என்ன கேட்டாலும் தருகிறேன் என்பது போல் நின்றான்.

"துருபதன் என்னை அவமானப்படுத்தினான். இல்லையெனில் இந்தப்பக்கம் நான் வந்திருக்கவே மாட்டேன். தேவையில்லாமல் என் அமைதியான வாழ்க்கையை துருபதன் திசை மாற்றினான். ஒருவர் அமைதியை திசைமாற்றுதல் தவறு என்று அவனுக்கும் பாடம் சொல்ல வேண்டும். நட்பு உயர்வானது, என்பதை அவனுக்குத் தெளிவாக்கவேண்டும். உலகத்தில் ஏழ்மையோ செல்வமோ மதிப்புதராது. வித்தைதான் மிகப் பெரிய மதிப்பு என்பதை அவனுக்கு உணரவைக்க வேண்டும்.

எனவே அர்ஜுனா, நான் உனக்கு கற்றுக் கொடுத்த வில்வித்தையை பயன்படுத்தி என்னுடைய தோழன் துருபதனை போரில் வென்று, அடித்து இழுத்துவா நீ மட்டும் போருக்குப் போனால் நன்றாக இருக்காது. எனவே ,உன் தமையன்மார்களோடும், தம்பிகளோடும் உனதுபங்காளிகளான கௌரவர்களோடும் துருபதனுக்கு முன்கூட்டி

அறிவித்து, நல்ல கால அவகாசம் கொடுத்து, அவனோடு போருக்குப்போய் நேருக்குநேர் சந்தியுங்கள். யுத்தம் செய்யுங்கள்'' என்று சொன்னார்.

''அர்ஜுனன் சரியென்று உடனே கைகூப்பி, ஒப்புக் கொண்டான். ''நான் உங்களுக்குத் தரும் காணிக்கை பலிதமாக வேண்டும் என்று ஆசீர்வதிக்க வேண்டுமாய் அவர் காலில் விழுந்து பணிந்து வணங்கினான்.

அர்ஜுனனுடைய பணிவு இப்படிப்பட்டது. கடவுளை வணங்க வேண்டும் என்றால், உடனே கைகூப்பி மனதுக்குள், நான் உன்னை வணங்க உன் க்ஷேத்ரத்திற்கு வந்து உன்னைப்பார்க்க வேண்டும் எனவே, உன் அருள்வேண்டும் என்று கைகூப்பிக் கும்பிடுகிறவன் நான் வருகிறேன் என்று சொல்லாதவன். க்ஷேத்திரத்திற்கு வரவும் உன் கருணை வேண்டும் என்று நம்புகிறவன். எனவே, குருவிற்காக போர் செய்யும்போது, குருவின் ஆசிவேண்டும் என்று அவரைப் பணிந்து நின்றான். அந்தப் பணிவு துரோணருக்குப் பிடித்திருந்தது. மிகச் சரியான நபரிடம் நம் வித்தையை ஒப்படைத்திருக்கிறோம் என்ற சந்தோஷமும் நிறைவும் ஏற்பட்டன..

அவர்கள் துருபதன் தேசத்திற்குப் பயணமானார்கள் குருவிற்கு காணிக்கை கொடுப்பதாகப் போகிறோம் என்று ஊரெல்லாம் சொல்லிக் கொண்டார்கள்.

தருமர் யோசித்து கௌரவர்களை முன்னே அனுப்பினார். துருபதனை கைது செய்வது மிகஎளிது. இதை அர்ஜுனன் அழகாக செய்து விடுவான். எனவே, அர்ஜுனன் இந்தக்காரியத்தை செய்வதற்கு முன்பு நாம் செய்துவிடுவதற்கு நன்றாக இருக்கும் என்று கௌரவர்கள் பேசிக்கொண்டார்கள். எனவே, தருமர் அனுமதித்ததும் சந்தோஷமாய். வெகுவிரைவாய் துருபதன்

தேசத்தை அடைவதற்கு முயன்றார்கள், அதில் அதிகம் களைத்தப் போனார்கள்.

துருபதன் எல்லையைத் தொட்டதும், காத்துக் கொண்டிருந்த துருபதனின் ஆட்கள் வெகுதூரம் பயணப்பட்டு வந்த கௌரவர்களை அடித்து துவம்சம் செய்தார்கள். கௌரவர்கள் சண்டை போடட்டும் என்று பாண்டவர்கள் ஓய்வெடுத்துக் கொண்டார்கள்.

அர்ஜுனன் ஆற்றங்கரையில் ஒரு கல் மீது அமைதியாய் உட்கார்ந்து கண்மூடி ஜபம் செய்தான். குரு தனக்கு என்னவெல்லாம் உதவி செய்திருக்கிறார் என்பதை வரிசையாக யோசித்து, மனதில் நிறுத்திக் கொண்டான்.

அதேநேரம், துருபதன் குருவிற்கு இழைத்த துரோகத்தை கற்பனை செய்ய முயன்றான். என்ன கற்பனை செய்தாலும் துருபதன்மீது அவனுக்கு கோபம் வரவில்லை. கோபம் வராமல் ஒருவர்மீது எப்படி யுத்தம் செய்வது என்று தவித்தான் ஆழ்ந்து சிந்தித்தான். குரு கட்டளையிட்டிருக்கிறார் என்று மட்டுமே யுத்தம் செய்வதைவிட, ஒரு உக்கிரத்தோடு யுத்தம் செய்வது நல்லதல்லவா என்று தருமரிடம் பேசினான்.

''இல்லை, அர்ஜுனா, கோபமில்லாமல் யுத்தம் செய்ய உன்னால் முடிகிறதா என்றுதான் குரு இந்தப் பரிட்சை வைக்கிறார் என்று நினைக்கிறேன். உனக்கு சகல அஸ்திர வித்தைகளும் தெரியும். அந்த அஸ்திர வித்தைகளை இங்கு பிரயோகம் செய்துவிடாதே. இவைகளால் மனிதர்களுக்கு மிகப்பெரிய ஊறு ஏற்படும்.

உண்மையில் துருபதனுக்கும் நமக்கும் எந்தச் சண்டையுமில்லை. ஒருவேளை கௌரவர்களிடமிருந்து நாம் பிரிந்தால், நமக்கு உதவி செய்வதற்கு துருபதன் நிச்சயம் உதவுவான். ஆகவே, துருபதனை செயலற்றுப்

போகச் செய்து, அவனை தேர்க்காலில் கட்டி, கொண்டு வந்துவிடு.

கௌரவர்களால் துருபதனை ஜெயிக்க முடியாது என்பது தெளிவாகத் தெரிகிறது. அதிக ஓட்டத்துடன் துருபதனை அடைந்து, இப்போது உதை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். சற்று அவகாசம் கேட்டிருந்தால் கூட, துருபதன் கொடுத்திருப்பான்.

அவகாசம் எதற்கு கேட்கவேண்டும் என்று கூச்சலிட்டிருக்கிறார்கள். அவகாசம் தேவையில்லை என்று முழங்கியிருக்கிறார்கள். உள்ளே இறங்கி உதை வாங்கியிருக்கிறார்கள். நூறு பேராக இருப்பதால் ஏற்படுகின்ற வேதனை இதுதான். அவர்கள் வெறும் ஊர்வலம்.

ஒரு கூட்டமாக இருந்து வாழ்வதால் உண்டான குழப்பம் இதுதான்.

மற்றவர்கள் தங்களைப் பாராட்ட வேண்டும் என்பதற்காக அவகாசம் வேண்டுமா என்றபோது வேண்டாம் என்று வீறாப்பாகச் சொல்லிவிட்டு. இரண்டு அடி கூட எடுத்து வைக்கமுடியாமல் துவண்டு போய்விட்டார்கள். ஒருவரைக்கூட எதிர்க்க முடியாமல், உதை வாங்கிக் கொண்டு திரும்புகிறார்கள். நமக்கு இங்கு இரண்டு நாட்கள் நல்ல அவகாசம் ஏற்பட்டிருக்கிறது.

நீ நாள் முழுதும் ஜபம் செய்து சூரியனைப் போல் பிரகாசிக்கிறாய். நீ வந்து நின்றாலே துருபதன் சரணடைந்து விடுவான் என்று எனக்குத் தோன்றுகிறது.

எனினும், கௌரவர்கள் முற்றிலுமாக விலகி ஓடட்டும் என்று தருமர் காத்திருந்தார். அவர்கள் நினைத்தபடியே கௌரவர்கள் சிதறி ஓடினார்கள். காடுகளில் ஒளிந்து கொண்டார்கள்.

"ஒளிந்து கொண்டவர்களை துருபதன் படைகள் விட்டுத் தேடினான். கடுமையாய் தண்டித்தான். சிறிய அரசகுமாரர்கள் என்பதால் முடமாக்காமலும் உயிரைப் பறிக்காமலும் அவர்களைத் துரத்தக் கட்டளையிட்டான்.

அர்ஜுனன் இருக்கின்ற ஆற்றங்கரையோரம் வந்து நின்றான்.

அது அவனுடைய எல்லையில்லை. இருப்பினும் எல்லைக்கருகே ராஜகுமாரர்கள் வந்தால், அவர்களை யாரென்று விசாரிப்பது ஒரு அரசனுடைய கடமை. எனவே, தேரைவிட்டு இறங்கி அவர்களுக்கு அருகே போனான்.

தருமரும் பீமனும் அர்ஜுனனும் நகுல சகாதேவனும் எழுந்து நின்றார்கள். குந்தி எங்கே என்று விசாரித்தான். அவளைப் பார்த்து பணிந்தான். விலகி நின்றான்.

"எதற்கு இங்கு வந்திருக்கிறீர்கள்." என்று கை கூப்பிக் கேட்டான்.

"உங்களோடு போர் புரிவதற்காக வந்திருக்கிறோம். போர் அங்கு நடந்து கொண்டிருப்பதால், எல்லையில் இளைப்பாறிக் கொண்டிருக்கிறோம். எங்களுடைய குருவான துரோணரை நீங்கள் அவமதித்தீர்கள். உங்களை தேரில் கட்டி அழைத்துவரச் சொல்லி துரோணர் கட்டளையிட்டிருக்கிறார்.

உங்கள் மீது எனக்கு எந்தக் கோபமுமில்லை. உங்களோடு எனக்கு எந்த சண்டையுமில்லை. மாறாய் மதிப்பும் மரியாதையும் அதிகமுள்ளது. ஆயினும் குருகட்டளையை மீற முடியாது. நீங்களாக சரணடைந்து விட்டால் நல்லது. உயிர்ச்சேதம் குறையும். அல்லது யுத்தத்திற்குத் தான் வர வேண்டும் என்று சொன்னால், அதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

கௌரவர்களோடு படையிட்டு உங்கள் படை சோர்வாக இருக்கிறது. எனவே, இரண்டு நாள் தாமதித்து யுத்தத்தை வைத்துக் கொள்ளலாம் என்று நான் நினைக்கிறேன். நன்கு உணவு உண்டு ஓய்வெடுத்துக் கொண்ட பிறகு, உங்களுடைய படையைத் திரட்டிக் கொண்டு நீங்கள் சங்கநாதம் செய்தால் உங்கள் எல்லைக்குள் நுழைக்கிறோம்'' என்று தருமபுத்திரர் சொன்னார்.

துருபதன் சந்தோஷமானார். ''இந்த இளம் வயதில், இப்பேர்பட்ட வீரத்தை, தர்மம் தெரிந்த பேச்சை, நான் எதிர்பார்க்கவே இல்லை. தர்மபுத்திரா, நீ நீடுழி வாழ வேண்டும். உன் ஆட்சி உலகமெல்லாம் பரவவேண்டும்'' என்று ஆசீர்வதித்தார்.

தருமபுத்திரர் மனம் நெகிழ்ந்து தன் சிரசை அவர் காலில் வைத்தார்.

பீமனைப் பார்த்து துருபதன் அழைத்தான். ''உனக்கு இங்கே உணவு கிடைக்கிறதா. காட்டில் கிடைக்கும் வெறும் கிழங்குகளைத் தின்கிறாயா அல்லது கையோடு உணவுகள் எடுத்து வந்திருக்கிறாயா.

ஒன்று செய்கிறேன். பீமன் இங்கு இருப்பதால், தனிப்பட்ட உணவுகளை இங்கு அனுப்புகிறேன். ஒரு விருந்தினரைப்போல, உங்களை அரண்மனைக்கு அழைக்க முடியாவிட்டாலும், இந்தக் காட்டிற்குள் ஒரு விருந்தினரைப் போல, உங்களை நடத்த விரும்புகின்றேன். மாட்டு வண்டிகளில் நல்ல உணவுகள் வரும். பீமன் அதைச் சாப்பிட்டு பசியாறட்டும். பீமனுக்கு கொடுப்பது எனக்கு சந்தோஷமாக இருக்கிறது'' என்று சொன்னார்.

பீமன் நெகிழ்ந்து போனான். யார் அவனுக்கு உண
விட்டாலும் அவன் மலர்ந்து விடுகிறான். எனவே, மிக

வாஞ்சையோடு துருபதன் காலில் விழுந்து நமஸ்கரித்தான்.

துருபதன் அவனை மனமார ஆசீர்வதித்தான்.

தமையன்கள் நமஸ்காரம் செய்ததால் நகுலர் சகாதேவர்கள் ஓடிப்போய் அருகே நின்றார்கள்.

துருபதன் அவர்களைத் தழுவிக் கொண்டான்.

''சந்திர சூரியர்கள்போல, எவ்வளவு அழகாக இருக்கிறீர்கள். உங்களைத் தொடுவதே எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது. உங்களுக்கு என்ன வேண்டும். சொல்லுங்கள்.''

''எங்கள் ஐவரோடும் நீங்கள் கடுமையாக யுத்தம் செய்யவேண்டும். எங்களுக்காக விட்டுக் கொடுக்கக் கூடாது. நாங்கள் உங்களை இழிவுபடுத்த விரும்பவே இல்லை. நீங்கள் மிக நல்ல மனிதர் என்று நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். எங்கள் குருவின் கட்டளையின் பேரில் மட்டுமே. நாங்கள் யுத்தம் செய்ய வந்திருக்கிறோம். இந்த யுத்தம் ஒரு விளையாட்டு யுத்தமாக போய்விடக்கூடாது. மிகப்பெரிய வீரியத்துடனும் வீரத்துடனும் நடத்தப்படவேண்டும்.

எங்களுடைய திறமையைப்பற்றி நாங்கள் அறிந்து கொள்ள எங்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம். எனவே, இப்போது இருக்கிற வாஞ்சையெல்லாம் ஒதுக்கிவிட்டு, எங்கள் மீது நீங்கள் காட்டுகிற பிரியத்தையெல்லாம் தள்ளி வைத்துவிட்டு, மிகக் கடுமையாய் எங்களை தண்டிக்க நீங்கள் முற்படவேண்டும்.

நீங்கள் அடிக்கிற ஒவ்வொரு அடியும் எங்களைத் துடிக்க வைத்து, கோபத்தை உண்டுபண்ணி, உங்களை கடுமையாகத்தாக்க நாங்கள் முயற்சி செய்யவேண்டும்.

இதைத்தான் நாங்கள் உங்களிடமிருந்து கேட்கின்றோம்.'' என்று கைகூப்பினார்கள்.

துருபதன் வாய்விட்டுச் சிரித்தார்.

''என்ன புத்திசாலித்தனம், எவ்வளவு தெளிவு, இது வல்லாமல், கௌரவர்கள் மாடுபோல் உள்ளே நுழைந்து உதை வாங்கிக் கொண்டு போனார்களே...மனிதர்கள் இரண்டு வகையினர் என்பது எவ்வளவு தெளிவாகப் புரிகிறது. கூர்த்தமதியும் பொறுமையும் உள்ளவனே ஜெயிப்பான் என்பதற்கு நீங்கள் உதாரணம். அவசர புத்தியும் அகங்காரமும் உள்ளவர்கள் அடிவாங்குவார்கள் என்பதற்கு கௌரவர்கள் உதாரணம்.

கூட்டமாக மனிதர்கள் இருக்கவே கூடாது. கூட்டம் அதிகமாக அதிகமாக குழப்பங்கள் அதிகமாகும். கௌர வர்கள் நூறுபேராக இருப்பதுதான் அவர்களுடைய மிகப் பெரிய பலவீனம்.''

துருபதன் அந்த இளைஞர்களுக்கு பொதுவாய் அறிவு ரைகள் சொல்லிவிட்டு, விலகிப்போனார். அர்ஜுன னுடைய மௌனமும் கூர்மையான அமைதியும் அவருக்கு சந்தோஷமாக இருந்தன. இதைத்தானே நமக்கு துரோ ணர் கற்பிக்க முயன்றார் என்று யோசித்தார். இதைக் கற்றுக்கொள்ளாமல் விட்டு விட்டோமே என்று கவலைப் பட்டார்.

அவர்களுக்கு நல்ல உணவும் உடையும் அனுப்பி னார். பரிசுகள் வழங்கினார். யுத்தத்திற்கு, நல்ல ஓய்விற்குப் பிறகு நாள் குறித்தார். குறித்த நாளில் சங்கொலி எழுப்பினார்.

இவரும் பிரிந்துநின்று துருபதருடைய நகரை கடுமை யாகத் தாக்கினார்கள். ஒட்டுமொத்தமாய் நேரே வரு வார்கள் என்று நினைத்திருந்த துருபதன் இந்தத் தாக்குத

லால் ஆடிப்போனார். நேர் எதிரேவந்து தாக்குகின்ற தருமரை கடுமையாக தண்டிக்க முயற்சி செய்தார்.

இடப்பக்கத்திலிருந்து பீமன் கோட்டையை நொறுக்கி, ஊருக்குள் புகுந்துவிட்டான் என்ற செய்தி கேட்டதும் தருமரை அப்படியே விட்டுவிட்டு கோட் டைக்குள் புகுந்து பீமனை வெளியே துரத்த முயற்சி செய்தார்.

இடதுபக்கம் மதிலேறி நகுல சகாதேவர்கள் இறங்கி விட்டார்கள் என்று செய்தி வந்தது. அங்கு விரைந்து, அவர்களை அடித்து விரட்டினார். மறுபடியும் தருமரிடம் ஓடிவந்தார். அர்ஜுனன் எங்கே என்று தேடினார்.

''அர்ஜுனன் கோட்டையின் பின்பக்கத்திலிருந்து நாண் ஒலி செய்தான். துருபதன் வருவதற்காக தனியா ளாய் காத்திருந்தான். இடதுபக்கமும் வலதுபக்கமும் படைகள் தாக்க. தருமரோடு கனமான குதிரை யானைப் படைகள் இருக்க, தனி ஒரு ஆளாய் அர்ஜுனன் பின்னால் வந்து நிற்கிறான் என்று தெரிந்ததும் என்ன செய்வது என்று புரியவில்லை. அர்ஜுனனை சந்திக்க பின்பக்கம் ஓடினார். கதவு திறந்தார். திறந்த கதவை அர்ஜுனன் வேகமாக அடிக்க, அந்தக் கதவு மூடிக் கொண்டது.

அர்ஜுனன் மறுபடியும் தேரில் ஏறிக்காத்திருந்தான்.

கதவை உடைத்து வெளியே வர வேண்டியதாயிற்று. தன் கோட்டைக் கதவை தானே உடைக்க வேண்டிய நிலையை அர்ஜுனன் செய்துவிட்டானே என்று நினைக் கும் போது துருபதனுக்கு சிரிப்பு வந்தது.

அகழியைத் தாண்டி அர்ஜுனனை நோக்கிப் போக அர்ஜுனன் துருபதனைமட்டும் அருகே வர

விட்டு மற்ற படைகளை அடித்து காயப்படுத்தினான். குதிரைகளின் சேணைகளை துண்டாக்கி, அவைகளை தனியே விடுவித்தான். தேர், குதிரைகளில்லாமல் சொருகிக் கொண்டு சுருண்டு புரண்டன. யானைகளை அடித்துக் கலவரப்படுத்த, அவை காலாட்படையை தொந்தரவு செய்தன.

தேர்பாகனோடு துருபதன் மட்டும் அர்ஜுனனோடு முன்னேவர, அருகே வந்த தேர்பாகனை வில்லில் அம்பு பூட்டி இடது கையைத்துளைத்தான். குத்தி நின்ற அம்பைப் பிடுங்கிப்போட்டு மறுபடியும் தேர்பாகன் குதிரை ஓட்ட வலதுகையையும் துளைத்தான். வேறு வழியில்லாமல் தேர்பாகன் குதிரையிலிருந்து குதிக்கும்படி ஆயிற்று.

குதிரைகள் தலைதெறிக்க ஓடின துருபதனால், குதிரைகளை கட்டுப்படுத்த முயலும் போதெல்லாம். அர்ஜுனன் உருண்டையான தலைகொண்ட அம்புகளை குதிரை மீது செலுத்தி. அவைகளை வலிக்கச் செய்து. அவைகளை எகிறச்செய்து வேகமாக ஓடச் செய்தான்.

தேர் இடது வலதும் ஆடிற்று. ஒரு இடத்தில் நிற்க முடியாமல் அலைந்தது. தேர்காலை இறுக்கப் பிடித்துக் கொண்டு நிற்கும்படி ஆயிற்று. தேர்நாலா பக்கமும் அலைந்தது. துருபதனை அலைக்கழிகிற வரையில் தேரை உட்கார்ந்த இடத்திலிருந்தே அம்புவிட்டு ஓடவிட்டு, குதிரைகளை கடைசியாய் சிதறடித்து தேர் புரண்டு உடைந்த பிறகு அங்கு ஓடிப்போய் துருபதனை தூக்கி நிறுத்தி அவனுடைய ரத்தகாயங்களைக் கழுவி, மறுபடியும் கீழே விழுந்த கிரீடத்தை அணிவித்து தாகத்திற்கு பானகம் கொடுத்து, மெல்ல தன்னுடைய தேரில் ஏற்றி தருமரிடம் வந்தான்.

அர்ஜுனனுடைய ஆசனத்தில் சுருண்டு கிடக்கிற, துருபதனைப் பார்த்து பாண்டவர்கள் பதறினார்கள்.

ஓடிப்போய் ஆசுவாசப்படுத்தினார்கள். மருந்துகள் போட்டார்கள்.

இப்பொழுது என்ன செய்வது என்று கேட்டார்கள். இல்லை அரண்மனையில் கொண்டு போய் விட்டுவிடலாம் என்று அர்ஜுனன் சொன்னான்

துருபதன் தலை தூக்கினார்.

''இல்லை, அர்ஜுனா என்னை துரோணரிடம் கொண்டு போ நான் தோற்று விட்டேன், எந்தநேரமும் நீ என்மீது அம்பு விட்டிருக்கலாம். கொன்று போட்டிருக்கலாம். என்னைக் கொல்லாமல் அலைக்கழித்தாய். நீ ஜெயித்தாய் என்பது திண்ணம் எனவே என் கை கால்களை கட்டி, அவர் சொன்னது போல, தேர்சக்கரத்தில் வைத்து இழுத்துக் கொண்டு போ. துரோணர் சந்தோஷமாகட்டும்'' என்று பணிவோடு சொன்னார்.

ஆனால், தேர்காலில் கட்ட அர்ஜுனனுக்கு மனம் வரவில்லை. அவரை அருகே வைத்துக் கொண்டு, தேர் ஓட்டி அஸ்தினாபுரம் நோக்கி திரும்பினான். தருமரும் பீமனும் நகுல சகாதேவர்களும் படையினரும் அவரைப் பின் தொடர்ந்தார்கள்.

வழியெல்லாம் துருபதன் அவனுக்கு பல கதைகள் சொல்லி வந்தார். தன்னுடைய வம்சாவளியைப் பற்றி விவரித்து வந்தார்.

துரோணரும் தானும் எவ்வளவு நட்பாக இருந்தார்கள், குரு குலவாசம் எத்தனை அற்புதமானது என்றெல்லாம் விவரித்து வந்தார். துரோணரைப் போல நல்ல நண்பன் கிடைத்தபிறகும் அதை தான் சரியாக பயன்படுத்திக் கொள்ளாமல் விட்டது பற்றி மனம் வருந்தினார்.

''உனக்கு இணையாய் உன்னைவிட அதிகமாய் வில்வித்தை தெரிந்த நண்பர்கள் யாரேனும் இருப்பின் தயவு செய்து மண்டியிட்டு அவரிடமிருந்து வித்தையை கற்றுக் கொள். ஒருபொழுதும் அவர்களுக்கு துரோகம் செய்யாதே.

நான் துரோணரைத் தெரியாது என்று சொன்னது, துரோணரை அவமதித்தது மிகத்தவறான காரியம். என் வாழ்நாளில் அதைச் செய்திருக்கக்கூடாது. விதி செய்து விட்டது. இந்த செய்கைக்குப்பிறகு வேறு ஏதோ ஒரு நல்ல காரியம் இருக்கிறது என்று என் மனம் எண்ணு கிறது.

உன்னுடைய நட்பு இதனால் கிடைத்தது, துரோண ருடைய கோபத்தால் நான் கைதியானேன் என்பதைவிட உன்னுடைய அன்பால் நட்பால் திறமையால் நான் கைதியானேன் என்பதில் நான் சந்தோஷமாக இருக் கிறேன். உன்னோடு உட்கார்ந்து, பேசுவதே மிக அருமையாக இருக்கிறது. என்று மனம் நெகிழ்ந்து பேசினார்.

அஸ்தினாபுரததிற்கு அருகே வந்தது. ஆசனத்தை விட்டு ஒரு அடிமையைப் போலவே, எழுந்து நின்று கொண்டார்.

தேர் தூணில் தன்னைத்தானே பிணைத்துக்கொண் டார். காலிலுள்ள செருப்பைக் கழற்றிவிட்டார். மேலுள்ள அங்கவஸ்திரத்தை எடுத்து தெருவில் போட் டார். தன்னுடைய கிரீடத்தை எடுத்து தேரின் பின்பக்கம் வீசினார். ஒரு கைதியைப்போல நடந்துகொண்டார்.

துரோணருடைய வீட்டுவாசலில் தேர் நின்றது. கட்டவிழ்த்து கைவாகு கொடுத்து அர்ஜுனன் அவரைக் கீழே இறக்கினான். உள்ளே போய் ஆச்சாரியர் காலில் விழுந்து வணங்கினான்.

துரோணர் வெளியே வந்தார். துருபதா...என்று அன்பொழுகக் கூப்பிட்டார். துருபதன் தலை நிமிர்ந்தார். அவர் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. கைகூப்பி னார்.

''நான் தவறு செய்து விட்டேன் துரோணா. உன்னை அவமானப்படுத்தியதற்கு உண்டான தண்டனையை நான் அடைந்துவிட்டேன். நான் அன்று கர்வத்தோடு உன்னி டம் பேசியது பிசகு. வித்தைக்கு முன்பு எவனும் பணிந்து தான் ஆகவேண்டும். என் உயிரைக் காப்பாற்றியதோடு மட்டுமல்லாமல், நான் வித்தை கற்றுக் கொள்ளவும் உதவி யாக இருந்த உன்னை, என்னுடைய ராஜத்திமிரினால் புறக்கணித்தேன். அதற்கு நல்லபாடம் கற்பித்தாய்.

நான் உன் அடிமை. நீ என்ன சொன்னாலும் அதைச் செய்ய சித்தமாய் இருக்கிறேன்'' என்று கை கட்டி நின் றார்.

மேலாடையின்றி, கிரீடமின்றி, காலில் பாதரட்சை களின்றி ஒரு அடிமைப் போல் நிற்கின்ற துருபதனைப் பார்த்ததும் துரோணருக்கு மனம் நெகிழ்ந்து போயிற்று. ஓடிப்போய் அவரைத் தழுவிக் கொண்டார். அவருக்கு மேலாடை அணிவித்தார். பாதரட்சைகளைக் கொண்டு வரச் சொல்லி அவருக்கு போட்டு விடச் சொன்னார். அவருக்கு கைவாகு கொடுத்து உள்ளே அழைத்துப் போனார்.

பானகமும் உணவும் கொடுத்து அவரை இளைப் பாறச் சொன்னார்.

''குடிப்பிறப்பு முக்கியமில்லை. க்ஷத்திரியனாய்பிறந்து நல்ல வம்சத்தில் நீ வளர்ந்தது மிகப்பெரிய காரியமில்லை. அது கடவுளுடைய அருள். நல்லகுரு கிடைப்பது விதியினு டைய செய்கை. வித்தை மட்டும் உன்னுடைய முயற்சி. நல்ல வித்தையை தெளிவாகக் கற்றுக் கொள்வதற்கு

பணிவு வேண்டும். பணிவில்லாமல் எப்போதும் உன்னை அரசன் என்று நினைத்துக் கொண்டிருந்ததால் உன்னால் வித்தையும் கற்க முடியவில்லை. வேகமும் காட்ட முடியவில்லை.''

துருபதன், துரோணர் எது சொன்னாலும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். ''நீ ஏதும் சொல்ல விரும்புகிறாயா துருபதா'' என்று துரோணர் கேட்டார். துருபதன் தலை நிமிர்ந்தார். ''நீங்கள் இப்போது செய்தது ஒரு பழிவாங்கும் படலம். மனதுக்குள் தேக்கி வைத்த கோபத்தை உருவேற்றி, ஒரு பெரிய படையை அனுப்பி அதில் தலை சிறந்த மாணவனாய் ஒருவனை மேலெழுப்பி அவனுக்கு சகல அஸ்திர வித்தைகளும் சொல்லி கொடுத்து என்னை பழி தீர்ப்பதற்காகவே இப்படி ஒரு பெரும் திட்டம் தீட்டியிருக்கிறீர்கள். ஒரு அந்தணனுக்கு இத்தனை வஞ்சனை ஆகாது. ஒரு க்ஷத்ரியன் போல மனதுக்குள் கறுவிக்கொண்டு என்னை அழிக்க முற்பட்டீர்கள் இந்த வஞ்சனைதான் உங்களை அழிக்கப் போகிறது.

ஓர் அந்தணன் எவ்விதமாக வாழ வேண்டுமோ அப்படி நீங்கள் வாழவில்லை. ஒரு பசு மாட்டிற்காக நீங்கள் வந்த விதமும் பேசிய விதமும் கேட்ட கேள்வியும் இப்போதும் எனக்கு ஆபாசமாகத்தான் தோன்றுகிறது. என்னை மிகச்சிறந்த மாணவன் மூலம் அடித்து வீழ்த்தி விட்டீர்கள். உங்கள் திறமைக்கு என் வணக்கம். ஆனாலும் வஞ்சனை மிகுந்த அந்தணனை நான் தண்டிக்காமல் விடமாட்டேன். என் ராஜ்ஜியத்தில் பாதியை எப்போது வேண்டுமானாலும் நீங்கள் எடுத்துக் கொள்ளலாம். அது உங்களுக்காக காத்திருக்கும்'' என்று கை கூப்பினார். துரோணர் சிரித்தார், இவன் மூலமாகத்தான் தனக்கு மரணம் ஏற்படும் என்பதை புரிந்து கொண்டார். தான் எப்படி ஒருவனை ஏவிவிட்டு கைது செய்தோமோ அதைப்

போல இவன் ஒருவனை ஏவிவிட்டு கொலை செய்யப் போகிறான் என்பதைப் புரிந்து கொண்டார்.

எழுந்து கை கூப்பினார் ''மரணமே வருக. மரணத்தின் உருவே வணக்கம். நல்ல நண்பனே மரணமாகப் போகிறான் என்பது சந்தோஷமாக இருக்கிறது. நான் யாரைக் காப்பாற்றினேனோ அவனே என்னை கொலை செய்யப் போகிறான். என்பது வியப்பாகவும் வேடிக்கையாகவும் இருக்கிறது விதியின் கைப்பாவைகளாக நாம் விளங்குகின்றோம். இங்கு நடப்பவைகளை நம்மால் தடுக்க இயலாது. உன்னுடைய பாதி ராஜ்யம் எனக்கு தேவையில்லை. அதை நான் கைப்பற்றி கொள்ளப் போவதுமில்லை, உன்னை விடுவித்து விட்டேன். நீ போகலாம்'' என்று சொன்னார்.

துரோணர் உள்ளே திரும்பினார். அறைக்குள் புகுந்து தாழிட்டு மௌனமாய் அமர்ந்தார். துருபதன் தேரில் வைத்திருந்த கிரீடத்தை அணிந்து கொண்டார். அர்ஜுனன் அவனை கைத்தாங்கலாய் தன் வீட்டிற்கு அழைத்துப் போனார். மறுபடியும் தேரேற்றி அஸ்தினாபுரத்தின் எல்லைவரை விட்டுவந்து துருபதனுக்கு துணையாய் குதிரைப் படைகளையும் அழகிய தேரையும் பரிசாகக் கொடுத்தான்.

அர்ஜுனனைப் பிரிந்து நூறு கஜ தூரம் போன துருபதன் சட்டென்று நின்றார். தரையிறங்கினார். அருகிலிருந்த நதியில் குளித்து கரையேறி கைகூப்பி இறைவனை வேண்டினார்.

''உலகத்தின் அருமையான வாலிபனான அர்ஜுனனைக்கொண்டாடும்வண்ணம் அவனுக்கேற்றவிதமாய் ஒரு பெண்ணையும் என்னை வஞ்சித்த அகந்தை மிக்க அந்தணனான துரோணரை கொல்லுவதற்கு வலிவுமிக்க ஒரு பிள்ளையையும் யாகத்தின் மூலம் நான் பெற விரும்

புகிறேன். இறையே எங்கும் நிறைந்த சக்தியே எனக்கு இந்த யாகம் செய்வதற்கு அனுமதி தருவாயாக. அந்த யாகத்தின் பலனை அனுபவிக்கும் வண்ணம் என்னை ஆசிர்வதிப்பாயாக'' என்று வேண்டினார்.

தூரத்தே இடி இடித்தது. அந்தணர்கள் நிறைந்த பட்டிணத்திற்கு தன்னுடைய தேரை திசை திருப்பினார். அங்கு மிகச்சிறந்த முறையில் யாகங்கள் செய்வதற்கு உண்டான அந்தணர் யார் என்று விசாரித்தார். அண்ணன் தம்பிகளான இரண்டு பிராமணர்களை ஊரார் சுட்டிக்காட்ட அவர்கள் வீட்டு வாசலில் போய் பணிந்து நின்றார்.

''அர்ஜுனனை மணப்பதற்காக ஒரு மகளும், துரோணரைக் கொல்வதற்காக ஒரு மகனும் வேண்டும். அவர்களை யாகத்தீயிலிருந்து உற்பத்தி செய்ய வேண்டும். அப்படிப்பட்ட யாகத்தை நீங்கள் எனக்கு செய்து தரவேண்டும்'' என்று வீட்டிற்குள் இருந்த அந்தணரை காலில் விழுந்து வணங்கிக் கேட்டார்

அவர் யார் என்று விசாரித்த பிறகு அந்த அந்தணர் ''இதை செய்ய என்னால் ஆகாது. ஆனால் என்னுடைய தமையனார் இதை செய்வதற்கு தகுதியானவர். நேற்று தோப்பிலே ஒரு பழம் கிடந்தது. அந்த பழத்தை எடுத்து முகர்ந்து பார்த்து விட்டு வேண்டாம். இது யாருடைய பழமோ என்று வைத்து விட்டு போனார். எப்போது அதை தொட்டு முகர்ந்து பார்த்தாரோ அவருக்கு செல்வத்தின் மீது ஆசை இருக்கிறது என்று எனக்கு தெரிந்து விட்டது. நிறைய பொருள் செலவழித்து நிறைய தட்சிணை வாங்கி செய்ய வேண்டிய இந்த யாகத்தை அவரால்தான் செய்ய முடியும். ஆசையில்லாதவர்களால் செய்ய இயலாது. அவரை தலைமையேற்று யாகம் நடத்த சொல். அவருக்கு துணையாக நான் இருக்கிறேன்'' என்று சொன்னார்.

கீழே கிடந்த வேறொருவர் தோட்டத்து பழத்தை எடுத்து முகர்ந்து பார்த்த அந்த அந்தணர் யாகம் செய்ய ஒப்புக் கொண்டார் அரசனிடம் பெரும் செல்வம் வாங்கினார். அதற்குண்டான விஷயங்களை சேமித்து கொண்டு துருபதனின் தேசத்திற்கு வந்தார். நல்ல நாள் குறித்து அக்னி மூட்டினார். வாரக் கணக்கில் அக்னி வளர்க்கப்பட்டது. மரத்தால் செய்யப்பட்ட கோமுகத்திலே இடையறாத நெய் சொரியும்படி பார்த்துக் கொள்ளப்பட்டது.

இரண்டு பனை உயரத்திற்கு அக்னி கொழுந்துவிட்டு எரிந்தது. பல்வேறு விஷயங்கள் பலியிடப்பட்டன. நல்ல முகூர்த்தத்தில் அந்த அக்னியிலிருந்து கருப்பாய் ஓர் இளம் பெண் தோன்றினாள்.

நீண்ட கேசமும், கூரிய மூக்கும், பெரிய கண்களும், சிவந்த உதடுகளும் மதர்த்த மார்புகளும் சிறிய இடையும் அழகிய தொடைகளும் கொண்ட வனப்போடு விளங்கினாள். ஆனால் கருப்பாக இருந்தாள். கருப்பாக இருந்ததால் அவளை கிருஷ்ணை என்று அழைத்தார்கள்.

அவள் தோன்றிய பிறகு மிகுந்த கோபத்துடனும் சிவந்த விழிகளுடனும் வலிவுமிக்க தொடைகளுடனும் முறுக்கேறிய புஜங்களுடனும் முறம் போன்ற முதுகுடனும் பெரிய காதுகளுடனும் நீண்ட விரல்களுடனும் வில்லோடும் கத்தியோடும் அம்பராத் துணியோடும் ஒரு இளைஞன் தோன்றினான். அவனுக்கு திஷ்டத்துயமன் என்று பெயர் வைக்கப்பட்டது.

யாகத்தில் பங்கேற்ற எல்லா அந்தணர்களையும் மிகுந்த பொருள் கொடுத்து திருப்தி செய்து, கிருஷ்ணையையும் திஷ்டத்துயமனையையும் அரசன் அரண்மனைக்குள் அழைத்துப்போனார்.

'எந்த வயதில் குழந்தைகள் வேண்டும் என்று விரும்புகிறோமோ அந்த வயது குழந்தைகள்தான் யாகத்தில் பிறப்பார்கள். அவர்கள் நல்ல வளர்ச்சியோடும் புத்திக் கூர்மையோடும் மற்ற எவரையும்விட சிறப்பான ஞானத்தோடும் இருப்பார்கள்.

துருபதன் தன்னுடைய லட்சியம் நிறைவேறிவிட்டதாய் சந்தோஷமானார். பாண்டவர்களுக்காக காத்திருந்தார்.

பாண்டவர்கள் அரக்குமாளிகையில் மாட்டிக்கொண்டு இறந்துபோனார்கள் என்றதும் தவித்தான். உள்ளூர மனது அப்படி நடக்கவில்லை என்பதை தெரிந்து கொண்டது. பல்வேறு விதமான ஒற்றர்களை அனுப்பினார்.

''விதுரரை ஒரு கிழவர் தொடர்பு கொண்டு என்ன நடந்தது என்று கேட்டுக்கொண்டு பாண்டவர்கள் சாகவில்லை என்பதை துருபதனிடம் தெரிவித்தார். பல ஒற்றர்களும் இதையே உறுதி செய்தார்கள்.

பாண்டவர்கள் தன் தேசத்திற்கு வரக்கூடும் என்று அவர் நினைத்தார். எனவே உடனடியாக கிருஷ்ணை என்கிற திரௌபதிக்கு சுயம்வரம் என்று அறிவித்தார். எல்லாபக்கமும் ஆள் அனுப்பினார். யாரும் இதில் கலந்து கொள்ளலாம் என்று குறிப்பு சொன்னார்.

பாண்டவர்கள் அரசர்கள்போல் அல்லாமல் மாறு வேடத்தில் வரக்கூடும் என்பதால், திரும்பதிரும்ப இந்த வார்த்தைகளை தூதுவர்களை விட்டு பொதுமக்களிடம் பரப்பினார்.

எனவே, திரௌபதியின் சுயம்வரம் பார்க்க, மிகப் பெரிய கும்பல் திரண்டது.

துருபதன் காத்திருந்தார். எந்த வடிவில் எந்த வழியாய் எவர் துணையோடு பாண்டவர்கள் தன்னுடைய

நகருக்குள் நுழைவார்கள் என்று ஆவலாய் கவனித்திருந்தார். சிறிய சந்தேகம் இருந்தாலும்கூட தன் வீரர்களை வந்து தன்னிடம் சொல்லச் சொன்னார், தன் மகனையும் சேனாதிபதிகளையும் உடனே அனுப்பி அப்படி வந்த தகவல் பாண்டவர்களைப் பற்றியதுதானா என்று விசாரித்து அறியச் சொன்னார்.

பாண்டவர்கள் ஒரு அரசனுக்குக்கீழ் போர்வீரர்களாக அல்லது குதிரைச் சேவகர்களாக வருவார்கள் என்று கணக்குப்போட்டிருந்தார். எனவே அவனுடைய ஒற்றர்கள் அரசனையும் அரசனைச்சுற்றியுள்ள வேலையாட்களையும் கண்காணித்து வந்தார்கள். ஆனால் அந்தணர்களைப்போல் வேடம் பூண்டு வெள்ளை உடையோடு, பூணூலோடு கும்பலாய் வேதகோஷம் செய்தபடி, பஞ்ச பாண்டவர்கள் துருபதனிடம் அரண்மனைக்குள் புகுந்து விட்டார்கள்.

அவர்கள் புகுந்து ஆசனங்களில் அமரும் வரை, அங்குள்ள யாருக்கும் அவர்கள் வந்திருப்பது தெரியவில்லை. சூழ்ந்திருந்த பிராமணர்கள், இப்படி வலிமை மிக்க பிராமணர்களை நான் பார்த்ததே இல்லையே... இவர்கள் எங்கிருந்து வருகிறார்கள் என்று பேசிக்கொண்டார்கள். அவர்களை விசாரிப்பதற்கு பயந்தார்கள்.

அரசர்களுக்கு நடுவே தேடி அவர்கள் கிடைக்காமல், சோர்வுற்ற துருபதனின் கண்களுக்கு அந்தணர்களுக்கு நடுவே, மதயானைபோல் வீற்றிருக்கும் ஐந்து இளைஞர்களைக் கண்டதும் சந்தேகம் படர்ந்தது. ஒற்றர்களுக்கு கண்காட்டினார்.

ஒற்றர்கள் சட்டென்று சுதாரித்துக்கொண்டு அந்தணருக்கு நடுவே ஊடுருவினார்கள். அவர்களும் அந்தணர்கள்போல் உடுத்திக்கொண்டு, பஞ்சபாண்டவர்களுக்குப் பின்னே உட்கார்ந்து கொண்டார்கள், யார் இவர்கள்

என்று அந்தணர்களை விசாரித்தார்கள். தெரியவில்லை என்று அந்தணர்கள் உதடு பிதுக்கியபோது, விசாரியுங்களேன் என்று தூண்டினார்கள்.

விசாரிக்க முற்பட்டபோது சரியாக பதில்வரவில்லை. சரியாக பதில்வராததால் சந்தேகம் வேகமாக வளர்ந்தது. அரசனிடம் தங்கள் சந்தேகத்தை தெரிவித்தார்கள்.

துருபதன் தன் மகனுக்கு ஆள் அனுப்பினார். மகன் உற்றுப்பார்த்தான். ''எனக்கு மிகுந்த சந்தேகமாக இருக்கிறது. அவர்களாகத்தான் இருக்கும் என்று தோன்றுகிறது'' என்று சந்தோஷம் பொங்கக் கூறினான்.

அவனை அதிகம் பேசவிடாமல் துருபதன் அடக்கினார். பிறகு பேசிக்கொள்ளலாம் சுயம்வரத்தைத்துவங்கு என்றார்.

சுயம்வரம் துவக்கப்பட்டது.

''வனப்பும் புத்தியும் ராஜகம்பீரமும் கொண்ட என் தங்கை கிருஷ்ணையை வலுவுள்ளோர்கள் இந்த வில் தூக்கி, எடுத்து நாணேற்றி, எதிரே வைக்கப்பட்டிருக்கும் ஐந்து பாணங்களால், சுழலும் சக்கரத்திற்கு அப்பால் இருக்கின்ற. மச்ச உருவத்தை அடித்து வீழ்த்த வேண்டும் அப்படி வீழ்த்து பவருக்கு என் தங்கை உரிமையாவாள்.

இதோ...என் தங்கை கிருஷ்ணை. இவளை உங்களுக்கு அறிமுகப்படுத்தினேன் என்று வலப்பக்கம் கை நீட்டினான்.

கிருஷ்ணை, அரண்மனைக் கூடத்திற்குள் நுழைந்தாள். சபையை வணங்கினாள். மன்னர்கள் அவள் பேரழகு கண்டு தவித்துப் போனார்கள். அவள் இளமையைக்கண்டு சொக்கிப்போனார்கள், அவள் கண்கள் கூர்மையாய் தம்மை ஊடுருவுவதைப்பார்த்து லேசாய்

பயம் கொண்டார்கள் கிருஷ்ணை தன் மனதுக்குள் நினைத்துக் கொண்டிருந்த அர்ஜுனனை சபை முழுவதும் தேடினாள். பிறகு தன் திருமணத்தை கடவுளிடம் ஒப்படைத்து விட்டு கண்களைத் தாழ்த்திக் கொண்டாள்.

அவளுக்கு அரசர்கள் அறிமுகப்படுத்தப்பட்டார்கள். அவள் மாலையோடு தன் இருப்பிடத்திற்குப் போய் அமர்ந்தாள்.

மன்னர்கள் ஒவ்வொருவராக வந்து, வில்லில் நாணேற்ற முயற்சித்து. அது முடியாமல் வில் தூக்கி அடிக்க முகத்திலும் தோளிலும் மார்பிலும் அடிவாங்கி விலகி நடந்தார்கள்,

எல்லா மன்னர்களும் கர்ணன் உட்பட நாணேற்ற முடியாமல் போவது கண்டு மக்கள் துக்கப்பட்டார்கள்,

துருபதன் சைகை செய்ய திரௌபதியின் சகோதரனான திருஷ்டத்யுமன் சபையை நோக்க. ''அரசர்கள் தோற்றுப் போனால் என்ன, எந்தக் குலத்தவராய் இருந்தாலும் பரவாயில்லை. இந்த வில்லில் நாணேற்றி, இந்த மச்ச உருவை அடிக்கிறவன் எவனாயினும் அவனுக்கு திருமணம் செய்து கொடுப்பேன் இது சத்தியம்'' என்று கையடித்தான்.

பொதுமக்கள் மௌனமாக இருந்தார்கள்.

அந்தணர் சபையிலிருந்து தருமர் தலையாட்ட அர்ஜுனன் எழுந்து நின்றான். சுயம்வரத்திற்கு வந்திருந்த கிருஷ்ண பெருமானும் பலராமனும் அர்ஜுனனைக் கவனித்தார்கள். தங்களுக்குள் ஒருவரையொருவர் பார்த்து புன்னகை செய்து கொண்டார்கள்.

விநாடி நேரத்தில் நாணேற்றி, அம்பு தொடுத்து, சக்கரத்தின் வழியே மிக பலமாய் மீன் உருவை அடிக்க,

மீன் உரு சுக்கல் சுக்கலாய் எகிறி விழுந்தது. சக்கரம் அடிபட்டு கோணலாயிற்று.

சபையினர் கைத்தட்டினார்கள். அந்தணர்கள் ஆரவாரித்தார்கள் தங்களிலிருந்து ஒருவர் வில்வித்தை அறிந்து, போட்டியில் ஜெயித்து, ஒரு க்ஷத்ரிய ராஜகுமாரியை கரம் பிடித்தான் என்று தெரிந்தபோது தாங்களே ஜெயித்தது போல், நடனமாடினார்கள். அர்ஜுனனை தலைக்குமேல் வைத்துக் கொண்டாடினார்கள். தருமனைக் கட்டிக்கொண்டார்கள். பீமனை முதுகில் அறைந்தார்கள். நகுல சகாதேவர்களை மேலே தூக்கி பந்தாடினார்கள்.

மிகப் பெரிய குதூகலம் அங்கே கட்டுக்கடங்காமல் நடந்தேறியது. அந்தணர்களின் ஆட்டம் பார்த்து க்ஷத்ரியர்கள் கோபம் கொண்டார்கள்.

துருபதன் அந்த அந்தணனுக்கு தன் பெண்ணை தாரை வார்ப்பது கண்டு துருபதனை சண்டைக்கு அழைத்தார்கள். அவமானப்படுத்திப் பேசினார்கள்.

துருபதன் சகலத்திற்கும் தயாராக இருந்தார். அவர்கள் பஞ்சபாண்டவர்கள் என்று அருகே போய் நன்கு தெரிந்து கொண்டார். ''உங்களுக்கு திருமணம் செய்து கொடுத்ததற்காக என்னை க்ஷத்ரியர்கள் தண்டிக்க வருகிறார்கள். எல்லோரையும் ஒரே நேரத்தில் என்னால் எதிர்க்க முடியாது. நான் என்ன செய்யட்டும் என்று பயந்தவன் போல், கை பிசைந்தார்.

தருமர் அவர் தோளில் கைவைத்து ''கவலைபடாதீர்கள். என்னுடைய சகோதரர்கள் உங்களுக்கு துணை இருப்பார்கள்'' என்று சொன்னான்.

அந்த அரண்மனைக்கு வெளியே கலகம் போலும் ஒரு சிறிய போர் நடந்தது. அரசர்களை பீமனும் அர்ஜுன

னும் அடித்துத் துரத்தினார்கள். நகுல சகாதேவர்கள் துணை நின்றார்கள்.

தருமருக்கு அருகே திரௌபதி, தலை குனிந்து பேரழகியாய் நின்றாள்.

சகல மன்னர்களும் அடிபட்டு சோர்வான பிறகு, அர்ஜுனன் துருபதனிடம் விடைபெற்று, திரௌபதியை தன்னுடைய இடத்திற்கு கூட்டிக் கொண்டு போனான்.

அவர்கள் மண்பாண்டம் செய்பவன் வீட்டில் வசித்தார்கள். அந்த வீட்டு வாசலில் நின்று, ''அம்மா...நான் ஒன்று கொண்டு வந்திருக்கிறேன் என்று தர்மபுத்திரர் கை கூப்பி பணிவாகச் சொன்னார்.

''அப்படியா...சகோதரர்கள் அனைவரும் பங்கு போட்டு எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று எதைச் சொல்கிறோம் என்று தெரியாமல் குந்தி வாய்விட்டுச் சொன்னாள்.

''சரி அம்மா. அவ்விதமே செய்கிறோம்'' என்று தரும புத்திரர், பதிலுக்கு வாக்குத் தந்தார்.

குந்தி வெளியே வந்து, இதுவரை சொல்லப்பட்டது ஒரு பெண்ணை, அதுவும் க்ஷத்ரியகுல இளவரசியை என்று தெரிந்து திகைத்தாள். மறுபடியும் வம்பு வருமே என்று கவலைப்பட்டாள். ஊர் உலகம் என்ன சொல்லுமோ என்று வேதனைப்பட்டாள். நாலுபேரை கலந்தாலோசித்து சொல்வதே நல்லது. என் வார்த்தை முக்கியமில்லை என்று வற்புறுத்தினாள்.

''நீ என்ன சொன்னாலும் அதற்கு கட்டுப்பட்டு நடப்போம். இதை மட்டும் மறுத்தால், எங்களுடைய பலம் குறையும். எனவே, நீ சொன்னது போல, திரௌபதியை நாங்கள் ஐவரும் பங்கிட்டுக் கொள்கிறோம்'' என்று சொன்னார்கள்.

திரௌபதிக்குப் பின்னால் ஒற்றர்கள் அனுப்பிய துருபதன், இந்த விஷயம் கேள்விபட்டு தலையில் அடித்துக் கொண்டார். கோபமானார். ''இது என்ன கூத்து, ஒரு ஆண் பல பெண்களை மணக்கலாம். ஒரு பெண் பல ஆண்களை மணக்கலாமா இது வழி முறைக்கு விரோதமல்லவா சாஸ்திரத்திற்கு எதிரானதல்லவா...'' என்று சீறினார்.

தன் குருமார்களோடு கலந்து ஆலோசித்தார்.

அவர்கள் தருமபுத்திரரையே நேரடியாக கேட்டுவிடுவது என்று முடிவு செய்தார்கள். அவர்களை யாரென்று விசாரித்து அரண்மனைக்கு அழைத்து வரும்படி தூண்டினார்கள்.

அரசன் தன் மகனை அனுப்பினார். திருஷ்டத்யும்ன் நேரே போய், தருமரிடம் கைகூப்பி, தாங்கள் யார். தங்களுடைய சகோதரர்கள் யார். நீங்கள் எந்த குலம். ஏன் அந்தணராக நீங்கள் வேடம் தரித்திருக்கிறீர்கள். நெருப்பு எப்படி இருந்தாலும், அதன் சுபாவம் கண்டு, அதை நாம் எளிதில் இனம் கண்டு கொள்வது போல, நீங்கள் அரசகுமாரர்கள் என்று நான் இனம் கண்டு கொண்டுள்ளேன். உங்கள் கைகளில் ஆயுதங்கள் பிடித்து தழும்புகள் இருக்கின்றன. தோட்களில் வில் சுமந்த தழும்பு இருக்கிறது. உங்கள் நடைகள் உறுதியாக இருக்கின்றன. பார்வையில் கோபமும் அதிகாரமும் இருக்கின்றன. ஒரு அந்தணனுக்கு ஒரு காலமும் அதிகாரமான பார்வை வராது.

போர் செய்யும்போது, உங்கள் தொண்டையிலிருந்து வந்த சிம்ம கர்ஜனையைக் கேட்டேன். பல யுத்தங்கள் செய்தவருக்குத்தான் இப்படி கர்ஜிக்க முடியுமே தவிர வேத கோஷம் செய்யும் அந்தணர் இப்படி கர்ஜிப்பது இயலாத காரியம். எனவே, உண்மையில் நீங்கள் யார் என்பதை தெரியப்படுத்தும்படி, பணிவாகக் கேட்கிறேன்.

என் தங்கையை உங்களுக்கு திருமணம் செய்து கொடுத்ததால், அவள் வளமான வாழ்க்கையை மனதில் கொண்டு, கவலையோடு இதை விசாரிக்கிறேன். என் கவலையைப் புரிந்து கொண்டு என் கேள்விக்கு உண்மையான பதில் தரவேண்டும் என்று திருஷ்டத்யுமன் வேண்டிக் கொண்டான்.

தருமபுத்திரர் அவனை தழுவிக் கொண்டார். அவனோடு பிரியமாகப் பேசினார்.

''நாங்கள் பாண்டவர்கள். இவள் என் தாய் குந்தி. இதோ...இது பீமன். இது அர்ஜுனன். இது நகுலன். இவன் சகாதேவன் என்று அறிமுகப்படுத்தினார்,

இதைக் கேட்ட திருஷ்டத்யுமன் சந்தோஷமானான். அவர்களை தனித்தனியாக தழுவிக் கொண்டான். ஒவ்வொருவரின் பாதங்களிலும் மரியாதையாகப் பணிந்தான் குந்தியின் கால்களில் நெற்றியை வைத்து, ஆசீர்வதிக்கும்படி வேண்டினான். தங்கையின் கரம் பற்றி அவள் கரங்களை, கண்களில் ஒற்றிக்கொண்டான். எவ்வளவு பெரிய அதிர்ஷ்டசாலி நீ என்று கொண்டாடினான்.

திரௌபதி நாணினாள். அர்ஜுனனை பிரியத்துடன் பார்த்தாள். ஒவ்வொருவரையும் தனித்தனியே நமஸ்கரித்து, தன் மரியாதையை செலுத்தினாள். மாமியிடம் அருகே போய் நின்று கை கோர்த்துக் கொண்டாள்.

தேர் ஏறி துருபதனிடம் போனார்கள். துருபதனுக்கு திருஷ்ட்தயுமன் சமாதானம் சொன்னான்.

ஒரு பெண் ஐந்து பேரை மணப்பது இதுவரை நடக்கவில்லை என்ற காரணத்தால் அல்லவா நீங்கள் கோபமானீர்கள். வெறுப்படைகிறீர்கள். இது சரியோ என்று பயப்படுகிறீர்கள். இதற்கு முன் மாதிரி இருந்தால் ஏற்றுக் கொள்வீர்கள் அல்லவா...

உலகத்தில் எதுவும் புதிதல்ல. கலியுகத்திற்கு முன்பு பல யுகங்கள் நடந்து விட்டன. அந்த பல யுகங்களில் பல்வேறு திருமணங்கள் பல்வேறு விதமாய் நடைபெற்றிருக்கின்றன. இதே விதமாய் ஜடிலை என்பவள் சப்த ரிஷிகளுக்கு மனைவியாக இருந்தாள். வார்ஷி என்பவள் ப்ரசேதஸீ என்ற ஒரே பெயருடைய பத்து சகோதரர்களுடன் சேர்ந்து இருந்தாள்.

ஆகவே, இதுவே முதல் முறை என்கிற விஷயம் அடிபட்டுப் போய்விட்டது. இதற்கு மேலும் ஒரு நல்ல காரணம் உங்களுக்குத் தேவை என்று நீங்கள் கருதினால். வியாசமுனிவரிடம் கேளுங்கள்'' என்று சொன்னான்.

வியாச முனிவருக்கு ஆள் அனுப்பி, வரவழைத்து துருபதன் இது முறைதானா என்று கேட்டான்.

''ஐந்து புலன்கள் கொண்ட ஒற்றுமையுள்ள, ஐந்து சகோதரர்களால்தான் உலகத்தின் மிகக் கொடூரமான விஷயங்களைக் கொண்ட ஒரு பெரிய கும்பலை அழித்து ஒழிக்க முடியும். சகோதரர்களுக்குள் எந்த பிணக்கும் இல்லாமல் இருக்கலாம். ஆனால், திருமணம் செய்து கொண்ட பெண்களுக்கு நடுவே ஏற்படும் பிணக்குகளால் அந்த சகோதரர்களுக்கும் சண்டை மூண்டு விடலாம். எனவே, இந்த சகோதரர்கள் கடைசிவரைக்கும் ஒற்றுமையாக இருக்கும் பொருட்டு, இவர்கள் மனைவியையும் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொள்கிறார்கள்.

ஒரே பெண்ணை இந்த ஐந்து பேரும் திருமணம் செய்து கொள்வதால், இவர்களுடைய நட்பும் உறவும் பலப்படும். விட்டுக் கொடுக்கிற சுபாவம் இவர்களுக்கு எளிதில் வரும், எனவே போர் காலத்திலும் இவர்கள் பிரியாமல் ஒரு முகமாக இருந்து, எதிரிகளை துவம்சம் செய்வார்கள். அதற்காகவே இவர்கள் பிறந்திருக்கிறார்கள் அவர்களை பல மூட்ட திரௌபதி இருக்கிறாள்.

எனவே சற்றும் கவலைப்படாதே இது தர்மமா அதர்மமா என்று கேட்காதே. ஒரு மிகப்பெரிய யுக காரியத்தை முடிப்பதற்கு இவர்கள் பிறந்திருக்கிறார்கள் என்றால், இங்கே தர்மம் வேறுபடுகிறது'' என்று சமாதானம் சொன்னார்.

தன் மகள் கிருஷ்ணையை மணந்தது பஞ்சபாண்டவர்கள் என்று ஊர் முழுவதும் செய்தி சொல்லிய துருபதன் அந்தத் திருமணத்தை விமரிசையாகக் கொண்டாடினான். ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவர் கிருஷ்ணையை மணந்து கொண்டார்கள்.

துருபதனின் தேசம் முழுவதும் ஏன் பரத கண்டம் முழுவதும் இந்தத் திருமணம் பற்றியே பேச்சாக இருந்தது.

வியாசர் சொன்னது எனக்கு விளங்கவில்லை தருமபுத்திரரே...மிகப்பெரிய யுத்தம் ஒன்று வரப்போகிறது யுகமாறுதல் போல, பல பழையது கழிந்து புதியது புறப்படப்போகிறது. யுத்தம் ஒன்று தவிர்க்க முடியாதபடி வரப்போகிறது என்று சொன்னார்.

கௌரவர்களுக்கும் உங்களுக்கும் பகைமை இருப்பது வாஸ்தவம். இதில் மற்ற அரசர்கள் சம்பந்தப்படுவார்கள் என்று நினைக்கிறீர்களா. பூபாளம் குலையும் அள

விற்கு இது யுத்தமாக மாறும் என்று கருதுகிறீர்களா'' என்று பவ்யமாகக் கேட்டார்.

''வெகு நிச்சயமாய் அப்படித்தான் மாறப்போகிறது. இது கௌரவர்கள் பாண்டவர்கள் சண்டை அல்ல நல்லவர்களுக்கும் கெட்டவர்களுக்கும் சண்டை. நீங்கள் யார் பக்கம் என்பதை இப்போதே தெளிவாக முடிவு செய்துவிடுங்கள், நீங்கள் முடிவு செய்வதின் பொருட்டுத்தான் உங்கள் வாழ்க்கை அமையப் போகிறது,

க்ஷத்ரியகுலம் தேவையில்லாமல் பெருத்துப்போய் விட்டது, பெருத்துப் போனதாலேயே வன்முறையில் அதிகம் கொக்கரிக்கிறது.

வன்முறையில் அதிகம் கொக்கரிப்பதாலேயே இந்த வம்சம் களையெடுக்கப்படப் போகிறது, எந்த ஒரு மதம் எந்த ஒரு இனம் அதிகம் அலட்டிக் கொள்கிறதோ, தான்தான் பெரியவன் என்று வெளியே சொல்லிக் கொள்கிறதோ, தன்னால் முடியும் என்று பீற்றிக் கொள்கிறதோ, தான் வலிவு மிக்கவன் என்று தொடைத்தட்டிக் காட்டுகிறதோ அது உடனே எந்த ஈவு இரக்கமும் இல்லாமல் அழிக்கப்படும். அதனை அழிக்கும் நேரம் வந்துவிட்டது.

இது பங்காளிச் சண்டையல்ல, நல்லதுக்கும் கெட்டதுக்கும் உண்டான சண்டை.''

''சரி நீங்கள் சொல்வதை ஏற்றுக்கொள்கிறேன்' நல்லதுக்கும் கெட்டதுக்கும் உண்டான போரில், நீங்கள் நல்லவர்கள் என்றே வைத்துக் கொள்வோம். நான் உங்கள்

பக்கம் என்றே நினைத்துக் கொள்வோம். அப்படியானால், நமக்கு எதிர்ப்பக்கம் யார் இருக்கிறார்கள். நீங்கள் தெய்வமாக போற்றுகின்ற உங்கள் குருநாதர் துரோணர், உங்கள் குருகுலகிருபர், உங்களுடைய பாட்டனார் பீஷ்மர், நீங்கள் மிகவும் நேசிக்கிற விதுரர் போன்றவர்கள் இருக்கிறார்களே...இவர்களை எதிர்த்தா நீங்கள் போட்டியிடுவீர்கள்.

ஆயிரம் இருக்கட்டும் சண்டை என்று வருகிறபோது, தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் அல்லவா... உங்களால் துரியோதனனை அடித்துக்கொல்ல முடியுமா. துச்சாதனனை இரண்டாகப் பிளக்க முடியுமா. எப்படி ஈவு இரக்கமின்றி இந்தக் கொலையைச் செய்வீர்கள். கடைசி நேரத்தில் நீங்கள் பின்வாங்கிவிட்டால், எங்கள் கதி என்னாவது.

நல்லதற்கும் கெட்டதற்கும் போர் நடக்காமலே போகும் வாய்ப்பு அதிகம் இருப்பதுபோல், எனக்குத் தோன்றுகிறது'' என்று துருபதன் சொன்னான்.

தருமபுத்திரர் சிரித்தார். ''இதை நான் உரக்கச் சொல்வது இப்போது ஆகாது. ஆயினும், உங்கள் காதோடு சொல்கிறேன். யுத்தம் என்று வந்துவிட்டால், எனக்கும் என் சகோதரர்களுக்கும் எதிரிதான் முக்கியமே தவிர, எதிரியார் என்பது முக்கியமல்ல. துரோணராக இருந்தாலும் சரி, விதுரராக இருந்தாலும் சரி, பீஷ்மராக இருந்தாலும் சரி எங்களுடைய பாணம் அவர்களுடைய உடம்பை சல்லடையாகத் துளைத்துவிடும். இவர்களது மரணபரியந்தமும், அவர்களை அடித்து வீழ்த்துவது தவிர எங்களுக்கு வேறு வழியில்லை.

இவை எங்கள் குருமார்களால் எங்களுக்கு சொல்லிக் கொடுக்கப்பட்டது.

''துரோணருக்கு எதிராக நீங்கள் இருப்பீர்கள் என்றால், நான் உங்கள் பக்கம். துருபதன் எழுந்து நின்று தொடை தட்டி பேசினான். அவனது சேனாதிபதிகள் ஆரவாரித்தார்கள்.

அந்த ஆரவாரத்தில் பஞ்சபாண்டவர்களும் மகிழ்ச்சியோடு பங்கு பெற்றார்கள்.

''நான் வேண்டிக்கொண்டு வேள்வி செய்தது வீண் போகவில்லை. என்னுடைய மகள் யாரைச் சேர வேண்டுமோ அவர்களிடம் சேர்ந்துவிட்டாள். என்னுடைய மகன் எதை முடிக்க வேண்டுமோ அதை நிச்சயம் செய்துமுடிப்பான். இந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஒருவேளை துரோணருடைய மரணத்தை உயிருடன் இருந்து பார்க்காவிட்டாலும், சூட்சுமரூபத்தில் இருந்து துரோணரின் மரணத்தை சந்தோஷமாகப் பார்ப்பேன்.

தான் அந்தணன். வில்வித்தையில் சிறந்தவன், தன்னை ஜெயிக்க எவராலும் முடியாது. எவர் கையாலும் தனக்கு மரணமில்லை, தன்னை வெட்டி வீழ்த்தி விட்டு ஜெயித்துவிட இங்கு எவனும் பிறக்கவில்லை என்றெல்லாம் கொக்கரித்துக் கொண்டிருக்கின்ற அந்தக் கிழவனின் உடல் சரிவதை. நான் ஆவலோடு எங்கிருந்தாவது வேடிக்கை பார்ப்பேன்.

உங்களுக்கு துரோணரைக் கொல்ல வலுவிருந்தாலும் தயவுசெய்து நீங்கள் எவரும் அவரைக் கொல்ல வேண்டாம். அந்த வாய்ப்பை என் மகனுக்குக் கொடுங்கள் என்று வேண்டிக் கொள்கிறேன்'' என்று கைகூப்பினான்.

பாண்டவர்கள் சிரித்தார்கள். நினைத்தது போலவே மிகப்பெரிய யுத்தம் வந்தது. பாண்டவர்களை பல்வேறு விதமாய் சோதனைக்குள்ளாக்கிய துரியோதனன், அவனையும் அறியாமல் அவர்கள் பலம் பெருக்க காரணமானான்.

பொறுமைதான் வீரம் எனப்புரிந்து கொண்ட பாண்டவர்கள் தங்களுடைய அமைதியின்மூலம் ஆன்மபலம் பெருக்கி, ஆன்மபலத்தின் மூலம் மனோபலம் பெருக்கி புத்திபலம் பெருக்கி. உடல்பலமும் வளர்த்தார்கள்.

சூதாடித் தோற்று அவமானம் அடைய ஊர் சிரிக்க, நகரம் விட்டு வெளியேறினார்கள்.

துருபதன் வருத்தமானான் திருஷ்டத்யுமன் அவரைத் தேற்றினான். ''என்ன நடக்க வேண்டுமோ அவை அழகாக நடந்து கொண்டிருக்கிறது இன்னவிதமாய் நடக்கிறது என்பது நமக்குத் தெரியாவிட்டாலும், இதற்காகத்தான் நடக்கிறது என்பது நமக்குத் தெரிந்திருக்கிறது.

பாண்டவர்கள் கோபமடைய வேண்டும். உண்மையான ரௌத்திரம் வரவேண்டும். ஒருவனுக்கு ஆத்திரமும் ரௌத்திரமும் எப்போது அதிகரிக்கும் தன் மனைவியின் புடவையைப் பிடித்து சபையில் இழுத்ததனால் உண்டாகும் ரௌத்திரத்தை பாண்டவர்கள் ஒரு பேழையில் போட்டு விழுங்கிவைத்திருக்கிறார்கள். அது உள்ளுக்குள்ளே கனன்று கனன்று கனன்று மிகப்பெரிதாகும் ஒவ்வொரு பயிற்சியின் போதும் ஒவ்வொரு தபஸ்ஸின் போதும் ஒவ்வொரு நேர்த்திக்கடனின் போதும் இந்தப்

பழி வாங்கலுக்காகவே அவர்கள் அதைச் செய்வார்கள். வில்லிலிருந்து கிளம்பும் ஒவ்வொரு அம்பும் கௌரவர்கள் மார்பை துளைப்பதற்காகத்தான் என்ற ஆத்திரத்தில் அர்ஜுனன் இருக்கும்போது வெற்றியைத் தவிர வேறு என்ன வரும். எந்த மரத்தைப் பார்த்தாலும் துரியோதனன் மார்புதான் தெரிகிறது என்று கதையால் அடித்து நகரும் போது பீமனுக்கு வேறு என்ன ஞாபகம் வரும். அர்ஜுனனையும் பீமனையும் உற்சாகபடுத்த மற்ற மூன்று சகோதரர்களும் இருக்கிறார்கள். இடைவிடாது இந்த ஆத்திரத்திற்கான எல்லா கேள்விகளுக்கும் சகாதேவன் பதில் அளிப்பான். நகுலன் தூண்டி விடுவான். தருமபுத்திரர் அதன் நியாயத்தை எடுத்துச் சொல்வார்.

அர்ஜுனனும் பீமனும் முற்றிலும் கௌரவர்கள் அழிக்கப்பட வேண்டியவர்கள் என்று உறுதி பூணுவார்கள்.

எல்லாம் போக திரௌபதி அவிழ்ந்த தன் கூந்தலை அர்ஜுனனுக்கு முன்பே காட்டி நீ ஆண் மகன்தானா என்று கோபமூட்டுவாள், பீமன் அருகே வரும் போது குழந்தை போல தேம்பி அழுவாள். என்னை மான பங்கப் படுத்தும்போது இந்தக் கைகள் "இரண்டும் கட்டிக் கொண்டு இருந்தனவே...இந்தக் கைகள் எந்த ஆயுதமும் எடுக்காமல் வெறுமே கிடந்தனவே...என்று வெறுப் பேற்றுவாள்.

பீமன் கோபம் கொண்டு கர்ஜிப்பான். அந்த கர்ஜ

னையிலிருந்து வரும் சங்கநாதம் துரியோதனனுடைய தூக்கத்தைக் கலைக்கும்.

அப்பா...நீங்கள் யாகத்தில் உருவாக்கிய, உங்கள் மகள் பாரத தேசத்தின் தலையெழுத்தை நிர்ணயிக்க வனம் புறப்பட்டிருக்கிறாள். எனவே வருந்த வேண்டாம் அவர்களுக்குப் பின்னே தொடர்ந்து சௌகரியங்கள் செய்து கொடுக்க வேண்டாம், வனத்தை விநாடியில் நகரமாக மாற்ற நம்மால் முடியும் ஆனால் அவர்கள் வனம் போவது சுகத்திற்காக அல்ல அவர்கள் உடம்பு வலுப்பெறட்டும், அவர்கள் புத்தியில் ஆக்ரோஷமும் அதிகரிக்கட்டும் அவர்கள் இறைவனை நோக்கி தன் நிலைமையைச் சொல்லி தன்னைப்போல் பாதிக்கப்பட்ட எல்லோருக்குமாக சேர்த்து பழிவாங்கட்டும்.

துருபத அரசே...துரியோதனன் என்பது முக்கிய மல்ல க்ஷத்ரிய அரசர்கள் வீரர்கள் உடல் வலுவை அதிகப் படுத்திக் கொண்டு இந்தப் பரதகண்டத்து சாதாரண மக்களை துன்புறுத்த ஆரம்பித்து விட்டார். வீரத்தை எங்கு காண்பிப்பது என்று தெரியாமல் அப்பாவி மக்கள் மீது செலுத்துகிறார்கள் அட்டகாசம் செய்கிறார்கள். எந்த ஒரு இனம்,பெருத்துப்போனாலும், ஜனத்தொகையில் அதிகமானாலும் அது தன் அழிவைதானே தேடிக் கொள்கிறது என்று அர்த்தம்.

கொழுத்த நண்டு வளையில் தங்காது. துரியோதனன் மீண்டும் மீண்டும் !போருக்கு அழைப்பான். வெவ்வேறு

விதமாக பாண்டவர்களை இம்சிக்க முயற்சி செய்வான். இதனால், அவன் அழியப் போகிறான்.

இது கடவுள் சித்தம். எனவே திரௌபதியின் பாது காப்பிற்கும், பஞ்சபாண்டவர்களுடைய சௌக்கியத் திற்கும் நாம் இடைவிடாது கடவுளைப் பிரார்த்திப் போம். நம் ஊர் மக்கள் அனைவரையும் இதன் பொருட்டே தினமும் பூஜை செய்யச் சொல்வோம்.

தகப்பனாருக்கு திருஷ்டத்யுமன் அன்பாக ஆதர வான வார்த்தைகள் பேசினான்.

துருபதன் சமாதானம் அடைந்தான். அவனும் அவன் மக்களும் அவர்கள் உறவினர்களான பஞ்சபாண்டவர்க ளுக்கும். அவர்கள் வீட்டுப் பெண்ணான திரௌபதிக்கும் நலமாய் இருக்க பூஜை செய்தார்கள்.

''ஆனால். என் கவலை துரோணரைப் பற்றி. துரோணரைக் கொல்கிற வலிமை எனக்கு இருக்கிறதா என்று தெரியவில்லை. துரோணரின் யுத்தத்தை கேள்விப் படுகிறபொழுதெல்லாம் எனக்கு உள்ளுக்குள் ஒரு நடுக் கம் ஏற்படுகிறது'' என்று திருஷ்டத்யுமன் சொன்னான்.

''மகனே...நீ பிறந்ததே அதற்காக...எனவே. கவலை கொள்ளாதே. இறை விரும்பி எனக்குக் கொடுத்த வரம் நீ. நீ கொல்ல முடியாவிட்டால் வேறு எவராலும் கொல்ல முடியாது. துரோணருடைய மரணம் ஒரு வித மாக நிறைவேறும் என்றுதான் நினைக்கிறேன்.

என்னால் துரோணருடைய மரணத்தை நேரடியாக பார்க்க முடியாவிட்டாலும், நிச்சயம் உனக்கு அருகே

இருந்து, உன்னை கவனித்தவாறு, அவர் மரணத்தையும் கவனிப்பேன். அப்பொழுதுதான் என் ஆன்மா சாந்தி அடையும்.

பதினாலாம் நாள் போரில் துரியோதனனால் நிந்திக் கப்பட்ட துரோணர் கடும் கோபத்தோடு போர்க்களத் தில் இறங்கினார். தன்னுடைய வில்லை வளைத்து, சரமாரியாக அம்பெய்து, எதிரேயுள்ள காலாட்படை களை துன்புறுத்தினார். வீரர்கள் அலற அலற, அவர் கள் உடம்பு முழுவதும் அம்பு தைக்குமாறு பாணங்கள் விட்டார்.

காலாட்படை வீரர்களின் கதறல்கள் பின்னால் நின்ற அரசர்களுக்கு எட்டின. அவர்கள் துடித்தார்கள்.

காலாட்படையைத் தாண்டி குதிரைப் படையை துரோணர் சிதறடித்தார். எல்லா வியூகங்களின் எல்லா பக்கங்களையும் உடைத்தார். தலைமை சேனாதிபதி களை அடித்துத் துவைத்தார். யானைகளை புறமிட்டு ஓடச் செய்தார். எங்கு அவர் தேர் நகர்ந்தாலும் அந்த இடம் ஒரு வெற்றிடம் போலக் காட்சியளித்தது.

வீரர்கள் அவர் வேகம் கண்டு சிதறி ஓடினார். ஓடிய வர்களையும் அவர் விடாது துரத்தி அடித்தார்.

மிகச் சாதாரணமாக விராடனையும் துருபதனையும் துரோணர் தனித்தனியே தன் அம்பினால் அடித்துக் கொன்றார்.

துரோணருடைய உக்கிரத்தை போர் தந்திரத்தை அவர் போர் செய்யும் வேகத்தை, அர்ஜுனன் வியப் போடு பார்த்தான். அப்போது கண்ணன் அவனுக்கு அரு கில் நின்று கொண்டான். ''வில்லோடு இருக்கும் துரோ ணரை, இந்திரனாலும் ஜெயிக்க முடியாது. அவர் ஆயு தத்தை கீழே போட்டால் ஒழிய, அவரைக் கொல்வது கடினம். எனவே, இந்த இடத்தில் வீரம் பலிதமாகாது. அஸ்வத்தாமன் இறந்து போனான் என்று துரோணரிடம் சொல்ல வேண்டும். இதை தருமபுத்திரர் சொன்னால், நிச்சயமாக துரோணர் நம்புவார். எனவே, தருமபுத் திரரை வைத்து, அஸ்வத்தாமன் இறந்தான் என்று சொல்ல வேண்டும்.'' எனவே வற்புறுத்தினான்.

அர்ஜுனன் தயங்கினான். போரிட்டுப் பார்ப்போமே என்று வேண்டினான்.

''இது அழிவுக்குத்தான் வழி. துரோணரைப் போரிட்டு ஜெயிக்க முடியாது என்று தெளிவாகத்தெரிந்து கொண்டு பேசுகிறேன். உன்னைக் காட்டிலும் வலுவுள் ளவர் துரோணர். அவரை எதிர்க்க உன்னால் முடியாது எனவே, தந்திரம் செய்வதே நல்லது'' என்று திரும்பி, பீமனிடம் இந்த விஷயத்தைச் சொல்ல பீமன் புரிந்து கொண்டு.

மாளவ நாட்டு மன்னனான, இந்திரவர்மனிடம் இருந்த, அஸ்வத்தாமா என்ற பெயருடைய பட்டத்து யானையை அருகே அழைத்து, ஓங்கி தன் கதையால்

அதன் மத்தகத்தில் அடித்து அதைக் கொன்றான். அஸ்வத் தாமன் இறந்து போனான் என்று உரக்கக் கத்தினான்.

துரோணர் யுத்தம் செய்வதை உடனே நிறுத்தினார். யார் பேசியது என்று அதட்டினார்.

மறுபடியும் பீமன். அஸ்வத்தாமன் இறந்து போனான். என்று உரக்கக் கத்தினான். பீமனை உற் றுப்பார்த்த துரோணர், அவன் சொல்வது பொய் என்ப தாய் உறுதி செய்து கொண்டு மறுபடியும் அம்புகள் தொடுத்து, படைகள் மீது சரமாரியாக விட்டார்.

ஆனால் மனம் திடுக்கிட்டு கலங்கியது, மறுபடி போரை நிறுத்தி, தருமருக்கு அருகே தேரைச் செலுத்தி னான். ''அஸ்வத்தாமன் இறந்ததாய் பீமன் சொல் கிறானே...இது உண்மைதானா...'' என்று கேட்டார்.

அவர் மௌனமாக இருந்தார்.

''ஏன் மௌனமாக இருக்கிறாய் எந்த நேரத்திலும் உண்மை பேசுபவன் தானே நீ. அதனால் உன்னைக் கேட் கிறேன். சொல், அஸ்வத்தாமன் இறந்துவிட்டானா. என் மகனை கொன்றுவிட்டார்களா'' என்று கதறினார்.

''அஸ்வத்தாமன் இறந்தான். அது யானை'' என்று ஒரு மாதிரி வாக்கியத்தை தருமர் சொல்ல, வாக்கியத்தின் நடுவே, வெற்றிச்சங்கை கிருஷ்ணர் முழங்கினார். 'அஸ்வத் தாமன் இறந்தான்' என்று மட்டும் துரோணர் காதில் விழுந்தது. யானை என்பது சங்கொலியில் மறைந்த

போயிற்று. எல்லோரும் கண்மூடி நிஷ்டையில் அமர்ந்தார்கள். மனதை ஒருமுகப் படுத்தினார். எதன் பொருட்டு ஆச்சாரியார் ஆனாரோ, எதன் பொருட்டு அஸ்திரத்தை தானம் வாங்கினாரோ, எதன் பொருட்டு அதை எல்லோருக்கும் கற்றுக் கொடுத்தாரோ, எதன் பொருட்டு அதை எல்லோருக்கும் கற்றுக் கொடுத்தாரோ, எதன் பொருட்டு அர்ஜுனனை தயார் செய்தாரோ...அவை எல்லாம் முடிந்துவிட்டது. யாருக்காக இத்தனை ஆட்டங்கள் நடந்தனவோ, அவன் இறந்துவிட்டான். இனி, வாழ்வது எதற்கு என்று மனதை ஒரு முகப் படுத்தினார்.

உயிரை மேலே எடுத்தார். தன்னுடைய சிரசின் வழியே வெளியேற்றினார். அவர் ஆன்ம ஜோதி வெளியே கிளம்பி, பிரபஞ்சத்தில் கலந்தது.

திருஷ்டத்யுமன் உயிரற்ற அவர் உடல் மீது, பாய்ந்தான். வாளால், அவர் தலையைக் கொய்தான். அவர் சிரசு ஒரு பக்கமாகவும் உடம்பு ஒரு பக்கமாகவும் விழுந்தது.

இறந்து போனவரை கொன்றாயே என்று பஞ்ச பாண்டவரும் திருஷ்டத்யுமனை சீறிக்கடிந்தார்கள். மிக எளிமையாக வாழ்ந்த அந்த வாழ்க்கை, நண்பனை உயிராகக் கொண்ட அந்த வாழ்க்கை, மகனை நேசித்த அந்த வாழ்க்கை, மனைவியின் கட்டளைக்கு கீழ்படிந்த அந்த வாழ்க்கை, வித்தையை எல்லோருக்கும் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்று ஆசைப்பட்ட அந்த வாழ்க்கை பல்வேறு விஷயங்களால் நிராயுதபாணியாய் இருக்கும்படி செய்துவிட்டது. தன் உயிரை தானே மூச்சடக்கி, வெளியே அனுப்புகிற விதமாய் போக்க நேரிட்டது.

மிக அருமையான நண்பர்கள் எதிரிகளாகி, ஒருவரையொருவர் கொன்று கொண்டார்கள். ஒருவர் அழிவிற்கு ஒருவர் காரணமாக இருந்தார்கள். ஒருவர் கௌரவத்தை ஒருவர் குலைக்கத் திட்டமிட்டார்கள்.

வாழ்க்கை முழுவதும் இப்படி எதிரியின் கௌரவத்தை குலைப்பதற்காகவே நண்பனாய் இருந்து எதிரியாய் மாறியவனை அழிப்பதற்காகவே செலவழித்தார்கள்.

வாழ்க்கை விசித்திரமானது என்பது, துருபதனுக்கும் துரோணருக்கும் உள்ள உறவை வைத்து, நாம் புரிந்து கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

(முற்றும்)